# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
7 - MAR 1964
MADRAS




ஸ்ரீ அதிகார நந்தி தேவர், தம் தேவியுடன்

மாலை 6] சோபகிருது - மாசி - மார்ச்சு 1964 [மணி 6

ரதி

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நடைபெற்ற பாவைமா நாட்டில், நம் அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. M.S. சாரங்கபாணி முதலியார், B.A.B.L. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து, உரை நிகழ்த்துதல்.

---

## பொருள் அடக்கம்


1. திருவெழு கூற்றிருக்கை
2. ஸ்ரீ ஆண்டாளின் சிறப்பு
3. சிவஞான சித்தியார்
4. கீதாஸாரம்
5. திருநாவுக்கரசர் தேவாரம்
6. திருமுக்கூடற் கல்வெட்டு
7. சிவஞான போதம்
8. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
9. கண்ணன் : சொற்பொருள் ஆராய்ச்சி
10. பரமேசுவர மங்கலம் கல்வெட்டுகள்
11. திருக்கோயில் வழிபாட்டுமுறை
12. உத்தரமேரூர்க் கல்வெட்டுச் செய்திகள்
13. திருமகளும் திருவருளும்
14. வீரசைவ நிலையங்கள்
15. செய்திகள்


---


ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று


## சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது மாசி - மார்ச் 1964 [மணி 6


## திருவெழு கூற்றிருக்கை

### முன்னுரை

திருவெழு கூற்றிருக்கை என்பது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிய தேவாரத் திருப்பதிகங்களுள் ஒன்று. இஃது இணைக்குறள் ஆசிரியப்பாவால் இயன்ற ஒரே பாடல். ஆயினும் மரபுபற்றிப் பதிகம் என வழங்கப்படும்.

"பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகச் சொல்லுதல் தானே"

என்னும் நூற்பாவிற் கேற்ப, இதன்கண் சிவபிரானின் பலவகைப் பண்புகளும் சிறப்புகளும் இனிது தொகுக்கப் பெற்று, முன்னிலைப் படுத்திப் போற்றப்பட்டுள்ளன.

சீர்காழி குறித்துப் பாடப் பெற்றுள்ள இத் திருப்பதிகத்தில்,

பிரமபுரம் வேணுபுரம்
புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம்
பூந்தராய் சிவபுரம்முன்
வருபுறவம் சண்பைநகர்
வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம்
பன்னிரண்டு திருப்பெயர்த்தால்

எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுமாறு போல, சீர்காழிக்குரிய பன்னிரண்டு திருப்பெயர்களும் முறையே வரிசையாகச் சிறந்தினி தெடுத்து மொழியப் பட்டுள்ளன.

சித்திரகவி வகைகளைச் சேர்ந்த திருவெழு கூற்றிருக்கை என்னும் இவ்வழகிய இனிய திருப்பதிகம், எண்ணலங்காரம் அமையும்படி, ஒன்றுமுதல் ஏழு ஈருகப் படிமுறையே ஏறியும் இறங்கியும் மாறிமாறி இனிது பாடப் பெற்றிருத்தலினால், "ஏழு+கூறு+இருக்கை" எனப் பெயர் பெறுவதாயிற்று. இங்ஙனமே பதினொன்றும் திருமுறையில் நக்கீரதேவநாயனாரும், நாலாயிர த்திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும், திருவெழு கூற்றிருக்கைச் செய்யுட்கள் பாடியிருக்கின்றனர். யாப்பருங்கலவிருத்தி, மாறன் அலங்காரம் முதலிய நூல்களில் இச் சித்திரகவிக்குரிய இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

திருஞான சம்பந்தர் அருளிச் செய்து வந்த தேவாரத் திருப்பதிகங்களை யெல்லாம் அவ்வப் பொழுதே குறித்து வைத்துத் தொகுத்துக் கொண்டு, அவற்றை நாடோறும் அவர்தம் தந்தையார் ஆகிய சிவபாத இருதயர் பக்தியுடன்

ஓதிப் பாராயணம் செய்து வந்தார். திருப்பதிகங்கள் நாள்தோறும் பெருகிக் கொண்டு வந்தமையின், அவற்றை முற்றிலும் ஓதி மகிழ முடியாமையாற் சிவபாத இருதயர் ஆகிய தம் தந்தையார் வருந்துதலைக் கண்ட திருஞான சம்பந்தப் பெருமான், இத் திருவெழுகூற்றிருக்கைத் திருப்பதிகத்தினைத் திருவாய் மலர்ந்தருளி, இஃதொன்றையே விதிப்படி ஓதினால் ஏனையெல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன் கிடைக்கும் என்று அருளிச் செய்தனர் எனப் பெரியோர்கள் கூறுவர். "எந்தைக்கு எழுகூற்றிருக்கை" (2174) எனவரும் பெரியபுராணப் பாடற் பகுதி, இக் குறிப்பினை உட்கொண்டு நிற்பதாக அறிஞர்கள் கருதுவர்.

சித்திர கவி வகையினைச் சேர்ந்த இத் தனித் திருப்பாடற்கண்ணும், ஏனைய எல்லாத் திருப்பதிகங்களினும் தாம் வழக்கமாக விடாமற் கூறிவரும் இராவணனை அடர்த்தமை—அயன் மால் அருள் பெற்றமை—சமண பௌத்தர் நிலை—பதிகப்பயன் (திருக்கடைக்காப்பு)ஆகிய செய்திகளைத் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டருள்கின்றார். ஏகபாதம் மாலைமாற்று கோமூத்திரி கூடசதுக்கம் என்னும் வேறுபிற சித்திரகவி வகைகளையும், திருஞான சம்பந்தர் அருளிச் செய்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்து
ஈரியல் பாய்ஒரு விண்முதற் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை ;

இருவரோ டொருவ னாகி நின்றனை ;
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை ; நாட்டம்மூன் றாகக் கோட்டினை ;
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை ;

ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை ; காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை ;
ஒருதனு இருகால் வளைய வாங்கி

முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை ;
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ; ஒருங்கிய மனத்தோடு

இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து, ஆறங்க முதல்எழுத் தோதி
வரன்முறை பயின்று எழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை ;

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை ;
இகலி யமைந்துணர் புகலி அமர்ந்தனை ;

பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை ;
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை ; தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை ;
ஒருபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை ;
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை ; புறவம் புரிந்தனை ;
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை ; சண்பை அமர்ந்தனை ;
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை ;
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை;
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும் மூன்று காலமும்
தோன்ற நின்றனை ;
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும் ;
அனைய தன்மையை ஆதலின், நின்னை
நினைய வல்லவர் இல்லை, நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

## குறிப்புரைகள் :

1. மான்—சத்தி ; ஆங்காரம்—எழுச்சி ; 4. நாட்டம்—கண் ; 9. இரு (ம்) நதி—பெரிய கங்கையாறு ; 12 நால்வாய்—தொங்குகின்ற வாய், துதிக்கை ; 23 எழுவான் தனை வளர்க்கும்—எழுந்து பொழியும் மழையினைப் பெய்விக்கும் ; 25 அறுபதம்—வண்டுகள் ; 26 இகலிய—பகைத்த ; மைந்து—வலிமை ; 28 பாணி-நீர் ; 29 இரு நிதி—பெரிய செல்வம், சங்கநிதி பதும நிதிகள் ; 34 முந்நீர்—கடல்; ஆற்றுநீர் ஊற்று நீர் மழைநீர் ஆகிய மூன்றும் நிறைந்தது ; 38 எச்சன் (எக்ஞன்)—வேள்விகளின் தலைவன்; 40 இருமையின் ஒருமை—அத்துவிதம், பொருளால் இரண்டாகியும் கலப்பினுல் ஒன்றுக விளங்கும் தன்மை ; 42 ஒருமை—ஒப்புயர்வற்று விளங்கும் பரசிவநிலை ; 44 கழுமல முதுபதிக் கவுணியன்—மலங் கழுவப்பெற்று, அநாதி நித்திய சிவத்தன்மையை அடைந்த, கவுணியர் கோத்திரத்தில் தோன்றிய திருஞான சம்பந்தர்; கட்டுரை—பதிகம்; 45 கழுமல முதுபதி—திருக்கழுமலம் என்னும் பழைய சிறந்த தலத்தில் உள்ள ; கவுணியன் (கம்+உணியன்)—பிரம கபாலத்தில் உண்ணும் சிவபிரான் ; அறியும்—அறிந்து அருள்புரிவார் ; 46 அனைய—அப்படிப்பட்ட ; 47 இல்லை—பிறவி இல்லையாகும்.

## பதப் பொழிப்புரை :

1. ஓர் உரு ஆயினை : (எல்லாத் தத்துவங்களையும் கடந்து நிற்கும் பரசிவம் ஆகிய தாங்கள், உயிர்கள் உய்யும் வண்ணம் ஐந்தொழில்களையும் செய்தற் பொருட்டு நும் விருப்பத்தினுலேயே) ஒரு திருமேனியை எடுத்துக் கொண்டீர்.

(2) மான் ஆங்காரத்து ஈர் இயல்பாய் : சத்தியை எழுச்சியுறச் செய்து, சத்தி சிவம் என்னும் இரண்டு நிலைகளாய்;

(3) ஒரு விண் முதற் பூதலம் : ஒப்பற்ற ஆகாயம் முதல் ஈறுக உள்ள ஐம்பெரும் பூதங்களையும் ; ஒன்றிய இரு சுடர் : பொருந்திய ஞாயிறு திங்கள் என்னும் இரண்டு பெரிய ஒளிகளையும்; உம்பர்கள் பிறவும் : வானுலகத்தில் வாழும் தேவர்களையும், மற்றும் பிற உயிர்களையும் பொருள்களையும் எல்லாம் ;

(4) படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை : தோற்றுவித்தற்குப் பிரமன், காத்தற்குத் திருமால், அழித்தற்கு உருத்திரன் என்னும் மூன்று மூர்த்திகளாகவும் நிற்கின்றீர்;

(5) இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை : பிரம விட்டுணுக்களைத் தங்கள் திருமேனியின் வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் தோற்றுவித்தும் ஒடுக்கிக் கொண்டும், அவ் இருவரோடு ஏகபாதர் என்னும் திருவுருவம் கொண்டு திகழ்கின்றீர்.

(6-7) ஓர் ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும்: ஒப்பற்ற கல்லால மரத்தின் நிழலில் தங்களின் இரண்டு திருவடிகளையும் ; முப்பொழுது ஏத்திய: காலை நண்பகல் மாலை என்னும் மூன்று காலங்களினும் துதித்து வணங்கிய ; நால்வர்க்கு : சனகர் சனந்தனர் சனற்குமாரர் சனந்தனர் என்னும் நான்கு முனிவர்களுக்கும்; ஒளிநெறி காட்டினை : சிவஞான நெறியை உணர்த்தியருளினீர்.

(8) நாட்டம் மூன்றாகக் கோட்டினை : ஞாயிறு திங்கள் தீ என்னும் சுடர்கள் மூன்றையும் மூன்று திருக்கண்களாகக் கொண்டு, உலகம் இன்புற இருளை அகற்றி யருளினீர். நாட்டம்-கண்.

(9) இருநதி அரவமோடு ஒருமதி சூடினை: பெரிய கங்கை யாற்றையும் பாம்பினையும் ஒப்பற்ற பிறைச் சந்திரனையும் தலையிற் சூடியருளினீர்.

(10-11) ஒருதாள் ஈர் அயில் மூ இலைச் சூலம் : ஓர் அடிப்பகுதியினையும் ஈருகின்ற கூர்மையையும் மூன்று இலைபோன்ற அமைப்பையும் உடைய சூலத்தையும்; நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம் ஏந்தினை : நான்கு கால்களையுடைய மான் கன்றினையும், ஐந்து தலைகளையுடைய பெரிய பாம்பினையும், திருக்கைகளில் ஏற்று ஏந்திக் கொண்டிருக்கின்றீர்.

(12-13) காய்ந்த நால்வாய் : கோபம் மிக்க தொங்குகின்ற வாயையும்; மும்மதத்து: கன்னமதம் கபோலமதம் பீசமதம் என்னும் மூன்று மதங்களையும் ; இருகோட்டு: இரண்டு தந்தங்களையும் உடைய ; ஒரு கரி ஈடு அழித்து உரித்தனை: கஜாசுரன் என்னும் அவுணன் ஆகிய ஒரு யானையினுடைய வலிமையை அழியும்படி செய்து, அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு அருளினீர்.

(14-16) ஒருதனு இருகால் வளைய வாங்கி: ஒப்பற்ற மேருமலையாகிய வில்லை, இரண்டு முனைகளும் வளையும்படி வளைத்து; முப்புரத்தோடு தலத்துற அவுணரை: முப்புரங்களையும் அவற்றில் வாழ்ந்த அவுணர்களையும்; நானிலம் அஞ்சக் கொன்று அறுத்தனை : பெரிய பூமியிலுள்ள யாவரும் அஞ்சுமாறு கொன்று ஒருங்கே ஒழித்தருளினீர்.

(17-18) ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்து புலன்களையும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் உட்கருவிகள் நான்கினையும்; முக்குணம் இருவளி : சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்களையும், பிராணன் அபானன் என்னும் இரண்டு வாயுக்களையும்; ஒருங்கிய வானோர் : ஒடுக்கி ஒருமைப்பட்ட உள்ளமுடைய தேவர்கள் ; ஏத்த நின்றனை: போற்றுமாறு எழுந்தருளி யிருக்கின்றீர்.

(19-21) ஒருங்கிய மனத்தோடு: ஒருமைப்பட்ட உள்ளத்துடன்; இருபிறப்பு ஓர்ந்து: உலகில் தோன்றியதனால் உண்டான பிறப்பும், உபநயனச் சடங்கினால் ஏற்பட்ட பிறப்பும் ஆகிய இரண்டினையும் ஆராய்ந்து;முப்பொழுது குறை முடித்து: காலை நண்பகல் மாலை என்னும் மூன்று வேளைகளிலும் செபம் தர்ப்பணம் அனுட்டானம் ஓமம் என்னும் நியமங்களைச் செய்து நிறைவேற்றி; நான்மறை ஓதி: நான்கு வேதங்களையும் பாராயணம் செய்து; ஐவகை வேள்வி அமைத்து : வேதம் ஓதுதலாகிய பிரமயாகம், ஓமம் வளர்த்தல் ஆகிய தேவயாகம், நீர்க்கடன் ஆற்றுதல் ஆகிய பிதிர்யாகம், விருந்தோம்புதல் ஆகிய மானுடயாகம், பலியீதல் ஆகிய பூதயாகம் (சிவபூசை குருபூசை மாகேசுரபூசை அந்தணர் பூசை அதிதி பூசை) என்னும் ஐந்து

வகையான வேள்விகளையும் செய்து நிறை வேற்றி;

(22-24) **ஆறங்கம், முதலெழுத்து ஓதி:** மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம் என்னும் வேத அங்கங்கள் ஆறினையும், வேதம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் முதலாக உள்ள பிரணவத்தையும் உச்சரித்து; **வரன் முறை பயின்று:** வேள்விகளையும் இயமநியமங்களையும் தொன்றுதொட்டு வரும் முறையின்படி இடைவிடாது செய்து; **எழுவான் தனை வளர்க்கும்:** எழுந்து பெய்கின்ற மழையினைக் காலந் தவறாது பெய்விக்கின்ற; **பிரமபுரம் பேணினை:** திருப் பிரமபுரத்தினை விரும்பி எழுந்தருளியிருக்கின்றீர்.

(25) **அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை:** ஆறுகால்களையுடைய வண்டுகள் பண்பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த வேணுபுரத்தை விரும்பியிருக்கின்றீர்.

(26) **இகலிய மைந்து உணர் புகலி அமர்ந்தனை:** (தேவர்கள் தம்மைப்) பகைத்த சூரபதுமனின் வலியை உணர்ந்து அடைக்கலம் புகுந்த புகலியில் அமர்ந்திருக்கின்றீர்.

(27) **பொங்கும் நாற்கடல்சூழ் வெங்குரு விளங்கினை:** பொங்கிப் பெருகிவரும் பிரளய வெள்ளம் ஆகிய நான்கு கடல்களும் சூழ்ந்து கொண்ட வெங்குருவில் விளங்குகின்றீர்.

(28-29) **பாணி மூவுலகும் புதையமேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனை:** ஊழி நீர் வெள்ளத்தில் மூன்று உலகங்களும் அமிழ்ந்து போகவும், தான் மட்டும் அமிழாமல் தோணியின் வடிவங்கொண்டு மிதந்த தோணிபுரத்தில் உறைகின்றீர்.

(30) **தொலையா இருநிதி வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை:** ஒரு காலத்தும் அழியாத பெருஞ் செல்வம் பொருந்திய பூந்தராயில் ஏய்ந்து பொருந்தி வாழ்கின்றீர்.

(31) **ஒருபுரம் என்று உணர் சிரபுரத்து உறைந்தனை:** ஒப்பற்ற தலம் என்று உணர்ந்து யாவரும் போற்றுகின்ற சிரபுரத்தில் தங்கி உறைந்து வருகின்றீர்.

(32-33) **ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன் விறல் கெடுத்து அருளினை:** ஒப்புயர்வற்ற திருக்கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற மிக்க வலிமையுடைய இராவணனின் வெற்றியைக் கெடுத்துப் பின்னர் அருள் புரிந்தீர்.

(33) **புறவம் புரிந்தனை:** திருப்புறவம் என்னும் இத்தலத்தில் விருப்பம் கொண்டு வீற்றிருக்கின்றீர்.

(34-35) **முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை:** திருப்பாற் கடலில் அறிதுயில் புரிகின்ற திருமாலும் பிரமனும் அறிந்துகொள்ள இயலாத பெருமையுடன் திகழ்கின்றீர்.

(35) **சண்பை அமர்ந்தனை:** திருச்சண்பை என்னும் இந்தத் தலத்தில் விருப்பம் கொண்டு அமர்ந்திருக்கின்றீர்.

(36-37) **ஐயுறும் அமணரும்:** கடவுளுண்மையில் ஐய உணர்வினையுடைய சமணர்களும்; **அறுவகைத் தேரரும்:** முடிவில் யாவும் அற்றொழிந்து சூனியம் ஆகிவிடும் என்னும் புத்தர்களும்; **ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை:** எக்காலத்தும் உணர்ந்து கொள்ளாத நிலையில் சீர்காழியில் நிலையாக வாழ்ந்து வருகின்றீர்.

**எச்சன்:** வேள்வித் தலைவனையும்; **ஏழ் இசையோன்:** குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழிசைகளின் வடிவினனையும்; **கொச்சையை மெச்சினை:** கொச்சை வயத்தை வியந்து இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

(39-41) **ஆறுபதமும்:** பிரத்தி பிரத்தியாகாரம் துல்லியம் துல்லியாதீதம் வித்தை அவித்தை என்னும் ஆறுபதங்களும்; **ஐந்து அமர் கல்வியும்:** ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் விரையம் என்கிற ஐந்து விதமான கல்வியும்; **முதல் மறை நான்கும்** - முதன்மையான இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும்; **மூன்று காலமும்:** இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் காலங்கள் மூன்றும்; **தோன்ற நின்றனை:** தோன்றுதற்கு ஏதுவாக நின்றீர்.

(42) **இருமையின் ஒருமையும்:** உயிர்களோடு கலந்து அத்துவிதம் ஆகியும்; **ஒருமையின் பெருமையும்:** எல்லாம் தன்னுள் அடக்கிய எல்லையற்ற ஒரு பரம்பொருள் ஆகிய சிவம் ஆகியும் திகழ்கின்றீர்.

(43-45) **மறுவிலா மறையோர்:** குற்றம் இல்லாத வேதங்களை யுடைய அந்தணர் குலத்தில் தோன்றி; **கழுமலம்:** மலம் கழுவப் பெற்ற நிலையில்; **முதுபதி:** அநாதி நித்திய சிவத் தன்மை யடைந்த; **கவுணியன்:** கவுணியகோத்திரத்திலே தோன்றி யருளிய திருஞான சம்

பந்தன் கூறிய; கட்டுரை: திருவெழுகூற்றிருக்கை என்னும் இந்தத் திருப்பதிகத்தை;

(46) கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்: கழுமலம் என்னும் பழம்பெருந் தலத்தில் எழுந்தருளியுள்ள, தலைக்கலத்தில் உண்கின்ற இறைவன் உவந்து அருள்புரிவர்.

(46-47) அனைய தன்மையை ஆதலின்: அத்தகைய சிறந்த பண்பை யுடையவராகையால்; நின்னை: தேவரீரை; நினைய வல்லவர்: நினைந்து தியானிக்க வல்லவர்களுக்கு; நீள்நிலத்து இல்லை: நீண்ட பெரிய இவ்வுலகத்திற் பிறவி இல்லையாகும்.

## பெயர்க் காரணங்கள்

இத் திருப்பதிகத்தின் கண் சுட்டப் பெற்ற பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருப்பெயர்கள் ஏற்பட்டமைக்குரிய காரணங்கள்வருமாறு:

1. பிரமபுரம்: பிரம தேவர் பூசித்துப் பேறு பெற்ற தலம். "ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து ஏத்த அருள் செய்த பீடுடைய பிரமாபுரம்" என முதல் திருமுறையின் முதற்பாடலில் வருதல் காண்க.

2. வேணுபுரம்: சூரபதுமனுக்கு அஞ்சிய தேவேந்திரன் இங்குப் போந்து வழிபட்ட பொழுது, சிவபெருமான் வேணு (மூங்கில்) வடிவில் முளைத்து அருள் புரிந்த தலம். தேவேந்திரன் தன் இடுக்கண்கள் நீங்க வேணுவழியாய் இத்தலத்தை அடைந்து பூசித்தனன் என்றும் கூறுவர்.

3. புகலி: சூரபதுமனால் இடுக்கண் எய்திய தேவர்கள் சிவபிரானைப் புகல் அடைந்து (அடைக்கலம் புகுந்து) வணங்கிய தலம்,

4. வெங்குரு: அசுரர்களின் குருவாகிய சுக்கிரன் வழிபட்டுத் தேவகுருவாகிய பிருகற்பதிக்குச் சமத்துவம் பெற்றதலம். எமதருமன் தன்னைக் கொடியவன் என்று உலகம் இகழாதவாறு இறைவனை வழிபட்டுய்ந்த தலம்.

5. தோணிபுரம்: ஊழி முடிவிற் சிவபெருமான் உமாதேவியாரோடு பிரணவம் ஆகிய தோணியில் வீற்றிருப்பத் தான் அழியாமல், நிலைபேறு எய்தித் திகழும் தலம்.

6. பூந்தராய்: சங்கநிதி பதுமநிதி என்னும் இருநிதிகளும் பூவும் தாருமாய்ப் பூசித்து அழியா வரம் பெற்ற தலம்.

7. சிரபுரம்: சயிங்கேயன் என்னும் அசுரன் வேற்று வடிவங்கொண்டு மறைந்து வந்து தேவர்களுடன் இருந்து அமிர்தம் உண்ணும் நிலையில் சூரியனாற் கண்டுபிடிக்கப் பெற்று விட்டுணுவால் வெட்டுண்ட தலம்.

8. புறவம்: சிபிச் சக்கரவர்த்தியைச் சோதித்தற்கு அக்கினிதேவன் புறாவடிவம் கொண்டு போந்து, புறவின் எடையளவுக்குத் தன் தசையை அரிந்து கொடுத்தும் அது போதாமை கண்டு அவனே துலையேறித் தன் வள்ளன்மையினைப் புலப்படுத்திய நிலையில், புறாவடிவம் கொண்ட அக்கினிதேவன் அப்பாவம் கழியுமாறு வழிபட்டுய்ந்த தலம்.

9. சண்பை: கபில முனிவர் சாபத்தின்படி தம் குலத்தினன் வயிற்றிற் பிறந்த இருப்புலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய துகள் சண்பைப் புல்லாக முளைத்திருந்ததை ஆயுதமாகக் கொண்டு போர்செய்து மடிந்த யாதவர் கொலைப்பழி, தன்னை யணுகா வண்ணம் கண்ணன் பூசித்த தலம்.

10. சீர்காழி: காளிதன் என்னும் நாகம் வணங்கிய தலம்; நடனத்தில் தோற்ற காளியம்மையார் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்,

11. கொச்சைவயம்: பராசரர் தாம் மச்சகந்தியை ஆற்றிடையிற் புணர்ந்து அடைந்த தீ நாற்றமும், பழியும் போகும் வண்ணம் இறைஞ்சியுய்ந்த தலம்.

12. கழுமலம்: உரோமச முனிவர் இறைவனை வழுத்தி ஞானோபதேசம் பெற்றுத் தம்முடைய மலங்களைக் கழுவப் பெற்ற தலம்.

## முடிவுரை:

இத்தகைய பல சிறப்புகள் பொருந்திய இத் திருவெழு கூற்றிருக்கைப் பதிகத்தினை, நாம் நாடோறும் அன்புடன் ஓதிச் சம்பந்தரின் பதிகங்கள் அனைத்தையுமே ஓதிய பயனைப் பெற்று, உய்ய முயலுவோமாக!

—ஆசிரியர்,

# ஸ்ரீ ஆண்டாளின் சிறப்பு

## முன்னுரை :

பாவைப் பாட்டு நூல்களுள், திருப்பாவையின் சிறப்பு மிகவும் பெரிது. எம்பெருமானாரை "ஒருரு திருப்பாவைக்கு அர்த்தம் அருளிச் செய்ய வேணும்" என்ன, அவர் "திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது" என்று அருளிச் செய்தார் எனத் திருப்பாவை ஈராயிரப்படி அவதாரிகை கூறுகின்றது.

அத்துணை அருமை பெருமை வாய்ந்த இத் திருப்பாவைக்குப் பூர்வாசார்யர்கள் அருளிச் செய்த வ்யாக்யானங்கள் பல, விரிந்து பரந்துள்ளன. அவைகள் "மொழிக்கு மொழி தித்திப்பாக" அமைந்து, அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாக விளங்கி வருகின்றன. திருப்பாவை அருளிய திருப்பாவையாகிய ஸ்ரீ ஆண்டாளின் அளப்பருஞ் சிறப்புக்களை "வியாக்யான கர்த்தாக்கள்" பல வகைகளில் வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர்.

## பிராட்டியின் அவதாரம் :

பிராட்டியின் அவதாரமே ஸ்ரீ ஆண்டாள். ஸ்ரீ ஜநகமகாராஜன் யாகசாலைக்கு ஸ்தலம் உழுது பண்ண நிற்கப் படைச்சாலிலே பிராட்டி தோன்றியதே நிருபகமாகச் சீதை யென்று திருநாமம் சாத்தித் தன் புத்திரியாக வளர்த்துக் கொண்டாற் போலவே, ஸ்ரீவிஷ்ணு சித்தர் தமது திருநந்தன வநத்தில் திருத்துழாய்க்குக் கொத்தா நிற்க, அம் மண்ணின் கீழே திருவாடிப் பூரத்திலே ஸ்ரீ பூமிப் பிராட்டி ஆவிர்ப்பவித்தருள, விஷ்ணு சித்தர் கண்டெடுத்துக் கோதை என்று திருநாமம் சார்த்தித் திருமகள் போல வளர்த்தருளினார். எனவே, பிராட்டி வேறு, ஆண்டாள் வேறு அல்லர்.

வைகுந்தத்தில் எம்பெருமானோடு பிரிவற எழுந்தருளியுள்ள பிராட்டியே, இப் பூவுலகத்தில் ஆண்டாளாகத் திருவவதாரம் செய்தருளினாள். எம்பெருமான் இம் மண்ணுலகில் கிருஷ்ணனாக அவதரித்து ஸ்ரீ கீதையை உபதேசித்தும், அஃது அனைவருக்கும் ஒருங்கே பயன்படாமை கண்டு, அக் குறைதீரப் பெரிய பிராட்டியே ஸ்ரீ வைகுந்த வாழ்வை இகழ்ந்து விடுத்து, ஸ்ரீ வில்லிபுத்தூரில் வந்து அவதரித்து எளிய இனிய அழகிய நடையில் "வேதம் அனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" அளித்தாள். இதனை,

> "பிராட்டி ஆண்டாள் ஆனாப்போலே
> உபநிஷத்து தமிழானபடி"

எனப் பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் அருளிச் செய்த மூவாயிரப்படி வியாக்யாநம் (30 : 5) விளங்க உணர்த்துதல் காணலாம்.

> இன்றோ திருவாடிப் பூரம்! எமக்காக
> அன்றோஇங்கு ஆண்டாள் அவதரித்தாள்! —குன்றாத
> வாழ்வான வைகுந்த வான்போகம்
> தன்னை இகழ்ந்து
> ஆழ்வார் திருமகளார் ஆய்!
>
> —உபதேசரத்தினமாலை.

## திருத்துழாய் போன்றவள் :

ஸ்ரீ ஆண்டாள் நம்மைப் போல இவ்வுலகிற் பிறந்து வளர்ந்து—கல்வி கற்று—அறிவு அனுபவங்கள் முதிர்ந்து—இங்ஙனம் காலப் போக்கில் படிப்படியாக உயர்நிலை அடைந்தவள் அல்லள். துளசிச் செடி முளைக்கும்போதே நறுமணத்துடன் முளைக்குமா போலே, ஸ்ரீ ஆண்டாளும் பிறக்கும்போதே பக்தியும் ஞானமும் ஆகிய பண்பு நலங்களோடு பிறந்தவள்.

> "திருத்துழாய் பரிமளத்தோடே கூட முளைக்குமா போலே, ஆண்டாளும் பால்ய யௌவநாஸ்தைகள் தோறும் வளருகிற பரபக்தி பரஞான பரம பக்திகளை அதிகமாக உடையவளாய் இருந்தாள்."

## பெரியாழ்வார் பெற்ற பெண் கொடி :

ஏனைய ஆழ்வார்கள் எல்லோரையும்போல் அல்லர் பெரியாழ்வார். வயதிற் பெரியவராதல் பற்றியோ, பெரிய பெரிய பிரபந்தங்களை இயற்றியருளினமை பற்றியோ, இவர்க்குப் பெரியாழ்வார் என்று பெயர் ஏற்பட்டிலது. மற்ற ஆழ்வார்களுக்கு மங்களாசாசனம் எப்போதும் இன்றிக்கே, ஏதாவது ஒரு தசையிலே தேடிப் பிடிக்க வேண்டியிருக்கும் (காதாசித்கம்); ஆனால் இவருக்கோ, அது நித்யமாகச் செல்லும் ஸ்வரூபாநு குணம். மேலும் ஏனைய ஆழ்வார்களுடைய ஆழங்கால்தானே இவர்க்கு மேடாய் இருக்கும். அன்றியும் மற்ற ஆழ்வார்கள் உபதேசிப்பது, சொல்வோராகிய தம்முடைய தனிமையையும், கேட்போராகிய பிறருடைய தனிமையையும் போக்கிக்கொள்ளுகைக்காக. ஆனால் பெரியாழ்வார் உபதேசிப்பதோ, எம்பெருமானைத் துணையற்றவனாக நினைத்து, அவனுக்குத் துணைவர் உண்டாக வேணுமென்றே ஆள்களைத் திருத்தி அவன் பக்கற் சேர்ப்பிக்கைக்காக. (ஸ்ரீவசனபூஷணம்)

பகவச் சேஷத்வம்—பாகவத சேஷத்வம் என்கிற இரண்டும் ஆழ்வார்கள்எல்லோருக்கும் இயல்பாக இருப்பினும், அவர்தம் பாடல்களில் சிற் சில இடங்களில் இவ்விரண்டும் குலைந்து நிற்றலும் உண்டு. ஆனால் "உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று பகவத் விஷயத்துக்கும், "மங்கையும் பல்லாண்டு" "சுடராழியும் பல்லாண்டு" "பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு" என்று பாகவத விஷயத்துக்கும், மங்களாசாஸநம் பண்ணுதலில் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் ஆர்வம் மிக்குப் பெருகி விளங்கியவராக இருந்ததனால், இவர்க்குப் பெரியாழ்வார் எனப் பெயர் ஏற்பட்டது.

மங்களா சாசனத்தில்
    மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள்ஆர் வத்தளவு
    தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப்
    பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்.

—மணவாள மாமுனிகள்.

இத்தகைய பெரியாழ்வார் வயிற்றிற் பிறக்கையாலும், தானான தன்மையாலும், ஞான பக்திகள் க்ஷணந்தோறும் பெருகப் பெற்று விளங்கிய சிறப்பு மிக்குடையவள் ஸ்ரீ ஆண்டாள்.

## அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததி :

ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வார் ஒருவர்க்கு மட்டுமே யன்றி, ஆழ்வார்கள் அனைவருக்குமே புதல்வியாகும் சிறப்புடையவள். எம்பெருமானுக்கு என்ன தீங்கு வருகின்றதோ? என்று அஞ்சுகின்ற இயல்புடைய ஆழ்வார்கள் பதின்மரின் குடிக்கும், ஸ்ரீ ஆண்டாள் ஒருத்தியே சந்ததியாவாள். ஆதலின் அவ்வாழ்வார்கள் எல்லோருடைய பண்பு நலங்களும், பக்தி ஞானங்களும், ஸ்ரீ ஆண்டாள் பக்கலிலே ஸ்த்ரீ தனமாகப் போந்து குடி கொண்டன.

"பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையாகத் திகழ்பவள் ஆண்டாள். பதின்மருடைய ஞானமும் ஸ்த்ரீ தனமாக இவள் பக்கலிலேயிறே குடி கொண்டது. பத்துப் பேர்க்கு ஒருபெண் பிள்ளையிறே."

—ஈராயிரப்படி அவதாரிகை.

## ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையள் :

ஸ்ரீ ஆண்டாளின் சிறப்பு ஏனைய எல்லா ஆழ்வார்களின் சிறப்பையும்விட மிக மேம்பாடு வாய்ந்தது என்று, மணவாளமாமுனிகள் போன்ற பூர்வாசார்யர்கள் பலரும் ஆங்காங்கே குறிப்பிட்டுப் புகழ்ந் துரைத் திருக்கின்றனர். ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையள் ஆண்டாள் என்பதனை, வியாக்யாந கர்த்தாக்கள் அழகுற எடுத்துப் பல இடங்களிலும் விளக்குகின்றார்கள்.

(1) "ஆழ்வார்களுக்கும் எம்பெருமான் மயர்வற மதிநலம் அருள வேண்டிற்று. எம்பெருமானை எழுப்பித் தன் குறையை எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்கையால், இவள்தான் எம்பெருமானுக்கு மயர்வற மதி நலம் அருளினாள்."

(2) "இளைய பெருமாள்படி ஆழ்வார்களது. ஸ்ரீபரதாழ்வான்படி பெரியாழ்வாரது. ஸ்ரீ சத்ருக்

நாழ்வான்படி அவர் திருமகளது. ஆழ்வார்களும் இளையபெருமாளும் பகவத் அநுபவத்தை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீபரதாழ்வானும் பெரியாழ்வாரும் பகவத் ஸம்ருத்தியை ஆசைப்பட்டார்கள். ஸ்ரீ சத்ருக்நாழ்வானும் ஆண்டாள் நாச்சியாரும், பாகவத சேஷத்வத்திலே நின்றார்கள்.''

—திருநாராயணபுரம்,
ஸ்ரீ ஜநந்யாசார்ய ஸ்வாமிகள்

(3) ''தேகாத்மாபிமாநிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணுவோட்டை வாசிபோரும். ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும். பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி போரும்.''

(4) ''அவர்களில் இவளுக்கு வாசி என்? என்னில்: 'அநாதி மாயயா' என்கிறபடியே, ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி, எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள்; இவள் தானே சென்று எம்பெருமானை எழுப்பி, உனக்கு சேஷமாய் இருக்கிற இந்த ஆத்மா அநர்த்தப் படாதபடி பண்ணி, இதுக்கு ஸ்வரூபாநுருபமான கைங்கர்யங்களையும் கொடுத்து, அது தானும் யாவதாத்ம பாவியாம்படி பண்ணியருள வேணும்'' என்று தன் குறையை அறிவித்தாள். ஆகையாலே அவர்களிலும் இவள் விலக்ஷணை.''

(5) ''பால்யாத் என்கிருப் போலே தொடக்கமே பிடித்துப் பகவத் குணங்களிலே அவகாஹித்துப் போரும் இவள்.''

''அவரைப் பிராயம் தொடங்கி என்றும்
ஆதரித்து எழுந்தஎன் தடமுலைகள்
துவரைப் பிரானுக்கு என்றே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை
விதிக்கிற்றியே''

என்கிறபடியே, பிறந்ததன் தொடக்கமே பிடித்துப் பகவத் குணங்களிலே ஈடுபட்டுப் போந்தவள் ஆண்டாள்.

(6) ''புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேஹிப்பதிலுங் காட்டில் ஸ்திரீ புருஷனைக் கண்டுஸ்நேஹிக்கை பள்ளமடையாகையாலே, ஆழ்வார்களிற் காட்டிலும் எம்பெருமான் பக்கல் பரம பக்தியுடையவள் ஆண்டாள்.''

—ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை

(7) ''எல்லாப் படியாலும், இவளுக்கு எம்பெருமானை வஸீகரித்து ஆத்மாக்களை ரக்ஷிப்பிக்க வல்ல புருஷகாரத்வம் உண்டு''

''கோதை-மாலை; மாலை போலே
போக்யையா யிருக்கை;
ஸ்ரீ மாலாகாரர் மகளாகையாலே,
மாலைஎன்னலாம்படி யானள்;
மாலை யான தான் தலையான
மாலையை வழங்கினள்;
திருமாலை வழங்கினளிறே''

(8) ''மாலை மாலையாலே விலங்கிட்டாள்; எல்லாரையும் கர்மாநு குணமாகக் கட்டுமவன், காமினி கழித்த கண்ணியாலே கட்டுண்டான்''

(9) ''எல்லாருக்கும் நிரதிஸய போகந் தருவான் அவன்; அவனுக்கு இவள் 'மார்வத்து மாலை' என்கிறபடியே நிரதிஸய போக்யையாய் இருக்கையாலே, கோதை எனத் திரு நாமம் பெற்றுச் சிறப்புற்றாள் ஆண்டாள்.

(10) சேஷ சேஷி பாவம் அநுஷ்டிப்பார் இல்லாமையாலே, இவர்களைப் போலே அவனும் மறந்து கைவிட்டிருக்க, 'பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்' என்று அவனை மறித்து வைத்து,

''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்தன்னோடு
உற்றோமே யாவோம்
உனக்கேநாம் ஆட்செய்வோம்''

என்று ஓதி, எம்பெருமானுக்கே சேஷ சேஷி பாவம் பற்றி உணர்த்தி யருளினுள் ஆண்டாள்.

—ஸ்ரீ பிள்ளை லோகஞ்சீயர்.

## இராமாநுஜரும் ஆண்டாளும்:

ஸ்ரீ ஆண்டாளுடைய பலவகைச் சிறப்புகளுள், ஸ்ரீ இராமாநுஜரைத் தனக்குத் தமையனாகப் பெற்றதும் ஒன்றாகும்.

நாறு நறும்பொழில் மாலிருஞ்
சோலை நம்பிக்கு நான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து
பராவி வைத்தேன்
நூறு தடாநிறைந்த அக்கார
அடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்று
வந்திவை கொள்ளுங்கொலோ

எனப் பாடிய ஸ்ரீ ஆண்டாளின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்த பெருமை, இராமாநுஜர்க்கு உரியது. எம்பெருமானார் ஆகிய இராமாநுஜர்க்குத் திருப்பாவை ஜீயர் என்றே ஒரு பெயர் உண்டு. "சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசன் என்னும் மாமுனியே" என்பது இராமாநுச நூற்றந்தாதி (19). "மற்றை நம் காமங்கள் மாற்று" என்று ஸ்ரீ ஆண்டாள் வேண்டிக் கொண்டதனை ஊன்றி யுணர்ந்தே, "கண்ணனுக்கே ஆமது காமம் அறம் பொருள் வீடு" என்று அறுதியிட்டு வாமன சீலர் ஆகிய இராமாநுஜர் உரைத்தார். இனைய குறிப்புகள் பற்பலவும், இராமாநுஜரை ஆண்டாள் தமையனாராகப் பெற்ற சிறப்பை யுணர்த்தும்.

"ஆழ்வார் திருமகளானதுக்கு மேலே, இராமாநுஜரை அண்ணராக அபிமாநித்த ஏற்றமும் உண்டிறே. ஆகையாலிறே 'நாறு நறும் பொழிலில்' (592) இவள் பிரார்த்தித்தபடி நடத்தியும், திருப்பாவையை நாடோறும் நடத்தியும், சூடிக் கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் ஆயினுன் இராமாநுஜ மாமுநி"

—பிள்ளை லோகஞ்சீயர்.

"மாமான் மகளே என்கையாலே வயற் புதுவை நகர் வாழும் பேர்கள் தாயான ஆண்டாளுக்கு அண்ணரான "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:" என்னும் அர்த்தம் சொல்லுகின்றது.

—ஸ்ரீவாநமாமலை ஜீயர் ஸ்வாபதேசம்.

## பாவநாப்ரகர்ஷ பக்திப்ரவாகம் :

மேலும் இவள்தான் பிராம்மணியாய் இருந்து வைத்தும், யாகத்திலே விரதத்தை மேற்கொண்டவர்கள் தேவதத்தாதி நாமங்களைத் தவிர்ந்து, யாகம் முடியும் அளவும் 'யஜமானன்' என்றும் 'அத்வர்யு' என்றும் 'ஹோதா' என்றும் இத்யாதி நாமங்களேயாகிறுப்போலே, இவளும் ஸ்ரீ வில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களிலே ஒருத்தியாகவும், வட பெருங்கோயிலே நந்தகோபர் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கிறவன் கிருஷ்ணனாகவும் அநுசந்தித்துத் தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே குடி போய், பாவநாப்ரகர்ஷத்தாலே அநுகாரம் முற்றி, "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்றும் "ஆயர் சிறுமியரோம்" என்றும் கூறும் அளவுக்கு, இடை நடையும் இடை முடியும் இடைப் பேச்சும் முடை நாற்றமுமாய் மாறி நின்று, இத் திருப்பாவை நூலை அருளிச் செய்தாள். இதனாலும் ஆழ்வார்களிற் காட்டில் எம்பெருமான் பக்கல் பரம பக்தியுடையவள் ஆண்டாள் என்பது பளிங்கென விளங்கும்.

## முடிவுரை :

எல்லோரையும் தன்னுடைய நிர்ஹேதுக கிருபையினாலே ஆட் கொண்டு காத்தருள்வதனால், எம்பெருமானுக்கு ஆண்டவன் என்பது ஒரு பெயராயிற்று. அவனையும் கூடத் தன் பிரேம பக்தியினால் வசீகரித்துக் தனக் குரியவனாக ஆண்டு கொண்ட காரணத்தால், கோதைக்கு ஆண்டாள் என்ற பெயரே வழங்கத் தலைப்படுவதாயிற்று.

இத்தகைய பல சிறப்புக்களையுடைய ஸ்ரீ ஆண்டாளின் அருமை பெருமைகளை யுணர்ந்து, வேதார்த்த சாரமாகவும், சங்கத் தமிழ் மாலையாகவும், அவள் அருளிச் செய்த திருப்பாவை முப்பதும் தப்பாமே ஓதி, நாம் அனைவரும் உய்ய முயலுவோமாக!

[பேரளம் சரகம்—மாயூரம் தாலுக்காவிலுள்ள திருக் கோயில்களின் சார்பில், ஸ்ரீ மாயூர நாதர் ஆலயத்தில் நடை பெற்ற பாவை மாநாட்டில், 12—1—64 ஞாயிற்றுக்கிழமையன்று "இரு பாவைகள்" என்னும் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவின், ஒரு பகுதி.

—ஆசிரியர்]

# சிவஞான சித்தியார்

## முன்னுரை :

தமிழ் மொழிக்கண் உள்ள சமய தத்துவ நூல்களுள், சிவஞான சித்தியார் என்னும் நூல் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வதொன்றாகும். ''சிவத்துக்கு மேல் இல்லை தெய்வம்; சிவஞான சித்திக்கு மேல் இல்லை நூல்'' என்பது, ஒரு தமிழ்ப் பழமொழி. இதனால், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய சிவ ஞான சித்தியாரின் சிறப்பு இனையது எனத் தெளியலாம்.

## உரையாணி :

ஆசிரியர் மெய்கண்ட தேவர் இயற்றி யருளிய சிவஞான போதம் என்னும் சிறந்த நூலினைப் பின்பற்றி, அதன் வழி நூலாக இயற்றப் பெற்றதே சிவஞான சித்தியார் ஆகும். சிவ ஞானபோதம் சுருங்கிய மூலம் (சூத்திரம்) போலவும், சிவஞான சித்தியார் அதற்குச் சிறந்த முறையில் அமைந்த ஓர் அரிய விரிவுரை (பாஷ்யம்) போலவும், ஒன்றை யொன்று தழுவி நின்று இணையற்றுப் பொலிந்து விளங்குகின்றன. வட மொழியிற் சங்கரர், இராமானுசர், மத்துவர், நீலகண்டர் முதலிய சான்றோர்கள் எழுதியுள்ள புகழ் பெற்ற மாபெரும் பாஷ்யங்களைப் போல, தமிழ் மொழியில் இயற்றப்பட்டு அமைந்த ஒரு மாபெரும் பாஷ்யம் ஆகச் சிறந்து விளங்குவது, சிவஞான சித்தியார் எனலாம். ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள், '' சிவாகமங்களின் பொருள்களுக்கெல்லாம் ஓர் உரையாணி போல்வது'' எனச் சிவஞான சித்தியாரைப் புகழ்ந்து போற்றியுள்ளார்.

## அறிவு விருந்து :

தத்துவ நூல்கள் சமயத்திற்கு இலக்கண நூல்கள் போல்பவை (''Philosophy is the grammar of Religion'') என்று அறிஞர்கள் கூறுவது உண்டு. அம் முறையில் நோக்கினால், சிவஞான சித்தியார் என்னும் இச் சிறந்த செந் தமிழ் நூலானது, சைவ சமயத்தின் தத்துவ நுண்பொருள்களை விளக்கும் விரிவான இலக்கண நூல் போன்றதாகும் எனக் குறிப்பிடுதல் பொருந்தும். இலக்கண நூல்கள் ஒரு சிலரால் சுவையற்றவை என்றும், கடினமானவை என்றும் வெறுத்தொதுக்கிப் புறக்கணிக்கப்படுதல் உண்டு. ஆனால் சிவஞான சித்தியார் அத் தகைய தொரு தத்துவநூல் அன்று.

*'' தெய்விகத் தத்துவக் கொள்கையானது எத்துணை இனிமை மிக்கதாக இருக்கின்றது! அறிவிலிகள் நினைப்பது போல, செவிக்கு இன்னாததாய்க் கடினமானதும் (harsh), சுவையற்றுச் சிக்கலானதாய்ப் புரியாததும் (Crabbed) ஆக, இருப்பது அன்று அது! அப்போலோவின் குழலிசையைப் போல, அஃது இனிமை மிக்க இசை நலம் உடையதாகத் திகழ்கின்றது. தேனில் தோய்த்த பொருள்கள் போல, அஃது எஞ்ஞான்றும் இனிமை பயக்கும் பெரு விருந்தாக விளங்குகின்றது. அதன்கண் சுவைக் குறைவோ தெவிட்டுதலோ சிறிதும் இல்லை''

என ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடுவது, சிவஞான சித்தியார் திறத்தில் மிகவும் பொருத்தம் உடையதாகக் காணப் படுகின்றது.

---

* ''How charming is divine plilosophy!
Not harsh and Crabbed as dull fools suppose,
But musical as is Apollo's lute,
And a perpetual feast of nectar'd sweets
Where no crude surfeit reigns.''

—John Milton.

எந்நகை இன்ப ஊற்ருய்
இறையருள் நூல்கள் உள்ள !
அந்தகை யவற்றை அந்தோ
அறிவிலார் கடினம் என்பர் !
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல், இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென விளங்கும் நன்றே

—மொழிபெயர்த்தவர் : ஆசிரியர்.

**பலதிறச் சிறப்புகள் :**

சிவஞான சித்தியார் பலவகைகளில் மிகவும் சிறப்புடையதாகத் திகழ்கின்றது. மேலை நாட்டுத் தத்துவ நூல்கள் பலவும் உரை நடையிலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கும் (Prosaic); மிகவும் நீண்டு விரிந்து பரந்து செல்லும் (voluminous)! அங்ஙனமெல்லாம் இன்றி மிகச் சுருக்கமான அளவில் (Short and Sweet), அழகிய இனிய சிறந்த செய்யுள் வடிவத்தில் (Poetic excellences) இயற்றப்பட்டிருத்தல், சிவஞான சித்தியாரின் பெருஞ் சிறப்புகளுள் ஒன்ருகும்.

மேலும், காரண காரிய முறைகளை ஒட்டியே செல்லுந் திறமும் (Logical presentation), பகுத்தறிவுக்கு மாறுபடாத போக்கும் (Rationalistic approach), அறிவியல் நெறி தழுவிச் செல்லும் தெளிவும் (Scientific exposition), உலகியல் அனுபவ நடைமுறைகளுக்கு முரண்பாடின்றி இயைந்து செல்லும் கொள்கையுயர்வும் (Practical and realistic principles), கருத்துக்களைப் பாகுபாடு செய்து கொண்டு ஆராய்ந்து காணும் நுட்பமும் (Analytical insight), இயைபுடையன பலவற்றையும் இனிது தொகுத்து ஒருங்கே காணும் சிறப்பும் (Synthetic vision), எளிய இனிய உவமை நலங்களும் (Homely Similes), கருத்துக்களின் நுட்ப திட்பமும் (Profundity of thought), அவற்றை அழகுற வெளியிடும் சொல் நயமும் (Felicity of expression) ஆகிய இன்னோரன்ன பன்னலங்களையும், சிவஞான சித்தியார் தன்பாற் செறியப் பெற்றிருத்தல், அறிஞர்களுக்கு ஆராப் பெரு விருந்தாகும்.

**பாராட்டுரை :**

ஜெர்மானிய நாட்டின் புகழ்பெற்ற மாபெருங் கவிஞராகிய கெத்தே என்பார், காளிதாஸர் இயற்றிய சாகுந்தலம் என்னும் வடமொழி நாடகத்தின் சிறப்பினைக் குறித்து,

"இளவேனிலின் எழில்மிக்க பல மலர்களையும், முதுவேனிலின் இனிய கனிவகைகளையும், ஆன்மீக உணர்வைக் கவர்ந்து களிப்பித்து அரும்பெறல் விருந்தளிக்க வல்ல பொருள்கள் அனைத்தையும், இம்மண்ணுலகையும் அவ் விண்ணுலகையும் எல்லாம், நின்னுல் ஒரே ஒரு பெயரிலேயே ஒன்று சேர்த்து அடக்கி, இணைத்துக் கூற இயலுமா? இவைகள் அனைத்தையும் ஒருங்கே இணைத்துக்கூறும் வகையில், சகுந்தலை என்று யான் நினக்குப் பெயரிடுகின்றேன்." *

---

"Woulds't thou the young year's blossoms
and the fruits of its decline,
And all by which the soul is charmed,
enraptured, feasted, fed,
Wouldst thou the Earth and Heaven itself
in one sole name combine?
I name thee, O Sakuntala! and all at
once is said."

—Goethe.

என்ச் சிறந்தெடுத்து மிகவியந்து போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்துரைத்திருக்கின்றார் !

இன்பொளிர் வேனிற் காலத்து
எழில்மலர் கனிகள் மற்றும்
மன்பெருங் கவர்ச்சி மிக்கு
மகிழ்ச்சிநல் விருந்தூண் மண்விண்
என்பவை எலாம்சேர்ந்(து) ஒன்றைச்
"சகுந்தலை" எனும்ஓர் பேரால்
நன்றுற நவில்வேன் ! யாவும்
நனியதில் அடங்கும் அன்றே

—மொழிபெயர்த்தவர்: ஆசிரியர்.

சிறந்த நல்லிலக்கியங்களாகத் திகழ்வன எல்லாவற்றிற்குமே இப் பாராட்டுரை பொருந்துவதொன்றாக விளங்குதலின், நாம் நம் சிவஞான சித்தியாருக்கும் இதனை ஏற்றிப் போற்றியுரைத்துக்கொண்டு பாராட்டி மகிழலாம்.

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் :

இத்தகைய அருமை பெருமை மிக்க சிவஞான சித்தியார் என்னும் சிறந்த செந்தமிழ்த் தத்துவ ஞான நூலை ஆராய்ந்து கற்க முற்படின், அதன் சிறப்புகள் பலவற்றையும் உணர்ந்து, அறிவுலகம் அதனைத் தலைவணங்கி ஏற்றுப் போற்றி மகிழ்ந்து பயனடையும் என்பது திண்ணம். மேலை நாட்டு விஞ்ஞானமும் வியந்து தலைவணங்கிப் போற்றும் முறையில், கீழை நாட்டின் மெய்ஞ்ஞானம் சிறந்து விளங்கித் திகழ்கின்றது என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி யன்று!*

## விக்டர் கஸின் :

"ஐரோப்பாவிற் பரவத் தொடங்கியுள்ள கீழை நாடுகளின், எல்லாவற்றினும் மேலாக இந்தியாவின், கவிதை தத்துவம் ஆகியவற்றின் வளர்ச்சிகளை நாம் ஊன்றிக் கருதிப் பயிலும்போது, நாம் பல உண்மைகளை—பொருள் பொதிந்த சிறந்த உண்மைகளை—புதிதுகண்டு உணரப் பெறுகின்றோம். மேலே செல்ல முடியாமற் சில சமயங்களில் நின்று போன ஐரோப்பிய அறிவுத்திறனின் அற்ப விளைவுகளை நோக்க, அவைகள் மிகப் பெரியனவாக வேறுபட்டுச் சிறந்து விளங்குகின்றன. மனித குலத்தின் தொட்டிலாக வயங்கி, மிகமிக உயர்ந்த தத்துவக் கொள்கையின் பிறப்பிடமாகவும் திகழும் கீழைநாடுகளின் அறிவுத் திறனுக்கு, நாம் மண்டியிட்டுப் பணிந்து தீர வேண்டிய நிலையிலேயே உள்ளோம்" என விக்டர்கஸின் என்னும் மேலைநாட்டுப் பேரறிஞர் ஒருவர், தாம் எழுதிய "இந்திய மறுமலர்ச்சி" என்னும் நூலிற் குறிப்பிடுவது, ஈண்டு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.

## முடிவுரை :

ஆசிரியர் திருவள்ளுவர் இயற்றியருளிய திருக்குறள், இன்று உலக மக்களால் மிகச் சிறந்த ஒப்புயர்வற்ற நூல் என உடன்பட்டுப் போற்றப் பெறுதல் போல, (Dr. Albert Schwitcher: Indian Thought and Its Development, p. 200—205.), சிவஞான சித்தியார் என்னும் நம் செந்தமிழ்த் தத்துவ ஞான நூலும், உலகப் புகழ் பெறுதற்குரிய ஒப்புயர்வற்ற பெரு நூல் என்பதில் ஐயமில்லை. இத்தகைய சிறந்த நூலை, நாம் இயன்ற அளவு முயன்று பயின்று, நலம் பெற முனைவோமாக!

"ஆறாறு தத்துவமும்
ஆணவமும் வல்வினையும்
நீறாக முத்தி நிலை
நிற்போர்க்குப்—பேறாகப்
பார்விரித்த நூலெல்லாம்
பார்த்தறியச் சித்தியிலே
ஓர்விருத்தப்
பாதிபோ தும்"

—சிவபோகசாரம்.

---

* "When we read with attention the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truths so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of the human race the native land of the highest philosophy."

—Victor Cousin,
The Indian Renaissance

# கீதா ஸாரம்

## அனைவரும் உய்வுபெற அருளிய நன்னூல். (1)

காரப்பங்காடு ஸ்ரீ வேங்கடாசார்ய சுவாமிகள், மயிலாப்பூர்.

"ஸ்ரீ பார்த்தஸாரதி பாரதப் போர் தொடங்குங்கால் அர்ஜ்ஜுனனைக் குறித்து அருளிச்செய்த நன்னூல் கீதா சாஸ்திரம்" என்பது இவ்வுலகு அறிந்ததேயாம். இந்தக் கீதா சாஸ்திரம், ஜீவாத்மாக்களாகிய நாம் உய்வு பெற்று வாழ்வதற்காகவே பிறந்த நூலாதலின், மிக மிகச் சிறந்த நூல் என்னில், இது புகழுரையும் ஆகாது; பொய்யுரையும் ஆகாது. இவ்விஷயம், இந்தக் கீதைக்கு அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் இவற்றை முறையே இவ்வுலகில் நிலைநாட்ட வந்த ஸ்ரீ சங்கரரும், ஸ்ரீ இராமாநுஜரும், ஸ்ரீ ஆனந்த தீர்த்தரும் இட்டருளின உரைநூல்களினாலேயே யார்க்கும் நன்கு விளங்கும். இவ்வாறான இக்கீதை பல ஸாரப்பொருள் உடையதாகும். அந்த ஸாரப்பொருள்களுள், ஒன்றை ("அனைவரும் உய்வு பெற அருளிய நன்னூல்") என்பதை இங்கு மிக விரிவின்றிச் சுருக்கமாய்க் காட்டுவோம்.

"இந்தக் கீதா சாஸ்திரம் க்ஷத்திரியனுக்கே ஹிதத்தை அருளிச் செய்த நூல்" என்பது சிலர் கொள்கையாகும். அவர்கள் காட்டும் ஆதாரங்கள் பின்வருமாறு:

(1) "தருமபுத்திரர் முதலானோர்க்கும், துரியோதனன் முதலானோர்க்கும் போர் குறிப்பிடப் பெற்றுள்ள பதினெட்டு தினங்களில் நடந்தே தீரவேண்டும் என்னும் நிச்சயம் ஏற்பட்ட பிறகு, அப்போர் தொடங்குங்கால், அர்ஜ்ஜுனன் தனக்கு ஸாரதியான பரமபுருஷனைக் குறித்து, 'இரு ஸேனைகள் நடுவில் என் தேரை நிறுத்து' (ஸேநயோ: உபயோ: மத்யே ரதம் ஸ்தாபய) என்று கூற, இதைச் செவியேற்றவனும், தன்திருவடிகளைப் பற்றிய அர்ஜ்ஜுனனுக்குப் பரதந்திரனுமான ஸ்ரீ பார்த்தஸாரதி அவ்வாறே தேரை நிறுத்த, பின்பு அர்ஜ்ஜுனனும் இரு ஸேனைகளில் உள்ளவர்களை நன்கு கண்டு, அவர்கள் அனைவரையும் கொன்று அடையப்படும் வெற்றியையும், இராஜ்ஜியத்தையும், இன்பங்களையும் வேண்டாது வெறுத்து, தன் கையில் உள்ள காண்டீவம் என்னும் வில்லையும், அம்பறுத்தூணிகளையும் போகட்டு, போர்க்களத்தில் நின்றும் விலகிச் செல்ல விரும்ப, அதைக் கண்ட ஸ்ரீ பார்த்தஸாரதி, க்ஷத்திரியனான வீரபுருஷனுக்குப் போர் புரிதல் சிறந்த தருமமாய் இருக்க, இவ்வுலகில் "அர்ஜ்ஜுனனே வில்லாளி" என்றும் புகழ் பெற்ற இவன், இவ்விடத்தில் நின்றும் இங்ஙனம் விலகிச்செல்ல விரும்புவது பொருத்தமன்று என்று எண்ணித் தடுக்க, (இவ்வாறு தடுக்கப் பெற்ற) அர்ஜ்ஜுனனும், "பீஷ்மர் பெரியவர்; மிகச் சிறந்த அறிஞர்; துரோணர் எனக்கு அஸ்த்ர சஸ்த்ரங்களைக் கற்றுக் கொடுத்த ஆசாரியர். இவ்விருவர் பாதங்களையும் பூக்களையிட்டுப் பூஜிக்க வேண்டியவன். அங்ஙனம் பூஜிக்காமல் இருத்தல் மிகப்பாவமாகும். உண்மை இங்ஙனம் இருக்க, எங்ஙனம் அவ்விருவரையும் நான் பாணங்களால் அடிப்பேன்? என் மனம் மிகவும் கலங்குகிறது. எது தருமம்? எது அதருமம்? என்பது எனக்குப் புரியவில்லை. எதைச் செய்தால் எனக்கு நன்மை உண்டாகும்? நீ எனக்குக் குரு; நான் உனக்குச் சீடன். உன் திருவடித் தாமரைகளைத் தஞ்சமாகப் பற்றி வேண்டிக் கொள்கிறேன். எது எனக்கு நன்மையைத் தரும் தருமம் என்பதை நீ உபதேசம் செய்தல் வேண்டும்" (யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம்ப்ரபந்நம்) என்று வேண்டிக் கொள்ள, ஸ்ரீ பார்த்தஸாரதியும், 'நத்வேவாஹம்' என்பது முதல் 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய' என்பது ஈறாக உள்ள கீதையை உபதேசம் செய்தனன்"—என்னும் வரலாறு (முதல் அத்தியாயம், இரண்டாம் அத்தியாயம் 11 சுலோகங்கள் கொண்டுள்ள) முற்பகுதியில் நன்கு விளங்குகின்றது.

(2) ஸ்ரீ பார்த்தஸாரதி மேற்கூறியவாறு, 'நத்வேவாஹம்' என்பது முதல் 'ஸர்வதர் மாந் பரித்யஜ்ய' என்பது ஈறாக உள்ள பகுதியினால் ஸாரப்பொருளை உபதேசம் செய்தருளியதைக் கேட்ட அர்ஜ்ஜுனன், "க்ருஷ்ண! எனக்கு உன் அருளால் அறியாமை அழிந்து விட்டது; உண்மை உணர்வு உண்டாயிற்று. நான் ஐயமற்றவனாக இருக்கிறேன். இப்போதே 'நீ போர் புரி' என்னும் உன் வார்த்தையைக் கேட்டு நடப்பேன்" என்று சொன்னதாய்ப் பதினெட்டாம் அத்தியாயத்தின் முடிவில் சொல்லப் பெற்றிருக்கிறது.

(3) ஸ்ரீ பார்த்தஸாரதி, க்ஷத்திரிய ஜாதியில்பிறந்தவனுக்குப் போர்புரிதல், இராஜ்ஜியத்தைப் பரிபாலனம் செய்தல் முதலியன முக்கிய தருமமாம் என்பதை, 'யுத்தே சாப்யபலாயநம் (18வது அத்தியாயம், 43-வது சுலோகம்) என்னும் பகுதியில் வெளியிட்டிருக்கிறான்.

(4) மேலும், 'தஸ்மாத் யுத்யஸ்வ பாரத' (2வது அத்தியாயம், 18 வது சுலோகம்) என்னும் பகுதியினால் யுத்தத்தைச் செய்ய வேண்டுமென்று அர்ஜ்ஜுனனுக்குக் கட்டளையிட்டிருக்கிறான்.

(5) அன்றியும்,

**'ஸ்வதர்மமபி சாவேக்ஷ்ய நவிகம்பிது மர்ஹஸி!**
**தர்ம்யாத்தி யுத்தாச்ரேயோந்யத் க்ஷத்ரியஸ்ய நவித்யதே!!'**

(2வது அத்தியாயம் 31 வது சுலோகம்)

என்னும் சுலோகத்தினால், "போர் புரிதல் என்பது க்ஷத்திரியனுக்குரிய தருமம். அதைப் பார்த்து, அவன் அதில் நின்றும் விலகுவதற்கு இல்லை. அவனுக்கு அத்தருமத்திலும் மேலானதொரு நன்மையில்லை" என்னும் கருத்தைக் காட்டியிருக்கிறான்.

(6) இன்னும்,

**'அதசேத் த்வமிமம் தர்ம்யம் ஸங்க்ராமம் நகரிஷ்யஸி!**
**தத: ஸ்வதர்மம் கீர்த்திம் ச ஹித்வா பாபம் அவாப்ஸ்யஸி!!'**

(2வது அத்தியாயம் 33வது சுலோகம்)

என்னும் சுலோகத்தினால், "க்ஷத்திரியனுக்கு உரியதும், தொடங்கப் பெற்றுள்ளதும், தருமமுமான இப்போரை அறியாமையினால் செய்யாமற் போனால், உனக்குரிய தருமத்தையும், புகழையும் இழந்து பாவத்தையும் அடைவாய்" என்னும் உண்மையை உணர்த்தியிருக்கிறான்.

(7) இன்னமும்,

**'ஸுகத்துக்கே ஸமேக்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌ!**
**ததோ யுத்தாய யுஜ்யஸ்வ நைவம் பாபம் அவாப்ஸ்யஸி!!**

(2வது அத்தியாயம் 38 வது சுலோகம்)

என்னும் (ஸ்ரீ பார்த்தஸாரதியினுடைய) சுலோகம், "ஓ அர்ஜ்ஜுன: நீ வெற்றி, வெற்றியின்மை, இலாபம், இலாபமின்மை, இன்பம், துன்பம் ஆகிய இவற்றினால் உண்டாகும் மனமாறுதல் இன்றி, உனக்குரிய தருமமான போரைப் புரியக் கடவாய். இங்ஙனம் போர் புரியும் போது நீ நன்மையை அடைவாய்" என்னும் கருத்தைக் கூறுகின்றது. இதையும் இங்கு நாம் காணுதல் நன்றாம்—

(8) மேலும், ஸ்ரீ பார்த்தஸாரதி எட்டாவது அத்தியாயத்தில் பின்வருமாறு அருளிச் செய்திருக்கிறான் :—

'ஒருவன் இறக்கும்போது பரமபுருஷனாகிய என்னையே நினைத்து உடலை விடுவனாகில் அவனுக்கு நன்மை உண்டு' என்று. இதைக் கேட்டஅர்ஜ்ஜுனன், 'இறக்கும்போது உன்னை நினைத்தல் நன்மையை விளைவிக்குமாயின், அக்காலத்தில் மாத்திரம் உன்னை நினைத்தல் போதுமோ?' என்ன, 'போதும், அக்காலத்தில் மாத்திரம் நினைத்தல் என்பது ஒருவனுக்கு அப்போது உண்டாகும் என்று கூறுவதற்கு இல்லை. ஏனைய சமயங்களில் என்னையே நினைத்து, பொழுது போக்குகிறவனுக்கே, இறக்குங் காலத்தில் என்னைப் பற்றிய நினைவு உண்டாகும். ஆதலின், ஓ அர்ஜ்ஜுன! என்னை நீ எப்போதும் நினைத்துக் கொண்டிரு' (தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாம் அநுஸ்மர—8வது அத்தியாயம் 7வது சுலோகம்) என்று அருளிச் செய்தான். இதைச் செவியேற்ற அர்ஜ்ஜுனன், 'உன்னை நான் எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போர் புரிதல் வேண்டாம்' என்னும் கருத்துடன் இருக்க, அதையறிந்த பரமபுருஷன், 'எப்போதும் என்னை நினைத்துக் கொண்டிருத்தல்

மாத்திரம் போதாது. க்ஷத்திரியனுன உனக்குரிய போர் புரிதல் முதலிய தருமங்களையும் அவசியம் செய்தல் வேண்டும்' (யுத்யச-8வது அத்தியாயம் 7வது சுலோகம்) என்று அருளிச் செய்திருக்கிருன்.

(9) இன்னும், பதினென்ருவது உத்தியாயத்தில், 'தஸ்மாத் த்வம் உத்திஷ்ட யசோ லபஸ்வ ஜித்வா சத்ருன் புங்க்ஷ்வ ராஜ்யம் ஸம்ருத்தம்' (11வது அத்தியாயம் 33வது சுலோகம்) என்னுமிடத்தில், 'ஓ அர்ஜ்ஜுனு! போர் புரிய எழுந்திரு. பகைவர்களை வென்று புகழை அடை. இராஜ்ஜியத்தைப் பெற்று இன்பம் பெறு.' என்று அருளிச் செய்திருப்பதைக் காணுதல் நன்ரும்.

(10) அன்றியும், க்ஷத்திரிய குலத்தில் பிறந்த ஜனகர் முதலிய அரசர்கள், தங்களுக்குரிய தருமங்களைச் செய்து நன்மையைப் பெற்றிருப்பதாக, 'கர்மணுவஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா: ஜநகாதய (3வது அத்தியாயம் 20வது சுலோகம்) என்னும் வாக்கியத்திஞல் வெளியிட்டிருக்கிருன்.

(11) மேலும், ஸ்ரீ பார்த்தஸாரதி நான்காம் அத்தியாயம் ஆரம்பத்தில், 'ஓ அர்ஜ்ஜுனு! உன்னைப் போர் புரியச் செய்யவேண்டும் என்று கருதி, நான் இவ்வாறு சொல்வதாக நீ எண்ணலாகாது. நான் ஆதியில் இத்தருமத்தை விவஸ்வானுக்குக்கூற, அந்த விவஸ்வான் மனுவிற்குச் சொல்ல, அம்மனு இக்ஷ்வாகு என்னும் அரசனுக்கு இயம்ப, இவ்வாறு ராஜரிஷிகளுடைய பரம்பரையிலே இந்தத் தருமம் அறியப் பெற்று, செய்யப்பட்டு வந்தது; அது நாளடைவில் மறைந்து விட்டது. ஆதலின், உனக்கு இப்போது சொல்லுகிறேன்' என்றும் அருளிச் செய்திருக்கிருன். இங்கு,

**'ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது:!**
**ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப !!**

(4வது அத்தியாயம்—2வது சுலோகம்) என்னும் சுலோகம் அனுபவிக்கத்தக்கது.

(12) அன்றியும், ஒன்பதாவது அத்தியாயத்தில் ஸ்ரீ பார்த்தஸாரதி பக்தியைப் பற்றி அருளிச் செய்யுமிடத்து, 'ராஜவித்யா ராஜகுஹ்யம்' (9வது அத்தியாயம் 2வது சுலோகம்) என்று அருளிச் செய்திருக்கிருன். இவ்வாக்கியத்தை நோக்குங்கால், பக்தி என்னும் தருமம் க்ஷத்திரியர்களாகிய அரசர்களுக்கே உரியது என்பது நன்கு விளங்கும்.

இங்ஙனம், மேற்கூறியவாறு கீதையில் முதலிலும், முடிவிலும், இடையில் பல இடங்களிலும் கூறப்பெற்றுள்ள கருத்துக்களைக் காணுங்கால், ஸ்ரீ பார்த்தஸாரதி உபதேசம் செய்தருளின கீதா சாஸ்திரம் க்ஷத்திரியர்களுக்கே உய்வுபெற ஹிதத்தை அருளிச் செய்ய வந்த நூல் என்னும் கருத்து விளங்கும் என்பது சிலருடைய கருத்தாகும்.

இவ்வாறு சிலர் கூறும் கருத்து பொருத்தமுடையதன்று. அப்பரமன் அருளிச் செய்த கீதா சாஸ்திரம் அனைவரும் உய்வுபெற ஹிதத்தை அருளிச் செய்ய வந்த நன்னூலேயாகும். இதற்குத் தக்க சான்றுகள் பல உள; ஒன்றிரண்டைச் சுருக்கமாய்க் காட்டுவோம்.

(1) ஸ்ரீ பார்த்தஸாரதி, பதினெட்டாவது அத்தியாயத்தில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் நான்கு வருணங்களைத் தனித்தனியே குறித்து, அந்தஅந்த வருணத்தில் பிறந்தவனுக்கு, 'இன்னது குணம் இன்னது செயல்' என்பதைத் தெளிவாய்க் கூறி, பின்பு 'ஸ்வே ஸ்வே கர்மணி அபிரத: ஸம்ஸித்திம் லபதே நர' (18வது அத்தியாயம் 45வது சுலோகம்) 'அவனவனுக்குரிய தருமத்தைப் பற்றுடன் செய்பவன் நன்மையை அடைகிருன்' என்று தெளிவாக அருளிச் செய்திருக்கிருன்.

(2) மேலும்,

**'மாம்ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேபிஸ்யு: பாபயோநய:**
**ஸ்த்ரியோ வைச்யா: ததா சூத்ராஸ்தே பியாந்தி பராம்கதிம் !!'**

(9வது அத்தியாயம் 32வது சுலோகம்)

என்னும் சுலோகத்தில், 'ஸ்த்ரீகள், வைச்யர்கள், பாபஜன்மத்தில் பிறந்தவர்கள் யாராய் இருப்பினும், என்னைப் பற்றி பஜனம் செய்பவர்கள் நன்மையை அடைகிருர்கள்'. என்றும்

# திருநாவுக்கரசர் தேவாரம்

தொண்டைமண்டலாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்

திருநாவுக்கரசு நாயனுர் திருவிடைமருதூரில் இசைத்தருளிய திருக்குறுந்தொகைப் பதிகம் இரண்டு. திருநேரிசை ஒன்று, திருத்தாண்டகம் இரண்டு, இவ்வைந்து திருப்பதிகங்களுள், முன்னிரண்டனுள், ஒரே திருக்குறுந்தொகை ஈரிடத்தில் உள்ளது. அஃது எவ்வாற்றுன் நேர்ந்ததோ அறியக்கூடவில்லை.

'பாசம் ஒன்றிலராய்ப் பல பக்தர்கள்' எனத் தொடங்குந் திருப்பதிகத்தின் ஐந்தாவது திருப் பாடலையும், 'பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்' என முதலும் திருப்பதிகத்தின் மூன்ருவது திருப் பாடலையும் ஒருங்கு வைத்து நோக்குதல் வேண்டும். இரண்டும் வேறல்ல. இரண்டாவதடியீற்றின் கண் 'ஆர்' என்னும் விகுதி 'ஐ' என்று இரண்டனுருபாகிய வேறுபாடுமட்டும் உளது.

"வண்டணைந்தன வன்னியுங் கொன்றையும்
கொண்டணைந்த சடைமுடிக் கூத்தனுர்
எண்டிசைக்கும் இடைமருதா என
விண்டுபோயறும் மேலை வினைகளே"

இதில், 'கூத்தனுர்' என்பது மற்றைத் திருப்பதிகத்தில் உள்ளதன் கண், 'கூத்தனை' என்று வேறுபாடு சிறிதே கொண்டிருக்கின்றது.

திருமுறைச் சொற்றொடர்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் ஆற்றல் பெறுவது எளிது அன்று, புலமையுடையோர்க்கே அரிதாக இருப்பது அது. அருள் நூல்களுள் உள்ள தொடர்களைப் பிரித்தலில் அறிவு விரைதலாகாது. ஆய்ந்து ஆய்ந்து பிரித்துப் பொருள் கோடல் தக்கது.

திருநாவுக்கரசு நாயனுர் திருவாரூரில் எழுந்தருளிப் பாடிய திருவிருத்தத்துள் இரண்டாவதாக வெளியிடப் பெற்ற திருப்பாடல்

" ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம்
பாற்படுத்தா
னுரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன்
நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீள்நா டறியும்
அன்றே. !!

---

*கீதா சாரம் ... ...*

கூறியிருக்கிருன். அப்பரமன், தான் உபதேசம் செய்த கீதையில், க்ஷத்திரியர்களுக்கே ஹிதத்தைக் கூறவந்தவனுய் இருப்பின், 'ஸ்வே ஸ்வே கர்மணி அபிரதை; என்றும்,' 'ஸ்த்ரியோ வைச்யா; ததா சூத்ரா; யேபிஸ்யு; பாபயோநய' என்றும் கூறியிருப்பானே?

'ராஜவித்யா ராஜகுஹ்யம்' என்னும் சொற்கள் 'பக்தி என்னும் தருமம் அரசனுக்கே உரிய தருமம்; அரசனுக்கே உரிய சிறந்த ரஹஸ்யம்' என்னும் கருத்தைக் காட்ட வந்தவையல்ல. 'சிறந்த-வித்தை சிறந்த ரஹஸ்யம்' என்னும் பொருளைக் காட்ட வந்தவையாம். ஆதலின் அனைவரும் உய்வுபெற ஹிதத்தை அருளிச்செய்ய வந்த நன்னூல் கீதை என்பது தெளிவன்றே? ★

என்பது. இதனுள் இரண்டாவதடியின் ஈற்றெழுத்தும் மூன்ருவதடியின் முதலெழுத்தும் தமிழியல் மரபிற்குத் தகப் புணர்ந்துள்ளன. பொன் + நீர்மை = பொன்னீர்மை. மான் + நிறம் = மானிறம். கான் + நீட்சி = கானீட்சி என்பவற்றிற் காணுமாறே னகரமெய்யும் நகரமெய்யும் புணர்ந்துள்ளன. 'படுத்தான்' என்பதன் ஈற்றுமெய் னகரம். 'நார்' என்றதன் முதல்மெய் நகரம். னகரமும் நகரமும் புணர்ந்தால் (நெட்டெழுத்தின் பின்னதேல்) ஒரு னகரம்ஆதல் தமிழ் மரபு. தனிக் குற்றெழுத்தின் பின்னதேல் இருநகரமாகும். இதற்கு எடுத்துக் காட்டு. அப் 'பொன்னீர்மை' என்பது. ஏனையிரண்டும் நெட்டெழுத்தின் பின்னதற்கு எடுத்துக் காட்டாவன. அவன் + நிறம் = அவனிறம் எனவருவதும் நெட்டெழுத்தின் பின்வருதலோடு ஒப்பதே. இதனைத் தொல்காப்பியர்,

"குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல"

என்ற நூற்பாவால் அறிக.

முற்குறித்த திருவிருத்தத்துள், முதலடிக்கண் 'ஆரூர்' என்றிருப்பதைக் கருத்திற் கொண்டு, மூன்ருவதடியின் முதலெழுத்தை இஃது என்றுணர்தல் அரிதன்று. மிக எளிதே. அவ்வளவு அறிவு சென்றிலதாயின், உண்மையை உணர்ந்து பிரிப்பது மிக அரிதேயாம். எதுகை மோனை அறிந்தவராயின், அவர்க்கு அதன் உண்மை தெரியலாம். பிரிக்குமாறும் பிரிக்கலாம். 'நம்பிநந்தி' என்பது மூன்ருவதடியின் ஈற்றுச்சீர். அச்சீரின் முதலெழுத்தாகிய நகரத்திற்குரிய மோனையெழுத்தே அதன் முதற்சீரின் முதலெழுத்தாக அமைந்துள்ளது. அது நகரமெய்யாகும். ஆகவே, நாரூர் நறுமலர்' என்றே பிரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும் என்பது நன்கு விளங்கும். 'ஆரூர் நறுமலர்' என்று பிரித்துள்ள பதிப்புக்கள் உள்ளன. அத் திருவிருத்தத்தின் மூன்ருவதாக உள்ள திருவிருத்தம் 'அடித்தொண்டனந்தியென் பானுளனூரூர முதினுக்கே' என்றிருப்பதை அடித்தொண்டன் அந்தியென் பானுளன் நாரூர் அமுதினுக்கே எனப் பிரிக்காது விட்டதற்கு நாம் இன்புறல் வேண்டும். இவ்வாறு முன்னையோர் பால் யாண்டும் காண்டல் இயலாது.

இங்கு "நாரூர் நறுமலர் நாதன்" என்று கொண்டு பொருளுரைப்பதே நாவரசர் நல்லருளுள்ளக்கிடக்கை. ஆரூர் நறுமலர் எனப் பிரித்தது புண்ணியம் ஆகாது.

திருவாரூர்த்தியாகேசர்க்கே செங்கழுநீர் மாலை செவ்வந்திமாலை இரண்டும் சிறப்பின் உரியன. செங்குவளைமாலையும் அத்தகைய சிறப்பினதே.

"திருமார்பிற்
பார்த்தமையும் நக்கமையும்
பாய்ந்தென்னச் செங்கழுநீர்
சேர்த்தமையும் முத்தும்
சில பூண்டு—மார்த்தாண்டன்
முன்னந் தனைமறைத்த
முன்னேன்"

எனவும்,

"செவ்வந்தி மாலை நீலவானம் திருமார்பிற்
செவ்வந்தி மாலை தெரிசியீர்"

எனவும் திருவாரூருலாவில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடிய வற்றுலும், அவ்விருமாலையும் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானுக்குச் சிறந்தமை புலப்படும்.

முற்காலத்தில் மகளிர் செயலின் மாண்பைத் தெரிவிக்கும் பற்பலவற்றுள் ஒன்று இது :—செவ்வந்தியைப் பயிரிட்டு வளர்த்து வந்த பெண், ஏழு செவ்வந்திக்கு ஏழு பெயர் வைத்து, அப்பெயரால் அவற்றைக் குறித்தும்,வளர்த்துக் கொண்டும் வந்தாள். அவற்றுள் ஒன்று **'வீதி விடங்கு'** என்ற திருப் பெயருடையது. தியாகேசர்க்குச் செவ்வந்தி சிறப்பானது என்பதனை அதனுலும் அறியலாம். ஏழூரிலும் தியாகராசப்பிரான் இருப்பினும், அவர் ஒருவரே ஆவார். ஏழாவார் அல்லர். **ஆதிவிடங்கர், அவனிவிடங்கர், புவனிவிடங்கர், நீலவிடங்கர், நகரவிடங்கர், வீதிவிடங்கர், அழகவிடங்கர்** என்பவற்றை,

> **" ஆதி அவனி புவனிதிரு நீலநகர்**
> **வீதி யழக விடங்கென்னும்—சோதிதிருப்**
> **பேரேழும் இட்டுப்பெண்மகவாய் நீ வளர்த்த**
> **ஓரேழ செவ்வந்திக் குள்ளோங்கி—ஆரூரன்**
> **நாமத்த தொன்றும் அலர்ந்தது "**

என்ற (திருவாரூர் உலாக்) கண்ணிகளில் அமைத்தும் **'வீதிவிடங்கு'** என்னும் செவ்வந்தியின் பெயரீடு குறித்தும் உணர்த்தினர்.

" தோடலர் செ(வ்)வந்தியத் தோடசைய மார்பிற்றெடுத்த செங்குவளையசைய...ஆடும் உன் அசபநடம் " எனத் தருமைக்குரு மகா சந்நிதானம் அருளிய அசபா நடனப் பதிகத்தும் சிறப்பு மலர், கூறப்படுதல் அறிக.

இவற்ருல், **'நாரூர் நறுமலர் நாதன்'** என்று தியாகராசப் பெருமானைக் குறித்தருளிய நாவரசர் திருவுள்ளம் ஓராறு புலப்படும். இன்றும் திருவாரூரில் தியாகராசப் பெருமானுக்குத் தவனம் மருக்கொழுந்து முதலிய நறுமலர் அணி செய்யும் முறைமை தனிச் சிறப்புடையது ஆதலே, ஆண்டுச் சென்று வழிபட்ட அன்பர் அனைவரும் அறிந்து அகமகிழ்ந்திருப்பர். நறுமலர் தொடுக்கவுதவும் நாரும், தொடுப்பார்க்கு இன்றியமையாது வேண்டும் நாரும் (அன்பும்) இங்குப் பொருளாய் நிற்கும். அந் நறுமலர் புனைந்தருளும் நாதன் வீதிவிடங்கப் பிரான். இவ்விடத்தில் ஆரூர் என்று பிரிப்பது எவ்வாற்றிலேனும் பொருந்துமோ? அறிஞர் ஆராய்ந்துணர்க.

❋

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஸ்ரீ மகாதேவர் தேவஸ்தானம், இரணியல் | சிவராத்திரித் திருவிழா |
| ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், திருத்தணிகை | பிரம்மோத்சவம் |
| ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், திருச்செந்தூர் | மாசித்திருவிழா |
| ஸ்ரீ கூடலழகர் தேவஸ்தானம், மதுரை | மாசிமகம் பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில், காஞ்சிபுரம் | பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ கடம்பவனேஸ்வரர் கோயில், கடம்பர் கோயில் | மாசிமக பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் கோயில், திருக்கண்ணபுரம் | மாசி பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ நடுநக்கர் மத்யபதி ஈஸ்வர சுவாமி கோயில், வேளூர், ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா | மாசித் திருவிழா |
| ஸ்ரீ கோனியம்மன் கோயில், கோயமுத்தூர் | பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ நீலமேகப் பெருமாள் கோயில், குளித்தலை | பொதுமக்களால் லட்சார்ச்சனையும் சந்தனக் காப்பும் நடைபெற்றது. |
| ஸ்ரீ திருமலைக் குமாரசுவாமி தேவஸ்தானம், பெண்கள் உயர்நிலைப் பள்ளி, குற்ருலம் | ஆண்டிறுதி விளையாட்டு விழா |

# வேதக்கல்லூரி

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார், சிதம்பரம்.

பகுதி—2.

இக் கோயிலில் வேதக் கல்லூரி ஒன்று இருந்தது. அதில் இருக்கு, யசுர் என்னும் இரு வேதங்கள் ஓதுவிக்கப்பட்டும், வியாகரணம், ரூபாவதாரம் வக்காணிக்கப்பட்டும் வந்தன. இருக்குவேதம் ஓதுவிப்பார் ஒருவர்க்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும் யசுர்வேதம் ஓதுவிப்பார் ஒருவர்க்கு நாள் ஒன்றுக்கு நெல் பதக்கும், இவர்கள் இருவர்க்கும் பேரால் (per-person) காசு நாலாகக் காசு எட்டும், வியாகரணம், ரூபாவதாரம் வக்காணிக்கும் பட்டர் ஒருவர்க்கு நாள் ஒன்று நெல் தூணியும் ஆண்டு ஒன்றுக்குக் காசு பத்தும் வேதனங்களாக (சம்பளங்களாக)க் கொடுக்கப்பட்டன. எனவே இருக்குவேதம் ஓதுவிப்பார் ஒருவர்க்கு ஆண்டு ஒன்றுக்கு அறுபது கலநெல்லும் நான்கு காசும் யசுர்வேதம் ஓதுவிப்பார் ஒருவர்க்கு ஆண்டு ஒன்றுக்கு அறுபது கலநெல்லும் நான்கு காசும் வியாகரணம், ரூபாவதாரம் இவைகளை விவரித்துக் கற்பிக்கும் பட்டர் ஒருவர்க்கு ஆண்டு ஒன்றுக்கு நூற்று இருபது கலமும் 10 காசும், சம்பளம் (payment) ஆகும்.

இக் கல்லூரியில் இருக்குவேதம் ஓதும் பிராமணர் பதின்மரும், யசுர் வேதம் ஓதும் பிராமணர் பதின் மரும், வியாகரணமும் ரூபாவதாரமும் கேட்கும் பிராமணர், சாத்திரர் இருபதின்மரும், மகா பாஞ்சராத்திரியர் பதின்மரும், சிவப்பிராமணர் மூவரும், வைகாநசர் ஐவரும் ...... இருவரும் ஆக ஓதுவாரும், ஒத்து கேட்பாருமாக அறுபதின்மர் இருந்தனர் இவர்களுக்கு உணவுக்கும், இவர்கள் கிடக்கப் பாய்களுக்கும், ஆண்டு ஒன்றில் 51 சனிக் கிழமைகளில் தலைக்கு ஆட்ட எண்ணெய்க்கும் உண்ணும் சாத்திரர்களுக்கும், கிடைகளுக்கும் பணி செய்யும் பெண்டுகள் இருவர்க்கும், ஒத்து கேட்பார்க்கு இரவில் எரியும் விளக்குக்கும் உணவு சமைப்பவர்களுக்கும் ஆக ஆண்டு ஒன்றுக்கு 1642 கலனே அறுகுறுணி நெல்லும் 37½ காசுகளும் செலவாகி வந்தன.

கிடைகள் = வேதம் ஓதும் குழுவினர்,
சிவப்பிராமணர்—சைவ ஆகமத்தை ஓதுபவர்.

இந்த வேதக் கல்லூரி ஜனநாத மண்டபத்தில் நடைபெற்று வந்தது. 'ஜனநாத மண்டபத்தில் ரிக்வேதம் ஓதுவிப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல்பதக்கும்'...

"ஜனநாத மண்டபத்து ஒத்துக் கேட்பார்க்கு இரா எரியும் விளக்கு ஒன்றுக்கு எண்ணை உழக்காக ஆண்டு ஒன்றுக்கு எண்ணை நூற்றுத் தொண்ணூற்று இருநாழிக்கு" என்னும் கல்வெட்டுப் பகுதிகளே சான்றாகும்.

## பகுதி 3. ஆதுலர்சாலை

ஆதுலர் சாலை என்பது ஆஸ்பத்திரி (Hospital) ஆகும். அதற்கு வீரசோழன் என்று பெயர் இடப்பட்டிருந்தது. வீரசோழன் என்பது வீரராசேந்திர சோழனுக்குரிய பட்டப் பெயர்களில் ஒன்று. இந்த ஆதுலர்சாலை வீரசோழனில் வியாதிப்பட்டுக் கிடப்பார் பதினைவர்க்கும், பலபணி நிவந்தக்காரர்க்கும், கிடைகளுக்கும், சாத்திரர்க்கும் வைத்தியம் சொல்ல ஒருவரும் (A physician), சல்லியக் கிரியை டண்ணுவார் ஒருவரும், (A surgeon) ஆதுலர்க்கு மருந்துகளுக்கு வேண்டும் மருந்து பறித்தும், விறகு இட்டும், பரியாரம் பண்ணுவர் இருவரும், ஆதுலர்க்கு வேண்டும் பரியாரம் பண்ணி மருந்து அடும் பெண்டுகள் (Nurses) இருவரும், ஆதுலர்க்குப் பணி செய்ய நாவிசன் (A barber) ஒருவனும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் வைத்தியர்க்கு ஆண்டு ஒன்றுக்கு 90 கலநெல்லும் காசு எட்டும்; செல்லியக் கிரியை பண்ணியவர்க்கு ஆண்டு ஒன்றுக்கு முப்பது கல நெல்லும், மருந்துகளுக்கு வேண்டும் மருந்து பறித்தும் விறகு இட்டும் பரியாரம் பண்ணிய

இருவர்க்குப் பேரால் முப்பது கல நெல்லும் ஒரு காசும், ஆதுலர்க்குப் பரியாரம் பண்ணி மருந்து அடும் பெண்டுகள் இருவர்க்குப் பேரால் முப்பது கல நெல்லும் ஒரு காசும், ஆதுலர்க்குப் பணி செய்யும் நாவிசனுக்கு பதினைந்து கலமும் ஆண்டுதோறும் கம்பளங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இவைகளன்றி ஆதுலர்சாலையில் இரவில் விளக்கு எரிப்பதற்கு 2¼ காசும், தண்ணீர் கொண்டு வருபவனுக்குப் பதினைந்து கலமும், வேண்டும் மருந்து சேர்த்து வைத்துக் கொள்வதற்கு நாற்பது காசும் ஆண்டு ஒன்றுக்குச் செலவாகி வந்தன.

இவ்வாதுலர் சாலையில் ஆண்டொன்றில் இட்டு வந்த மருந்துகள்:—

பிராமியம் கடும்பூரி ஒன்று.
வாசாகரிதகி படியிரண்டு.
தசமூலஹரிதகி படி ஒன்று.
பல்லாதநகரிதகி படி ஒன்று.
கண்டீரம் படி ஒன்று.
பலாஹேரண்ட தயிலம் தூணி.
பஞ்சாக தைலம் தூணி.
லசுனுதி யேரண்ட தைலம் தூணி.
உத்தம கரணுதி தைலம் தூணி
பில்வாதி கிருதம் பதக்கு
மண்டூரவடகம் இரண்டாயிரம்.
திரவத்தி நாழி
விமலை இரண்டாயிரம்
சுனேத்திரி இரண்டாயிரம்.
தாமராதி இரண்டாயிரம்
வச்சிரகல்பம் தூணிப்பதக்கு
கல்யாணலவணம் தூணிப்பழக்கு

இவை அடுகைக்கு வேண்டும் மருந்துகளுக்கு ஆண்டு தோறும் 40 காசுகள் செலவாகி வந்தன.

## பிறசெய்திகள்

இக்கோயிலில் விரராசேந்திர சோழ மன்னருடைய பிறந்தநாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இம்மன்னர் ஆவணி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர். அன்றைய நாளில் ஆழ்வார்க்குத் திருமஞ்சனத்துக்கும் பெருந் திருவமுதுக்கும் நிவந்தம் அளிக்கப் பட்டிருந்தது. திருச் சுற்றுமாளிகையும் ஜனநாத மண்டபமும் செய்வித்த வைசியன் மாதவன் தானமயன் பிறந்தது கார்த்திகை மாதத்துப் பூராட நட்சத்திரம் ஆகும். அன்று ஆழ்வார்க்குத் திருமஞ்சனத்துக்கும் பெருந் திருவமுதுக்கும் நிவந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இச் செய்திகளை "உடையார் வீரராஜேந்திரதேவர் ஆட்டைத் திருநாள் திருவாயிலியத்தில் ஆழ்வார்க்குத் திருமஞ்சனத்துக்கும் அற்றைநாள் பெருந்திருவமுதுக்கும்"...

"இத்தன்மமும் திருச் சுற்றுமாளிகையும் ஜனநாத மண்டபமும் செய்வித்த வைசியன் மாதவன் தாமையன் பிறந்த கார்த்திகைத் திங்கள் பூராடத்து நாள் திருமஞ்சனத்துக்கும் பெருந்திருவமுதுக்கும் நெல் அறுகலனே ஐங்குறுணி இரு நாழியும் என்னும் கல்வெட்டுப் பகுதிகளால் அறியலாம்.

இக் கோயிலில் திருவாய்மொழி விண்ணப்பஞ்செய்ய இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆழ்வார்க்குப் பரிசட்டமும், ஜனநாத மண்டபத்தில் ஒத்து கேட்பார்க்கும் ஆதுலர்க்குப் ஒலிக்கும் ஈரங்கொல்லிக்கு நாள் ஒன்றுக்கு நெல் நானுழி கொடுக்கப்பட்டு வந்தது (ஈரங்கொல்லி—வண்ணுர்)

இக் கோயிலுக்கு இருந்த நந்தவனத்தின் பெயர் வீரசோழன் திருநந்தவனம் ஆகும். இந்த நந்தவனத்தில் வேலை செய்ய நால்வர் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த நந்தவனத்துக்குத் திருவேட்டை நாளில் ஆழ்வார் எழுந்தருளுவது உண்டு. கணக்கு எழுதினுர்க்கும் திருமடைப்பள்ளிக்கும் ஜனநாத மண்டபத்துக்கும் கிடைகளுக்கும், சாஸ்திரர்களுக்கும் ஆதுலசாலைக்கும் வேண்டும் கலம் இடும் (வேட்கோவர்) நிவந்தங்கள் அளிக்கப்பட்டிருந்தன. 'காலியூர்க் கோட்டத்துத் தேரோடு பருவூர் நாட்டு வயலைக்காவூர் திருமுக்கூடல்' மகாவிஷ்ணுக்கள் தேவதான ஊராக இருந்தது. அவ்வூரின் வருவாயைக் கொண்டு மேற்குறித்த தன்மங்கள் நடை பெற்று வந்தன.

திருமுக்கூடலைத் தன்னகத்துக் கொண்ட நாடு:—

"சயங்கொண்ட சோழ மண்டலத்துத் தனியூர் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து திருமுக்கூடல்"

என்று கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்து, திருமுக்கூடல் என்றிருப்பதால் திருமுக்கூடல் என்னும் ஊர் தனியூராகிய மதுராந்தகச் சதுர்வேதி மங்கலத்துக்கு அருகில் உள்ளது என்பது பெறப்படுகின்றது. ★

# சிவஞான போதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T., காஞ்சிபுரம்.

( முன் இதழ்த் தொடர்ச்சி )

சூத்திரப் பகுதி: "ஊராத்துணைத் தேர்த் தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம்பதி" [காரிய உலகைப் பொய் என உணர்ந்தால் அவ்வுணர்வில் சிவஞானம் விளங்கும்.]

வார்த்திகம்: இனி அசத்தாயுள்ள வன்ன பேதங்களை அசத்தென்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபம் என்று உணரற்பாற்று.

விளக்கம்: 'பசு பாச ஞானங்களைக் கடந்து நிற்கும் பதிப்பொருளைச் சிவஞானத் தால் உன் அறிவில் நாடு'—என முதல் அதி கரணத்தில் விதித்தார் ஆசிரியர். அதனைக் கேட்டார்க்கு, 'சிவஞானம் ஒருவர்க்கு எவ் வாறு விளங்கும்?' என்னும் வினு எழும்: அவ்வவாய் நிலையை முடித்தற்கு எழுந்தது இவ் வதிகரணம். இஃது ஒருவன் உணர்வில் சிவஞானம் விளங்கும் முறையை உணர்த்து கிறது.

யான் என நிகழும் ஆன்ம உணர்வு பளிங் கின் ஒளி போன்றது. அது, நிலையுதலில்லாத காரியப் பிரபஞ்சமாகிய உலகப் பொருள்களை அறிந்து பற்றுச் செய்து வரும்போது, அப் பொருள்களின் தன்மைகளையே தன் தன்மை யாகச் சார்ந்து, பல்வேறு வகைத்தாய் மாறி மாறி நிகழும்: அங்ஙனம் நிகழும் நிகழ்ச்சி, பளிங்கு தன்னை அடுத்துள்ள பல்வேறு நிறங் களைப் பற்றி, அவற்றின் தன்மையாய் நின்று, தன் உண்மையியல்பு தோன்றுது நிற்றல் போல்வது.

இனி, பளிங்கின் வேருகிய நிறங்களை வேற்றியல்பு எனக் காணும்போது பளிங்கின் உண்மையியல்பு விளங்கும்; அதுபோல, ஆன்ம உணர்விற்குச் சார்பாக நிலைத்து உள்ள சிவ ஞானத்தை மறைத்து நிற்கும் அசத்தாகிய (நிலைத்தல் இல்லாத) உலகப் பொருள்களைத் தனக்கு வேறு என்று அறிந்து, அவற்றிற் பற்றுச் செய்யாது நிற்பின் சிவஞானம் வியாபக மாக ஆன்ம உணர்வின்கண் வெளிப்படும்.

அசத்தாயுள்ள வன்னபேதங்களை—என் றது ஏகதேச உருவகம். பளிங்கின் ஒளியை மறைத்து நிற்கும் நிற வேறுபாடுகளைப் போன்று ஆன்மாவின் தன்னியல்பை மறைத்து நிற்கும் அசத்தாகிய உலகப் பொருள்களை என்றபடி இங்குத் தன்னுற் கூறப்படும் பொருள்: உலகப் பற்று அற்ற ஆன்ம உணர் வில் சிவஞானம் விளங்கித் தோன்றும்.

> "திரையற்ற நீர்போல்
> சிந்தை தெளிவார்க்குப்
> புரையற் றிருந்தான்
> புரிசடை யோனே"

என்னும் திருமந்திரம் ஈண்டு நினைத்தற்கு உரியது.

ஐயப்பாடு: பாசப் பற்றறுதியில் சிவ ஞானம் தோன்றுமோ தோன்றுதோ? தோன் றுவதொன்று உண்டென்னில், அது சிவஞானந் தானே, பிறிதொன்றோ?

பிறர் கூறும் பக்கம்: பாசப் பற்றறுதியில் தோன்றுவது ஆன்ம சொரூபமேயாம்; அந் நிலை உணர்வானும் உணர்வும் உணரப்படு பொருளும் எனப் பகுக்கப்படாதது ஆதலின், அதனைச் சொல்லொணுதது எனக் கொள்வ தன்றிச் சிவஞானம் எனக் கோடல் பொருந் தாது. இங்ஙனம் கூறுவோர் மாயாவாதிகள்.

மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு: அளவையாலும் இலக்கணத்தாலும் உள வென்று துணியப்பட்ட பொருள்கள் மூன்று; அவை இறை, உயிர், தளை என்பவை.

அவற்றுள் தனு எனப்படும் காரிய உலகு சுத்தம், கலப்பு, அசுத்தம் என மூவகைப்படும். மூலப் பகுதியின் காரிய மெல்லாம் அசுத்த உலகு எனப்படும்: அவை முக்குண மயம். ஆதலால், அவை அக் குணங்களுள் ஒன்றன் விருத்தி வடிவாய் அறியப்படும்; சிவஞானம் முக்குணங்களையும் கடந்தது; அது குண ரூப மாய் அறியப்படாது. கலப்பு உலகம் மூலப் பகுதிக்கு மேற்பட்டது; குணங்களுக்கு அப் பாற்பட்டது; ஆயினும், மல கன்மம் விரவியது. ஆதலால், அது குண ரூபமாய் அறியப்படாத தாயினும், மல காரியமாகிய மோகம், மதம் முதலிய வடிவிலோ, அல்லது கன்ம காரிய மாகிய இன்பத் துன்ப மயக்க ரூபமாகவோ அறியப்படும். சிவஞானம் நின்மலமனது; அஃது அக்குறிகளால் அறியப்படாது. இனி அதற்கு மேற்பட்ட சுத்த உலகு குணமில்லது, மலமில்லது; ஆயினும் புதிது புதிதாகத் தோன்றும் இன்ப அலைகளை உடையது; அதனுல் அதைச் சாதிசய இன்ப ரூபமாய் அறியக் கூடும். ஆனால் முதல்வனது இன்பம் நிரதிசய இன்பம் (நித்தியானந்தம்). இனி தத்துவங்களைக் கடந்துள்ள ஆன்மாவும் மேற் கூறிய மூவகை உலகைச் சார்ந்து குண ரூப மாகவோ, மல கன்ம காரிய ரூபமாகவோ சாதி சயானந்த ரூபமாகவோ அறியப்படும். சிவஞானம் அவ்வாறும் அறியப் படாதது; அதனுல் அது தற்பரம் (ஆன்மா விற்கும் மேற் பட்டது) எனப்படும். இங்ஙனம் சிவஞானம் பாச பசுக்களின் இயல்பிற்கு வேருய் ஆன் மாவின் சுட்டறிவைக் கடந்து தோன்று தலின் அற்புதம் (சூனியம்) போல்தோன்றும். ஆயினும் வியாபக உணர்வு விளங்கப் பெறும் நிலையில், அனுபூதிமான்களுக்குத் தம் அறிவை விட்டுப் பிரிந்திராத பேருணர்வாய் விளங்கும்: இத் தோற்றம் ஆகாயம் முதலாய தத்துவங்களைப் பொய் எனக் கழற்றிய மெய் யுணர்ந்தோர்க்கு உளதாகும். ஆதலால் அதனைச் சொல்லொணுதது, சூனியம் எனல் வேண்டா. இக் கருத்தை உடையது பின்வரும் உதாரண வெண்பா :—

நிர்க்குணனுய் நின்மலனுய்
நித்தியா னந்தனுய்த்
தற்பரமாய் நின்றதனி
முதல்வன்—அற்புதம்போல்

## ஆனு அறிவாய் அளவிறந்து தோன்ருனே
## வானே முதல்களையின் வந்து

ஆனு அறிவாய்த் தோன்றும் என்பது சோதிக்குட் சோதியாய்த் தோன்றும் என நூல்களுட் குறிக்கப்படும். சிவஞானத்தை அதன் குணியாகிய முதல்வன் என்றது உபசார வழக்கு.

இனி, மேற்கூறியவாறு உணர்வின்கண் விளங்குவதனை ஞான சொரூபம் என்று ஏன் கொள்ள வேண்டும் என்னும் வினு எழக் கூடும். அதற்கு விடை வருமாறு:

உன்னுல் உணர்தற்குரிய பொருள் சுட்டி யுணரப்படும் உலகும் சுட்டுணர்வைக் கடந்து நிற்கும் முதல்வனும் என இரண்டு (ஏழரம் சூத் திரம்). அவற்றுள், அசத்தாகிய உலகைச் சுட் டித் தனக்கு வேறெனக்கண்டபின் செம்மையே உள்ளது சத்தாகிய ஞான சொரூபமே ஆகும். அது ஞான சொரூபமாகாது, ஆன்மாவேயாம் எனின், ஆகாது. அசத்தைச் சுட்டி அதன் வண்ணமாயிருந்து வந்த நீ (ஆன்மா) சத்தா காய்; சத்தாகிய முதற் பொருளை அதற்கு அடிமையாய் நின்று புணர்ந்து அதன் வண்ண மாதலால் உன்னைப் பழைய சுட்டறிவு முற்றிலும் விட்டு நீங்கும். நீங்குதலின், நீ அசத்தும் ஆவாய். அசத்தைச் சத்துடனின்று நீக்கும் தன்மையால் உன்னைச் சத சத்து என்று உணர்ந்து கொள்.

உன் உணர்வுக்கு விடயமாய் வரும் அசத்துப் பொருள்களை 'இது யான் அன்று' 'இது யான் அன்று' என விட்டு, சிவன்யான் (சிவோஹம்) என்னும் பாவனையால் சிவனை உன் உணர்வில் நாடில், கருடோஹம் என்னும் மந்திர பாவனையால் அரவின் விடம் தீர்தல் போலச் சுட்டுணர்வு நீங்கி ஞான சொரூபம் உன் உணர்வில் விளங்கும்.

(தொடரும்)

## செய்திச் சுருக்கம் :

# படத்திறப்பு விழா

சென்னை திருமயிலாப்பூரில், ஸ்ரீ குமாரசாமியார் கழகத்தின் சார்பில், அதன் ஆயுள் தலைவராக விளங்கி வரும் நம் தமிழக முதலமைச்சர் திருமிகு. M. பக்தவத்சலம், B.A., B.L., அவர்களின் படத்திறப்பு விழா, மிகவும் சிறப்புற 8-2-64 சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

அதுபோது அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டாக்டர் சி.பி. இராமசாமி ஐயர், B.A., B.L. அவர்கள், நம் முதலமைச்சர் அவர்களின் படத்தினைத் திறந்து வைத்து, அவர்தம் உயர்குடிப் பிறப்பு—சிறந்த பண்பு நலங்கள்—நாட்டுத் தொண்டு—ஆட்சித் திறன் முதலியன பற்றிச் சிறப்பித் துரைத்தார்கள். இந்து மத அறநிலையங்களின் ஆய்வுக்குழுத் தலைவராகத் தாம் இந்திய தேசம் முழுவதும் சென்று சுற்றுப்பயணம் செய்து, ஆங்காங்கே நேரிற் கண்டு ஆராய்ந்து பெற்ற அனுபவத்தில், தமிழ் நாட்டிற்போல வேறு எங்கணும் இவ்வளவு தூய்மையும் துப்புரவும் விளங்கச் சிறந்த சூழ் நிலையிற் கோயில்கள் நன்கினிது செவ்வனே வைத்துப் போற்றிப் பாதுகாக்கப் படவில்லை எனத் துணிந்து சொல்ல முடியும் என்றும்; ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் தாமே ஒருசிறந்த பக்தராகத் திகழ்ந்து, இனிய எடுத்துக் காட்டாகவும் விளங்கி, பக்தர்களையும் பக்தி நெறியையும் பெருக்கி வருவதுடன், திறமையும் நேர்மையும் மிக்க நல்ல அலுவலாளர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்து, அவர்களின் மூலம் அறநிலையங்களைத் திறம்படக் கண்காணித்துப் போற்றி வளர்த்து வருகின்றார் என்றும்; குறிப்பிட்டுப் புகழ்ந்துரைத்தார்கள்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. S. இராமச்சந்திர ஐயர், B.A.B.L. அவர்கள், சமீப காலத்தில் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டு, மகாகும்பாபிஷேகங்களும் மிக விமரிசையாக நடைபெற்றுள்ளன என்றும்; கோயில்களிலெல்லாம் வழிபாடுகளும் கிரியைகளும் பிரமோற்சவங்களும், சாஸ்திரோக்தமாகவும், சம்பிரதாயங்கள் வழுவாமலும், சிறப்புற நடைபெற்று வருகின்றன என்றும்; வருவாய் மிகுதியாக உள்ள கோயில்களிலிருந்து வருவாய் இல்லாத கோயில்களுக்கு நிதியுதவிகள் செய்து, அவற்றைப்புதுப்பித்தும் - பழுது பார்த்தும் - மற்றும் பல வளர்ச்சித் திட்டங்கள் வகுத்தும் - பேணிப் பாதுகாத்து வர முயற்சிகள் எடுத்துக் கொண்டுள்ளமை, பெரிதும் பாராட்டி மகிழத் தக்கது என்றும்; வியந்து புகழ்ந்து மகிழ்ந்துரைத்தார்கள்.

அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், அமைச்சர் திருமிகு பக்தவத்சலம் அவர்கள், சேக்கிழார் திருமரபில் தோன்றி, அவரைப் போலவே சமய வுணர்வையும் சமயநிலையங்களையும் பாதுகாத்துப் பரப்பி வளர்த்து வருகின்றார் என்று, பல சிறப்புகளைக் குறித்துப் பாராட்டுரை பகர்ந்தார்கள்.

செந்தமிழ்த் தெய்வச் சேக்கிழார் பெருமான்
திருமரபு ஒளிமிகத் தோன்றி,

அந்தநற் சான்றோர் அடிச்சுவடு ஒற்றி
அமைச்சியற் பொறுப்புகள் தாங்கி,

'இந்திய தேசம் முழுதுமே இவைபோல்
இலை' எனக் கோயில்கள் எல்லாம்

நந்தமிழ் நாட்டிற் புரக்கும், நம் பக்த
வத்சல னார், நன்று வாழ்க !

—ஆசிரியர்

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சிலகாலம் சென்றபின் எம்பெருமானார் தனியராகத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார். நம்பியை ஸேவிக்கச் சென்றவர் அவர் திருமாளிகையில் அவரைக் காணாமையாலே அவரது திருக்குமாரி தேவகி நாச்சியாரிடம் திருத்தகப்பனார் எங்கே என்று கேட்டார். அவளும் "அப்பா மேல் தளத்திலே எழுந்தருளியிருக்கிறார்" என்று பதிலிறுத்தார். எம்பெருமானார் மேலே சென்றார். அங்கே நம்பிகள் தியான சமாதியில் எழுந்தருளியிருந்தார். அந்நிலையிலிருக்கும் அவருடைய சமாதி நிலையைக் கலைக்கலாகாது என்று எண்ணிய எம்பெருமானார் எட்ட நின்றே அவரை அஞ்சலி செய்து கீழிறங்கிக் கூடத்திலே இருந்தார். ஒரு முகூர்த்த நேரம் சென்றது. நம்பிகள் இறங்கிவந்தார். உடையவரும் அவர் திருவடிகளிலே தண்டனிட்டுக் கிடக்க நம்பிகள் அவரைத்தம் இரு கையாலும் வாரியெடுத்து அவர் கையைப் பிடித்துக் கொண்டு மேல்தளத்துக்கு அழைத்துச் சென்றார். சென்றதும் படிக்கதவைத் தாழவிட்டு அடைத்து உடையவரை அழைத்து நாம் இப்போது உமக்குச் சில பரமரகசியங்களை வெளியிடப் போகிறோம். அதனை நீர் ஒருவர்க்கும் சொல்லுவதில்லை என்று நம் திருவடிகளைத் தொட்டு ஆணையிடும் என்று நியமித்தார். இராமாநுசரும் அப்படியே செய்தார். நம்பியும் உனக்கு உத்தமமான ஹிதவசனத்தை இப்போது கூறுகிறேன். நீ உறுதியுள்ளவனாக நின்று அதனைக்கேள் என்று கூறிப் பரந்தாமன் அருச்சுனனுக்கு அருளியதுபோல சரமச்லோகத்தை அருளிச் செய்து, அதனால் குறிக்கப் படுகிற, பிற உபாயங்களை விலக்கியே பற்றக் கடவதான ஸித்தோபாயத்தின் சீர்மைகள் யாவற்றையும் விளங்கக் கூறி இந்த உயர் மறைப் பொருளை நம்பாதார் செவிகளில் விழாதபடி பேணிச் செல்வீராக என்று நியமித்தார். உடையவரும் கை கூப்பிநின்று "சுவாமீ! நம்பாதார்க்கு அடியேன் சொல்லக்கடவேன் அல்லேன். ஆகிலும் இறையன்பில் ஊறிய கூரத்தாழ்வானுக்கு மாத்திரமாவது சொல்லக் கூடாதா?" என்று விநயமாகக் கேட்டார். நம்பிகளும் கூரத்தாழ்வானிடத்திலே இராமாநுசருக்கு இருந்த கிருபையை உள்ளமெச்சியவராய், "சரி" எனினும், பலவிதத்தாலும் அவருடைய மனவுறுதியைச் சோதித்து அறிந்து "ஓராண்டு காலம் பணிவிடை கொண்டு அப்பால் அவருக்குச் சொல்லக் கடவீர்" என்று நியமித்தருளினார். உடையவரும் உளம்நிறைந்தவராய்ச் சென்றார்.

மறுநாள் எம்பெருமானார், நம்பிகள் திருவடிகளை வணங்கி நின்று நம்பிகளை நோக்கி "ஸ்வாமீ! அடியேன் நேற்றுத் தேவரீர் திருமாளிகை வந்தபோது தேவரீர் மேல் தளத்திலே தியான ஸமாதியில் எழுந்தருளியிருந்தீரே! அவ்விஷயமென்ன? அதற்குரிய மந்திரங்கள் எவை என்பதை அடியேனும் தெரிந்து கொள்ளலாமா?" என்று விநயத்துடன் வினவினார். நம்பிகள் உடையவரை உகந்து நோக்கி "ஸ்ரீ ஆளவந்தார் கோயிலில் எழுந்தருளியிருந்த காலத்தே அவர் வடதிருக்காவேரியில் குனிந்து கவிழ்ந்து நீராடும்போது செக்கச் சிவந்த அவர் திருமேனியின் பின்னழகுதான் அந்தத் தியானத்துக்கு விஷயம். அதையே நான் அல்லும் பகலும் சிந்தை செய்து அநுபவிக்கிறேன். அம்மகானுடைய திருநாமத்தில் அடங்கிய ஆறு எழுத்துக்களுமே அந்த தியானத்துக்கு மந்திரம்" என்று அருளிச்செய்தார்.

உடையவரும் அதனைக்கேட்டு வியப்படைந்த வராய் ஸ்ரீ ஆளவந்தாரை நாம் சேவித்தறியாத இழவை, நம்பிகள் தீர்த்து வைக்கிறார் போலும் என்று எண்ணியவராய், ஸ்ரீ ஆளவந்தார் பக்கல் நம்பிகளுக்கு உள்ள கனத்த பக்தியை அறிந்து களித்தவராய், ஸ்ரீ நம்பிகளிடம் விடைகொண்டு கோவிலுக்கெழுந்தருளினார்.

உடையவர் திருவரங்கத்தே எழுந்தருளியிருக்கையில் ஒருநாள் கூரத்தாழ்வான் அவரிடம் வந்து அவரைத் தண்டம் ஸமர்ப்பித்து நின்று கொண்டிருந்தார். உடையவர் அவரை நோக்கி ஆழ்வானே! ஸ்ரீ ஆளவந்தார் நம்மை விசேஷ கடாக்ஷம் பண்ணிப் பேரருளாளனை நோக்கிப் பிரபத்தி பண்ணியருளினது பலன் பெற்றதாமாறு திருக்கோட்டியூர் நம்பிகள் நம்மை வாழ்வித்தருளினமை கண்டீரோ?'' என்று உளம் பொங்க உரைத்தார். கூரத்தாழ்வானும் 'ஸ்வாமீ! நம்பிகள் தேவரீருக்கு அருளிய விசேஷ அர்த்தங்களை அடியேனுக்குத் தேவரீர் கூறியருளவேணும்' என்று பிரார்த்தித்தார். எம்பெருமானார் "நாம் நம்பிகளிடம் கேட்டறிந்த சிறந்த பொருள்களை உமக்குச் சொல்ல வேண்டுமாகில் உம்மை ஒரு ஆண்டு காலம் அடிமை கொண்டு பலவிதங்களிலும் உம்மைச் சோதித்து உம் உறுதியின் கனத்தைத் தெரிந்து கொண்ட பிறகே உமக்கு உரைக்கும்படி நம்பிகளின் ஆணை'' என்று பதிலிறுத்தார். ஆழ்வான், "ஸ்வாமீ! தேவரீர் சொல்வது சரி- ஆனால் ஓராண்டு காலம் அடியேன் சரீரம் நிலைக்கும் என்று எங்ஙனம் உறுதி கூறுவது? யார் கூறுவது? அப்படி ஏதேனும் நேரும்படியிருப்பின் அடியேனுடைய ஆன்மா அந்த உய்பொருளை உணராதே கழிவதா?'' என்று கெஞ்சலும் கண்ணீருமாக விண்ணப்பித்தார். உடையவரும் இவருடைய பெரிய அவாவைக்கண்டு உகந்த உள்ளத்தராய் 'ஆழ்வானே உம்முடைய ஆசையின் வேகத்தைத் தெரிந்து கொண்டோம். எனினும் ஆசார்யனான நம்பிகள் கட்டளையை மீறவும் கூடாதென்று நினைக்கிறோம். ஆசார்யன் ஸன்னிதியில் ஒருமாதம் உபவாசம் இருந்தால் அது ஒரு வருட அந்தரங்க கைங்கர்யத்துக்குச் சமம் என்று சாத்திரங்கள் கூறும். அதனால் அப்படியாவது செய்யும்'' என்று நியமித்தார். ஆழ்வானும் அவ்வரும் பொருள்களைப் பெற்றல்லது தரியாத வேகமுடையவராதலால் அப்படியே ஒருமாத காலம் உபவாசமிருந்து பின் எம்பெருமானாரை வந்து தண்டனிட்டுப் பிரார்த்திக்க அவரும் ஆழ்வானுக்கு சரமச்லோக அர்த்த விசேஷங்களை வெளியிட்டருளினார்.

இதை அறிந்த முதலியாண்டானும் உடையவர் திருவடிகளிலே வந்து தண்டனிட்டு அடியேனுக்கும் ஆழ்வானுக்கு அருளியது போன்று அர்த்த விசேஷங்களை அருளிச் செய்யவேணும் என்று பிரார்த்தித்தார். உடையவரும் ஆண்டானை ஆழ்வானுக்கு மட்டும் சரமச்லோகார்த்தத்தை உபதேசிக்க நம்பிகளிடம் நாம் அனுமதி கொண்டோம். உமக்கும் அவ்வர்த்தத்தில் ஆசையிருக்குமாயின் நேரே நம்பிகளைத்தண்டனிட்டுப் பெற்றுக் கொள்ளும் என்று கூறினார். உடனே முதலியாண்டானும் எம்பெருமானாரிடம் விடைபெற்று திருக்கோட்டியூர் நம்பிகளைக் கண்டு கேட்க ஆறு மாதம் காத்திருந்தார். அப்பால் நம்பிகள் இவரை அழைத்து, வந்த காரியம் என்? என்று கேட்டார். ஆண்டானும் தமது உள்ளக் கிடக்கையை விண்ணப்பிக்க நம்பிகள், சற்றே தம்திருவுள்ளத்தே நினைந்து ஆண்டானை நோக்கி "வித்தையில் விஞ்சியிருக்கிறோமே என்று எண்ணுகிற மதமும், செல்வத்தில் விஞ்சினவனாயிருக்கிறோமே என்று எண்ணுகிற மதமும், உயர்குலத்தில் பிறந்திருக்கிறோம் என்று எண்ணுகிற மதமும் ஆகிய முக்குறும்புகளையும் ஞானம், பக்தி, வைராக்யம் என்ற இம்மூன்று அங்குசங்களாலே கண்டித்து ஒழித்துக் கொள்ளுபவர்க்கே கொடுப்பதாகிற மேம்பொருளை நீர் நாடிக் கேட்கின்றீர். இம்மூன்றும் உம்மிடத்தில் ஒழிந்திருக்குமானால் எம்பெருமானாரே உமக்கு இரங்கி அருளுவர். நீர் அஞ்சாதே போம் என்று கூறி அவர்தம் தலையில் தம் பாத இலச்சினை வைத்து எம்பெருமானார் பாடே போம் என்று விடை கொடுத்தார். ஆண்டானும் அவ்வுரைகேட்டு, நம்பிகள் கூறிய முக்குறும்புகளில் தம்மில் ஒட்டியிருந்தவற்றை உள்ளத்தே நீக்கி, நம்பிகளின் திருவடி தீண்டப் பெற்றமையால் தன் ஆன்ம குணங்கள் பெருகியவராய்க் கோயிலுக்கு எழுந்தருளி "எம்பெருமானார் திருவடிகளே சரணம்'' என்று கதறியவராய் அவர் திருவடிகளிலே விழுந்து கிடந்தார்.

(தொடரும்)

# கண்ணன் : சொற்பொருள் ஆராய்ச்சி

[வித்துவான். திரு. வி. கே. ஸ்ரீநிவாஸாசாரி, ஸ்ரீவில்லிபுத்தூர்.]

**கண்(அறிவு) அளிப்பவன் கண்ணன்,**

இனி, கண்ணன் என்பதற்கு ஞானப்ரதன் அதாவது மெய்யறிவு அருளுபவன் என்ற பொருளும் உண்டு என்பதை நோக்குவோம்.

'கண்' என்ற சொல் அறிவு என்ற பொருளில் வழங்கி வருகிறது. இதற்கு ஆதாரமாகத் திருக்குறளில் ஒரு வழக்கைக் காணலாம்.

கள்ளுண்ணுமை என்ற அதிகாரத்தில் வரும்,

> " உள்ளொற்றி உள்ளூர்
> நகப்படுவர் எஞ்ஞான்றும்
> கள்ளொற்றிக் கண்சாய் பவர் "

என்ற குறளில்,

" எவனொருவன் கள்ளை மறைந்து நின்று குடிக்கிறுனே அவன் அக் கள்ளின் மதத்தால் அறிவு தளர்வான். இவ் அறிவுத் தளர்ச்சியை அறிந்த ஊரார் அனைவரும் அவனைக் குடிகாரன் என்று எப்பொழுதும் இகழ்வார்கள்" என்று கூறியிருக்கிருர். இங்கு, 'கட்குடிப்பதால் அறிவு தளர்வார்' என்று கூறவந்த இடத்தில் " கள்ளொற்றிக் கண்சாய்பவர் " என்று அறிவைக் 'கண்' என்ற சொல்லால் குறிப்பிட்டருளினுர் தெய்வப் புலமைத் திருவள்ளுவனுர். இதனுல் 'கண்' என்ற சொல்லுக்கு அறிவு என்ற பொருளில் வழக்கு உண்டு என்பதை அறிகின்ருேம்.

மேலும், கல்வி என்ற அதிகாரத்தில் கற்ருரது உயர்வும், கல்லாதாரது இழிவும் கூறுமிடத்து,

> " கண்ணுடையர் என்பவர்
> கற்ருேர் முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லாதவர் "

என்று கூறியிருக்கிருர்.

இதில், ஞானக்கண் (மெய்யறிவு) உடைமையால் கற்ருரைக் கண்ணுடையர் என்றும், மெய் அறிவு இன்றிக் கண் வலி முதலிய நோயால் துன்பம் செய்யும் வெறும் ஊனக்கண்ணே உடைய கல்லாதவரைப் புண்ணுடையர் என்றும் உரைத்துள்ளார். ஆகவே இக்குறளில், கற்ருரைக் கண்ணுடையர் என்று கூறியிருப்பதால், இவ் ஆதாரத்தாலும் 'கண்' என்ற சொல்லுக்கு அறிவு-ஞானம் என்ற பொருள் உண்டு என்பது வலியுற்றதாயிற்று.

இதனுல், அறிவைப் பிறருக்கு அருளுபவன் என்ற கருத்தில் கண்ணன் சொல் வழங்கலாம்என்பது தேறப்பட்டது.

இக் கருத்தைத் தெய்வக் கவி **கம்ப** நாடர் சொற்பொருள் விரித்தல் என்ற உத்தியின்படி தாமே விவரித்திருக்கின்ருர். ஆதலின் சொற்பொருள் விரித்தலுத்தியைச் சிறிது விளக்கிப் பிறகு அவரது கவிதையைக் காணலாம்.

கவிஞர்கள் தாம் செய்கிற கவிதையில், பதிக்கும் சொற்களில் எச் சொல்

லுக்கு விளக்கம் தர வேண்டும் என்று எண்ணுகிறார்களோ அச் சொல்லையும் அதன் விளக்கத்தையும் அக்கவிதையில் தாமே எடுத்து உரைப்பர். இவ்வாறு உரைப்பதற்குச் சொற் பொருள் விரித்தல் என்று பெயர்.

இதற்கு மேற்கோளாகச் சில கவிதை களைக் கீழே காணலாம்.

**" என்றும் மறந்தறியேன் என்நெஞ்சத்**
**தேவைத்து**
**நின்றும் இருந்தும் நெடுமாலே—என்றும்**
**திருஇருந்த மார்பன் சிரீதரனுக் காளாய்க்**
**கருவிருந்த நான்முதலாம் காப்பு."**

இப்பாசுரத்தில் 'சிரீதரன்' என்ற வடசொல்லுக்குரிய பொருளைத் தாமே விளக்க வேண்டுமென்ற கருத்துடைய ஆழ்வார் 'திரு இருந்த மார்பன்' என்று முதலில் பொருளை விளக்கிக் கொண்டு பின் அப்பொருள் கொண்ட 'சிரீதரன்' என்ற சொல்லைக் கூறியிருக்கிறார்.

கம்ப நாட்டாழ்வாரும் 'சரபங்கர்' என்ற சொல்லுக்கு மேற்கூறிய உத்தியின் படி தாமே பொருளை அழகாக விரித்துக் கூறியிருப்பதால் அதையும் ஈண்டுக்காண லாம். 'சரபங்கர்' என்று சொல்வதற்குப் பதில் அதன் பொருளை,

**'மீன்வரு கொடியவன் விறலடு மறவோன்**
**ஊன்வரும் உலகையின் உரைநனி புரிவான்'**

என்ற விடத்து, சிற்றின்பத்தை வளர்க்கும் காமனை அடிப்படுத்து வென்றவர் (மன் மத சரத்தைப் பங்கப்படுத்தியவர்) என்று பொருள்பட 'மீன் வரு கொடியவன் விறல் அடு மறவோன்' என்று கூறினார். இதனால் 'சரபங்க' சப்தம் விளக்கப்பட்ட தாயிற்று. இவ்வாறே பல மேற்கோள்களை 'சொற்பொருள் விரித்தல்' உத்திக்கு உதவியாக உயர்ந்த கவி காவியங்களில் காணலாம்.

இக் கருத்தை உள்ளத்துக் கொண்டு கூறப் போகும் கம்ப நாடரது கவிதையை நோக்கினால் சொற்பொருள் விரித்தல் உத்தியில் 'கண்ணன்' சொற் பொருள் விளக்கப்பட்டிருப்பது நன்கு புலனாகும்.

பஞ்சவடியில் இருக்கும் இராமபிரா னைத் தெய்வாதீனமாகக் கண்ணுற்றாள் சூர்ப்பணகை. கண்ணுற்றதும் அப்பிரான் மீது கரையில்லாக் காதலும் கொண்டாள்.

**'வயிறுடை யரக்கி எவ்வுயிரும் இட்டதோர்**
**வயிறுடையாள் என மறுக்கும் ஆதலால்**
**குயில் தொடர் குதலை ஓர் கொவ்வைச் செவ்வி**
**மயில் தொடர் இயலியாய் மருவல் நன்று' [வாய்**

என்று மனத்தில் எண்ணி இலக்குமி தேவியின் கருணையால் மிக அழகான உருவத்தையும் அடைந்தாள்.

**'தேனின் மொழி உற்று இனிய செவ்வி நனி**
**பெற்று ஓர்**
**மானின் விழி பெற்று மயில் வந்தது என'**

இராமபிரான் அருகில் காமவல்லி என்ற புனை பெயருடன் வந்து சேர்ந்தாள்.

அவளது ஆபரண ஓசை முதலிய குறிப்பால் ஒரு தையல் வருகிறாள் என்று கோமகனும் அத்திசை குறித்து விழித் தான். இவ்வாறு விழித்தவன் காமவல்லி யாம் சூர்ப்பணகையின் எழிலை, காணு தது கண்டவன் போல் இறும்பூதெய்தித் தன் இரு கண்களாலும் கண்டு நின்றான்.

இந் நிகழ்ச்சியைச் சொல்ல வந்த மகாகவி இங்கு தான் 'கண்ணன்' சொல் லுக்குரிய விளக்கத்தைத் தாமே செய்கிறார்.

**விண்ணருள வந்ததொரு மெல்லமுத மென்ன**
**வண்ணமுலை கொண்டிடை வணங்கவருபோழ்தத்**

**தெண்ணருளி ஏழைமை துடைத்தெழு**
**மெய்ஞ்ஞானக்**
**கண்ணருள் செய்கண்ண னிரு கண்ணினெதிர்**
**கண்டான்**

என்பது அக்கவிதை. இக்கவிதையில் அவ்வழகியை ராமன் கண்டான் என்று சாதாரணமாகச் சொல்ல விரும்பாத மகா கவி, ராமனுடைய தெய்வத் தன்மையை நினைவுறுத்திக் கொண்டு, "இத்தகைய தேவாய் நின்றவனே சூர்ப்பணகையின் அழகைப் பார்த்து வியந்து நின்றான்" என்று கதையை அநுபவிக்க ஆசைப் படுகிறார். அதனால் பகவானுக்கே உரிய, அறியாமையைப் போக்கி மெய்யறிவைக் கொடுக்கும்,'மயர்வற மதிநலம் அருளுதல்' என்ற சிறப்பை ராமனுக்குக் கூறி அநு பவிக்கிறார். அச்சிறப்பு இக் கவிதையில் 'ஏழைமை துடைத்து எழும்மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய் கண்ணன்' என்ற தொடரால் கூறப்பட்டிருக்கிறது. அறிவு என்பது பொதுவாக இருப்பதால் பொய் யறிவை விலக்கித்'தத்துவ ஞானம்' என்று சொல்லப்படும் மெய்யறிவை உணர்த்து வதற்காக மெய்ஞ்ஞானக் கண் என்று கண்ணுக்கு (அறிவுக்கு) "அடைமொழி கொடுத் தோதப்பட்டது. அத்தகைய கண்ணை (அறிவை) எவன் அருள் செய் கிறானோ அவனே கண்ணன்" என்று சொற் பொருள் விரித்தல் உத்திப்படி 'மெய்ஞ்ஞானக் கண்ணருள் செய் கண் ணன்' என்று கண்ணன் சொல்லையும் அதற்குரிய பொருளையும் தாமே விளக்கி னார். இங்கு 'அறிவு அருள் செய்' என்று கூறவேண்டிய இடத்து 'கண்ணருள் செய்' என்று அறிவை உணர்த்தும் 'கண்' சொல்லைக் கூறி அவ்வறிவை அரு ளுபவன் என்ற கருத்தில் 'கண்ணன்' என்று கூறினாராயிற்று.

இதனால் கண் (அறிவு) அளிப்பவன் என்ற பொருளிலும் கண்ணன் சொல் வழங்கும் என்று உணர்த்தப்பட்டதா யிற்று. ✱

---

## நிர்வாக அதிகாரிகள் மாற்றங்கள்

| பெயர் | இருந்த இடம் | மாற்றப்பட்ட இடம் |
|---|---|---|
| திரு. ஆர். சாரங்கராசன் | ஸ்ரீ சித்தி புத்தி விநாயகர் கோயில் இராயப்பேட்டை சென்னை. | ஸ்ரீ சித்தி புத்தி விநாயகர் கோயில் இராயப்பேட்டை, ஸ்ரீ மாதவப் பெருமாள் கோயில், மயிலை. |
| திரு. சி. கிருஷ்ணன் | புதியதாக நியமிக்கப் பட்டவர் | ஸ்ரீ நடுதறிநாத சுவாமி கோயில், கன்றாப்பூர், நாகப்பட்டினம் தாலுக்கா. |
| திரு. எஸ். சுப்ரமணியம் | ஸ்ரீ கோடீஸ்வர அய்யர் தர்மம், தஞ்சை. | ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோயில், கும்பகோணம். |
| திரு. எஸ். தங்கவேலு | ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் கோயில், கும்பகோணம். | ஸ்ரீ சாரநாதப் பெருமாள் கோயில், திருச்சேறை, கும்பகோணம் தாலுக்கா. |
| திரு. ஏ. என். பார்த்தசாரதி | ஸ்ரீ சாரநாதப் பெருமாள் கோயில், திருச்சேறை கும்பகோணம் தாலுக்கா. | ஸ்ரீ சீனிவாசப் பெருமாள் கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் தாலுக்கா. |
| திரு. எஸ். அரங்கசாமி | ஸ்ரீ அனந்தீஸ்வரர் முதலிய கோயில்கள், சிதம்பரம். | ஸ்ரீ இலட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், டி. வி. புத்தூர். விருத்தாசலம் தாலுக்கா. |

# பரமேசுவர மங்கலம் கல்வெட்டுக்கள் - II

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A.,M.O.L,,Ph D.

## 1. கயிலாசநாதர் கோயிலிலுள்ள தனிக் கல்வெட்டின் முன்புறம்

இது பல்லவ அரசன் நிருபதுங்கவர்மன் (கி. பி. 850—880) 16 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 886 இல்) வெளியானது. பரமேசுவர மங்கலத்துச் சைலேசுவரத்து மகாதேவர்க்குப் படையலுக்காக மண்ணைக் குடிமறம் அடக்கை விழுப்பேரரையன் மகனை நந்தி நிறைமதி என்பவன் சைலேசுவரர் கோவில் கணப் பெரு மக்களிடம் பதினொரு கழஞ்சு பொன் ஒப் படைத்தான். எழுதியவன் சத்துரு சிங்கப் பெருந்தச்சன் 1.

2. அதே கல்லின் பிற்பகுதியில் உள்ள கல்வெட்டு அரசன் பெயர் சிதைந்து விட்டது. 15-ஆம் ஆட்சியாண்டு. சைலேசுவரர் கோவி லுள் கணபதி பட்டாரர் கோவில் ஒரு பார்ப்பனி யால் கட்டப்பட்டது. அவள் அதன் வழிபாட் டுக்கும் விளக்கெரிக்கவும் 40 கழஞ்சு2 பொன் கொடுத்தாள்3.

## பெருமாள் கோவில் கல்வெட்டு

3. பெருமாள் கோவில் எதிரில் நிறுத்தப் பட்டு உள்ள கல்வெட்டு—இது மிகவும் பழுது பட்டுள்ளது. கிருஷ்ணதேவ மகாராயர் காலத் தில் (கி. பி. 1522) இக்கல்வெட்டுத் தோன்றி யது. பெருமாள் கோவில் வைகுண்டப் பெருமாள் எனப் பட்டது என்று அக்கல்வெட்டு4 குறிக் கிறது. அக்கல்வெட்டில் "மகா மண்டலே சுவரர் மேதினி மீசுவர கண்ட கட்டாரி சாளுவ சாளுவ நாகய்ய தேவ மகா அரசர்," என்பது பொறிக்கப் பட்டுள்ளது. இவர் கிருஷ்ண தேவராயர் ஆட்சிக்கு உட்பட்ட தென்மண் டலப் பிரதி நிதியாக இருக்கலாம்.5

## சண்பகேசுவரர் கோவில் கல்வெட்டுகள்

1. கருவறையின் தென் சுவரிலுள்ள கல் வெட்டு. மூன்றும் இராசராசன் காலம் (கி.பி. 1216—1246). ஆட்சியாண்டு இல்லை. கல் வெட்டு முற்றிலும் இல்லை. பரமேசுவரமங்கலம் என்ற சோழ குலதிலக சதுர்வேதி மங்கலம் என்று இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் அவையினர் கோவிலுக்கு நிலதானம் செய் ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.6

2. அதே சுவரில் உள்ள மற்ரெரு கல் வெட்டுப் பழுது பட்டுள்ளது. பரகேசரி இரா சேந்திர சோழதேவன் (முதலாம் இராசேந் திரன் கி.பி. 1012—1044) ஒன்பதாம் ஆட்சி யாண்டில் (கி. பி. 1020) ஒரு விளக்கெரிக்க விளக்குத் தண்டும் 90 ஆடுகளும் ஒருவனல் கொடுக்கப் பட்டன.7

3. வடக்கு மேற்குச் சுவர்களிலுள்ள கல் வெட்டு முதலாம் இராசேந்திரன் மூன்ரும்

---

1. A.R.E. 257 of 1912
2. 40 குன்றிமணி எடையுள்ள பொன்—ஒரு கழஞ்சு பொன் எனப்பட்டது.
3. 258 of 1912
4. இரண்டாம் பரமேசுவரன் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவிலைக் கட்டினவனுகலாம் என்பது ஆராய்ச் சியாளர் கருத்து. அப்பெருமகனே தன் பெயரால் புதுப்பிக்கப்பட்ட பர மேசுவர மங்கலத்தில் எடுப்பித்த பெரு மாள் கோயிலுக்கும் வைகுந்த பெரு மாள் கோவில் எனப் பெயரிட்டிருத்தல் பொருத்தமாகும்.
5. 259 of 1912
6. 260 of 1912
7. 261 of 1912

ஆட்சியாண்டில் (கி. பி. 1014 இல்) வெளியிடப்பட்டது; கிரந்தத்திலும் தமிழிலும் உள்ளது; சிதைந்து உள்ளது.

பரமேசுவர மங்கலம் என்ற நிகரிலி சோழச் சதுர்வேதி மங்கலம் சம்வற்சர வாரியர் கிராமவேலைகளைச் செய்த பிறகு 'இராசேந்திர சோழன்' என்ற சதுச்சாலையில் கூடினர். வகை செய்கின்ற (Settlement Officer) கஞ்சாறன் ஐயன் சூரியன் உடனிருந்தான்.9

4. அதே சுவர்கள் மீதுள்ள மற்றொரு கல்வெட்டு, முதலாம் இராசேந்திரன் 11-ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி. 1017) இது சிதைந்து விட்டது. ஜயங்கொண்ட சோழ மண்டலத்துச் செம்பூர்க் கோட்டத்துப் பரமேசுவர மங்கலமான நிகரிலி சோழச்சதுர்வேதி மங்கலத்துக் கோவில் படையலுக்கு நிலம் தானமாக விடப்பட்டது. ஊர்ச்சபையாரிடம் இந்நிலதானம் ஒப்படைக்கப் பட்டது. ஊர்ச்சபையாருள் சம்வற்சரவாரியர் பன்னிருவர் இருந்தனர்.10

5. அதே கோவில் மண்டபச் சுவரில் உள்ள துண்டுக் கல்வெட்டு. இது முதற் குலோத்துங்கன் (கி.பி. 1070-1122) இருபதாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1089-இல்) ஒரு நிலம் விற்கப்பட்டதைக் குறிக்கும் கல்வெட்டு.11

6. அதே மண்டபச் சுவரிலுள்ள மற்றொரு துண்டுக் கல்வெட்டு. மூன்றும் இராசராசன் மூன்றும் ஆட்சியாண்டில் (கி.பி. 1218இல்) வெளியானது. அது, பரமேசுவர மங்கலம் என்ற சோழ குலதிலக சதுர்வேதி மங்கலம் கோவிலில் ஒரு விளக்கெரிக்க ஒருவன் தானம் செய்ததைக் குறிப்பது.12

7. அதே இடத்திலுள்ள மற்றொரு கல்லிலுள்ள துண்டுக் கல்வெட்டு, திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் காலத்தில் வெளியானது. ஆண்டு காணப்படவில்லை. கி.பி. 1334-5 இல் பட்டமடைந்த பராக்கிரம பாண்டியன் பட்டங்களுள் சிறப்பானது, 'கோனேரின்மை கொண்டான்' என்பது. அவன் கி.பி. 1352 வரையில் பாண்டியன் பிரதிநிதியாகத் தொண்டை நாட்டை ஆண்டான். இத்துண்டுக் கல்வெட்டில் பழம் பட்டினத்தைச் சேர்ந்த பெருமன்றத்து ஆழ்வார் என்பது குறிக்கப்பட்டுள்ளது.13

8. முருகன் கோவில் மேற் கூரையிலுள்ள சிதைந்த கல்வெட்டு. இது வீரபுக்கராய உடையார் மகன் வீரகம்பண உடையார் (கி.பி. 1355—1376) காலத்தில் வெட்டப்பட்டது. ஆண்டு காணப்படவில்லை. இது, சில வரிகள் விதிக்கப்பட்டதை உணர்த்துகிறது.14

9. சண்பகேசர் கோவிலுக்கு எதிரில் கிடத்தப் பட்டுள்ள ஒரு தூணில் உள்ள கல்வெட்டு. அரசன் பெயர் இல்லை. பதையாதான் மாதன் என்ற குலோத்துங்க சோழக் காங்கேயராயன் என்பவன் கோவிலுக்கு ஒரு நந்தவனத்தை வழங்கினான் என்பதை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.15

10. அதே இடத்தில் மற்றொரு தூண்மீது உள்ள துண்டுக் கல்வெட்டு. அரசன் பெயர் இல்லை. ஆட்சி ஆண்டு இல்லை. முதலாம் இராசேந்திர சோழன், அவன் மனைவி தந்தி பிராட்டியார் ஆகிய இருவர் நலத்துக்காக வீரகோச மங்கல முடையார் உடையபிராட்டியார் தானம் செய்தார்; அதுகாறும் கோவில் படையலுக்காக விடப்பட்ட பல கிராமங்களின் நிலங்களில் பயிரிடப் படாதவற்றை உடனே பயிரிடும்படி ஆணையிட்டார்; இதனை ஊர் அவையாருள் குறிப்பிட்ட குழுவினர் கவனிக்கும்படியும் ஆணை பிறப்பித்தார்.16

---

8. நிகரிலி சோழன் என்பது முதலாம் இராசராசன் (கி. பி. 985 — 1012) விருதுப் பெயர்களுள் ஒன்று.
9. 262 of 1912
10. 263 of 1912
11. 264 of 1912
12. 265 of 1912
13. 266 of 1912
14. 267 of 1912
15. 268 of 1912
16. 299 of 1912; A. R. E. 1912, p. 98.

# திருக்கோயில் வழிபாட்டு முறை-4

திரு. ம. வெ. மு. நாகராஜக் குருக்கள், சிறுதையூர், லால்குடி.

**கிரியைவிளக்கம்**

திருக்கோயில் வழிபாட்டிற் குகந்த பணிகள் **'கிரியை'** என்ற பெயரில் கூறப் படுகின்றன. பொதுவாகக் கிரியை என்ற சொல் செயலைக்குறிக்கும். செயல்கள் மனம், வாக்கு, காயம் என்ற முக் கரணங்களினின்றும் வெளித் தோன்று கின்றன. மனத்தின் செயல் நினைப்பது; வாக்கின் செயல் பேசுவது; காயம் என்ற உடம்பின் செயல் தொழில்புரிவது; அறிவின் தூண்டுதலால் மனமும் வாக்கும் உடலும் செயல் படுகின்றன. உயிரறிவு உடம்பில் ஒன்றி இல்லாவிடின் செயலற்ற பிணமாகக் கருதப்படும். மனம், வாக்கு, காயங்கள் அறிவோடு கூடி இருந்தால் தான் மனிதனுல் செயல்பட இயலும். எனவே **வழிபாடு** என்ற தூய்மையான அறச்செயலை உடலாலும், ஐம்பொறி களாலும், மனத்தாலும், அறிவாலும் செய்ய முன். வரவேண்டும். திருக் கோயில் வழிபாட்டுப்] பணிகளைச் சிவா கமங்கள் இம் முறைப்படியே அருளு கின்றன. ஸ்தூலதேஹத்தால் (பருவுட லால்) நல்லொழுக்கத்தோடு செய்யப் படும் கோயிற்பணிகளைச் **சரியை** என்றும், ஞானேந்திரியங்களை வழிபாட்டில் அர்ப் பணிப்பதை **கிரியை** என்றும்; மனம் புத்தி, சித்தம், அகங்காரம், பிராணவாயு இவற்றை அடக்கி, அஷ்டாங்க யோகத் தை மேற்கொண்டு ஆலயவழிபாடு செய் வதை '' **யோகம்** என்றும்; ஆத்ம அறிவு சிவநெறியிற் செயல்பட்டு, அறிபவன் (ஞாதா) அறிவு (ஞானம்) அறியப்படும் பொருள் (ஞேயம்) இம் மூன்றையும் சிவ மயமாகக் காணும் நிலை **'ஞானம்'** என்றும் கூறப் படுகின்றன.

''சரியை தேகத்தால் வழிபடல்; கிரியை
சாருமிந் திரியத்தாற் சிவனைப்
பிரியமாய்ப் பேணல்; யோகமே கரணம்
பிரிபடா தரனடியொன்றல்;
உரிய மெய்ஞ்ஞானம் சிவனைச் சிவனுக்
குணவெனக் கொடுத்தல்; ஈங்கிதனைத்
தெரியகில்லார் தம்வாய் வலிகொண்டு
சீரிழந் துரைப்பர் தீ மொழியே.''

—சிவதர்மவிசாரம்.

சிவாலயங்களில் வழிபாடு நடை பெறப் பணிசெய்பவர்கள், தாசமார்க் கத்தை மேற்கொண்டு சரியை என்ற புறத் தொண்டுகளைச் செய்தல் வேண்டும்; சத்புத்திரமார்க்கத்தை மேற் கொண்டு கிரியைகளைச் செய்ய வேண்டும்; சக மார்க்கம் என்ற தோழநெறி நின்று, அஷ்டாங்கயோகங்களைப் பயின்று சிவ பெருமானை அர்ச்சிக்க வேண்டும்; சன் மார்க்கம் என்ற நல்வழிச் சென்று, ஞான பூஜைகளைப் புரிதல் வேண்டும்.

1. திருக் கோயிலில் வழிபாட்டிற்கு வேண்டிய பணி (வேலை) செய்பவர் கட்குரிய இலக்கணங்கள்; 2. ஆலய

பூஜை பற்றிய செயல் வகைகள் 3; ஆலய வழிபாட்டிற்கு அவசியம் வேண்டிய பொருள்கள் 4; இவ்வற்றை நன்குணர்ந்து ஆகம விதிப்படி ஆலயவழிபாடு நடைபெற வேண்டிய முறைகள்; ஆகிய வற்றை நன்கு ஆராய்ந்து தொகுத்துக் கொண்டு திருக்கோயில்களில் அன்பும் அறமும் சூழ்ந்த ஆலய பூஜாவிதிகளை எல்லோருக்கும் ஏற்ற எளிய முறையில் வகுத்திட வேண்டுவது அவசியம். திருக்கோயிலில் நடைபெறும் வழிபாட்டுச் செயல்களைச் சரியை—கிரியை—யோகம்—ஞானம் என நால்வகையாகக் கூறினோம். இச் செயல்களில் ஈடு பட்டுள்ள கோயிற்பணியாளர்களுக்கு. 1. சீலம் 2. நோன்பு 3. செறிவு 4. அறிவு என்ற நான்கும் வேண்டுவனவாம். சரியை என்றது கர்மேந்திரியங்களாகிய கைகள் வாய் இவற்றால் ஆகும் செயல்களாகும். திருக்கோயில் தலத்தை பசுஞ்சாணத்தால் மெழுகுதல் துப்புரவுசெய்தல் கோலமிடுதல் ஆகியவற்றால் கோயிலைப்பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுதல், நந்தவனம் வைத்துப் பணிசெய்து, பூக்கொய்து மலர் மாலைகள் கட்டுதல், திருவிளக்கு ஏற்றுதல் அபிஷேகம் முதலியவற்றுக்குத் தூய (தண்ணீர்) திருமஞ்சனம் கொண்டு தருதல், வாயினால் இறைவன் புகழைப் பாடுதல், திருமுறைகளை எழுதுதல் வாசித்தல், ஆகிய செயல்களைப் புரிபவர்களைத் தாசமார்க்கத்தினர் என்றுகூறலாம் இப்பணிகளைச் செய்பவர்களுக்குச் சீலம் வேண்டும். நல்லொழுக்கம் நிறைந்தவராக் இருத்தல் வேண்டும். சரியையாளர்க்குச் சீலமும், கிரியையாளர்க்கு நோன்பும், யோக நெறி நிற்பவர்க்கு செறிவும், ஞானத்தை மேற்கொண்டு செயல் படுபவர்க்கு அறிவும் வேண்டுவன. சிவபெருமானோடு கூடுவதற்கு இவைகள் சாதனங்களாக அமைகின்றன.



“சீலமின்றி நோன்பின்றிச்
செறிவேயின்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி
வாரா வுலகநெறியேறக்
கோலங்காட்டி யாண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே

என்ற ஆனந்த மாலை மூன்றும் பாடலில் மணிவாசக சுவாமிகள் சிவானுபவ விருப்பம் காரணமாக அருளிய திருவாசகம் நம் ஊனினை யுருக்கிச் சீலம்-நோன்பு - செறிவு- அறிவு ஆகியவற்றால் உள்ளொளியைப் பரப்புவதாக அமைகின்றது.

### சிவதர்மம்

1. நல்லொழுக்க முடையவர்களாகவும், 2. உறுதியான சிவபக்தியோடு தவம் செய்பவர் களாகவும், 3. அடக்கமுள்ளவர்களாகவும் 4. அறிவுடையவர்களாகவும் இருப்பவர்கள், திருக்கோயில்களில் பணி செய்பவர்களாக இருப்பின் தெய்வ வழிபாடு சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. இனிச் சரியை-கிரியை, இவ்விரண்டு தொண்டுகளையும் சிவதர்மம் எனவும், யோகத்தைச் சிவ யோகம் என்றும், ஞானத்தைச் சிவ ஞானம் என்றும் திருக்களிற்றுப் படியார் என்ற சைவ சித்தாந்த சாத்திர நூல் குறிப்பிடுகின்றது.

சிவதர்மத்தில் மனம் ஊன்ற வேண்டும். இதற்குச் சைவத்திறம் வேண்டும். சிவாலயங்களில் பணிசெய்பவர்கள் எல்லாரும் சைவத்திறம் பெற்றவர்களாக விளங்குதல் வேண்டும். அறம் நிலையானது. அறச்செயல்கள் பல. சரியை-

கிரியைகளைச் சுருக்கமாகச் சிவதர்மம் என்று சொன்னாலும், கர்மேந்திரிய, ஞானந்திரியங்களால் செய்யப்படுகின்ற அறச்செயல்கள் பலவகையாக உள்ளன. சிவதர்மமாகிய சரியை-கிரியைகள் எளிதாகச் செய்வதற்குரிய நல்வினைகளாகும். இந்த நல்வினையின் செயல் முறைகளை நன்கு புரிந்துகொண்டு திருக்கோயிலில் பணி செய்பவர்கள் செயல்புரிய வேண்டும்.

சிவபெருமானை அர்ச்சிப்பதற்குரிய நால்வகை நெறிகளும், இவற்றை மேற்கொண்டு பணிபுரிவதற்கு வேண்டிய சாமர்த்தியமும் (திறமையும்) செய்யும் செயல்களும் நல்வினையாம். எளிதான இவற்றை மெல்வினை (மென்மையான செயல்) என்றது திருக்களிற்றுப் படியார் என்ற அறிவு நூல்.

**" ஆதியை அர்ச்சித்தற்கு**
**அங்கமும் அங்கங்கே**
**தீதில் திறம் பலவும்**
**செய்வனவும்—வேதியனே !**
**நல்வினையாம் என்றேம்**
**நமக்கும் எளிதானவற்றை**
**மெல்வினையே என்றது நாம் வேறு. "**

## சரியை அல்லது தாசமார்க்கம்

சிவதர்மத்தின் ஒரு பகுதி சரியை. ஸ்தூல தேகத்தால் (பருவுடலால்) செய்யப்படும் செயல்களைச் சரியை என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. சரியைக்குரிய பணிகளில் ஈடுபடுபவர்கள் தாச மார்க்கத்தை அனுஷ்டிக்க வேண்டும். தாச மார்க்கத்தில் நின்று செய்ய வேண்டிய செயல்களைத் "தாதமார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற்றலமலகிட்டு இலகு திருமெழுக்குஞ் சாத்திப் போதுகளுங் கொய்து பூந்தார் மாலை கண்ணி புனிதற்குப் பலசமைத்துப் புகழ்ந்து பாடித் தீதிறு விளக்கிட்டுத் திருநந்தவனமுஞ் செய்து திருவேடங் கண்டாலடியேன் செய்வது யாது பணியீ ரென்று பணித்தவர் தம்பணியு மியற்று வதிச்சரியை செய்வோரீசனுலகிருப்பர்" எனச் சிவஞான சித்தியார் கூறுகின்றது (செய்யுள் 8—19).

1. சிவன் கோயில் தலத்தை அலகிட்டு மெழுக்கிட்டுப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளுதல் 2. மலர்களைக் கொய்து வந்து மலர்மாலைகள் கட்டுதல் 3. புகழ்ந்து பாடுதல் 4. தீமை இல்லாத திருவிளக்கேற்றுதல், 5. சிவபக்தர்களைக் கண்டால் என்ன செய்யவேண்டும் என்று கேட்டு அவர்கள் வழிபட உதவி செய்தல், ஆகிய செயல்கள் சரியை எனப்படும். இத்தொண்டு புரிவோர் சாலோகம் என்ற சிவலோகப் பதவியைப் பெற்றிருப்பர் என்று கூறப்படுகின்றது. திருமூலரடிகள் அருளிய தமிழாகமத்திலும் தாசமார்க்கச் செயல்கள் கூறப்படுகின்றன.

**"எளியநல் தீபமிடல் மலர் கொய்தல்**
**அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி**
**தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே."**
திருமந்திரம் 502.

சைவ நாயன்மார் அறுபத்து மூவரில் **கணநாத நாயனார்** என்பவர் சீகாழியில் அமர்ந்துள்ள திருத் தோணியப்பர் கோயிலில் நாடோறும் சரியைக்குரிய திருத்தொண்டுகளை அன்புடன் செய்து வந்தார். தாம் மட்டும் திருக்கோயிற் பணிபுரிவதோடு நில்லாமல், தம்மை விரும்பி வந்து சேரும் அன்பர்களையும் தூய முறைகளினால் செய்யுமாறு பயில்விப்பார்.

தெய்வச் சேக்கிழார் பெருமான் கணநாதநாயனார் வரலாற்றைப் பாடும்

போது 1. அழகிய நந்தவனம் வைத்துப் பணிசெய்தல் 2 நறுமணமுள்ள மலர்களைக் கொய்தல் 3. பலவகை மலர்மாலைகள் புனைதல் 4. அபிஷேகம் முதலியவற்றிற்கான திருமஞ்சனம் (தண்ணீர்) கொண்டு வருதல் 5. அல்லும் நண்பகலும் திரு அலகிட்டு திருமெழுக்கிட்டுக் கோயிலைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் 6. எப்போதும் எரியும்படி திருவிளக்கு ஏற்றுதல், 7. திருமுறைகளை எழுதுதல், திருமுறைகளை வாசித்தல், ஆகிய திருக்கோயிற் பணிகளைத் திறமையாகச் செய்யும்படி தொண்டர்களை ஆக்கி வழிபடுந் தொழில் சிறந்து விளங்கும்படி அன்பும் வாய்மையும் கொண்டு இல்லற வாழ்க்கையில் வாழ்ந்து பெருமை பெற்றமையைப் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார். "நல்லநந்தன வனப் பணி செய்பவர்; நறுந்துணர் மலர் கொய்வோர் பல்பணித்தொடை புனைபவர்; கொணர் திருமஞ்சனப்பணிக்குள்ளோர்; அல்லும் நண்பகலுந் திரு அலகிட்டுத் திருமெழுக்கமைப்போர்கள்; எல்லையில் விளக்கு எரிப்பவர்; திருமுறை எழுதுவோர்; வாசிப்போர்;"

பெரிய புராணப் பாடல் 3930

திருக்கோயில் தலங்களில் திரு அலகிடுவது, திருமெழுக்கிடுவது, மலர் கொய்வது, திருமஞ்சனப்பணி, இவற்றை வடமொழியில் **ஸம்மார்ஜனம் - ஸமாலேபனம் புஷ்பசங்கிரஹணம் - ஜலசங்கிரஹணம் -** என்றெல்லாம் மொழியப் பட்டுள்ளன. காரணாகமத்தில் ஆலய பூஜை தொடங்குவதற்கு முன்னர் இச்செயல்களால் சிவாலயம் மனோரம்மியமாக இருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

திருக்கோயில் வழிபாட்டில் முதலில் செய்ய வேண்டிய பணிகளாகிய 1. திரு அலகிடுதல் 2. திருமெழுக்கிடுதல் 3. பூக்களைக்கொய்து வந்து பூமாலைகள் புனைதல் 4. புகழ்ந்து பாடுதல் 5. திருவிளக்கேற்றுதல் 6. நந்தவனப்பணிபுரிதல் 7. சிவ பக்தர்கள் வழிபட உதவிசெய்தல் 8. திருமுறைகள் எழுதுதல் 9. வாசித்தல் ஆகிய தாசமார்க்கத்தில் செய்ய வேண்டிய சரியைக் குரிய செயல்கள் இக்கட்டுரையில் சாத்திரதோத்திரப் பிரமாணங்களுடன் எடுத்தெழுதப்பட்டன. இச் செயல்களைச் செய்யும் திருக்கோயில் பணியாளர்கட்குச் சீலம் வேண்டும் என்பதும் எடுத்துக் கூறப் பட்டது.

**"ஆமாறுன் திருவடிக்கே**
**யகங்குழையேன் அன்புருகேன்**
**பூ மாலை புனைந்தேத்தேன்**
**புகழ்ந்துரையேன் புத்தேளிர்**
**கோமான்நின் திருக்கோயில்**
**தூகேன் மெழுகேன் கூத்தாடேன்**
**சாமாறே விரைகின்றேன்**
**சதுராலே சார்வானே."**

திருவாசகம் திருச்சதகம் 14.

| | |
|---|---|
| ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி உலகம்மன் கோயில், தென்காசி | மாசிப் பெருந் திருவிழா |
| ஸ்ரீ வாகீஸ்வர சுவாமி கோயில், பெருஞ்சேரி, மாயூரம் தாலுக்கா | பிரம்மோற்சவம் |
| ஸ்ரீ சாக்ஷிநாத சுவாமி கோயில், திருப்புறம்பயம் | பிரம்மோற்சவம் |
| ஸ்ரீ சௌமிய நாராயணப் பெருமாள் கோயில், திருக்கோட்டியூர் | மாசித் தெப்ப உத்சவம் |
| ஸ்ரீ வாஞ்சிநாத சுவாமி கோயில், திருவாஞ்சியம் | மாசிமகப் பெருவிழா |
| ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில், செட்டிகுளம் | பங்குனி உத்திர உத்சவம் |
| ஸ்ரீ பழமலைநாத சுவாமி கோயில், பழமலை | மாசிமகத் திருவிழா |
| ஸ்ரீ அரங்கநாத சுவாமி கோயில், காரமடை | திருத்தேர் விழா |
| ஸ்ரீ ஆதிகும்பேஸ்வர சுவாமி கோயில், கும்பகோணம் | மாசிமகத் திருவிழா |
| ஸ்ரீ மாரியம்மன் கோயில், நத்தம், மேலூர் தாலுக்கா | மாசித் திருவிழா |
| ஸ்ரீ அபராதரக்ஷகர் கோயில், ஆடுதுறை | மாசிமக மகோற்சவம் |
| ஸ்ரீ தீர்த்தபுரீஸ்வரர் கோயில், திருவட்டத்துறை | பிரம்மோத்சவம் |

# உத்தரமேரூர்க் கல்வெட்டுச் செய்திகள்

## முன்னுரை :

கல்வெட்டுகள் பண்டைக் காலத்துச் சமயம்-சமுதாயம்-கால வரலாறு-இலக்கியம்-மக்களின் வாழ்க்கை முறை-பழக்க வழக்கங்கள் என்பவற்றை இக்காலத்தில் நாம் அறிந்துகொண்டு பயன் பெறுதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. பழந்தமிழ்நாட்டில் சேரசோழ பாண்டியமன்னர்கள் செலுத்தி வந்த ஆட்சி, முடியரசு (Monarchy) முறையே எனினும், அது பெரும்பாலும் குடியரசு (Democracy) முறையைத் தழுவியே விளங்கி வந்தது. இக்காலத்திற்போலவே அக்காலத்திலும் தேர்தல்களும் (Elections), தேர்தல் நடைமுறைகளும் (Electoral Procedures), பிறவும் இருந்தன எனத் தெரிகின்றது.

## அகநானூறு

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட "அகநானூறு" என்னும் சங்ககால நூலின் பாடல் ஒன்றில், பின்வரும் கருத்து அமைந்து காணப்படுகின்றது: "பாலை நிலத்தில் இறந்து கிடக்கும் வீரர்கள் சிலரின் பிணங்களைக் கொத்தித் தின்னும் கழுகு முதலிய பறவைகள் தம் அலகினால், இறந்து போனவர்களின் வயிற்றைக் குத்திக் குடைந்து அவற்றின் உள்ளேயிருந்து குடரை வெளியே இழுத்து வருகின்றது. இக் காட்சியானது ஊராட்சிக் குழுவின் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தற் பொருட்டு அதற்குத் தகுதியுடையார் பலரின் பெயர்களையும் ஆராய்ந்து எழுதி ஒரு குடத்தின்கண் போட்டு அதனை இலச்சினை இட்டு, ஊர்ப் பொதுமக்கள் பலரும் திரண்டிருந்து காண, ஆவணமாக்கள் ஓர் இளஞ்சிறுவனைக் கொண்டு, அக்குடத்திலுள்ள ஓலைகளில் ஒவ்வொன்றை எடுக்கச் செய்து, தேர்தல் நடத்தும் செயல்போல உள்ளது."

"குடிபதிப் பெயர்ந்த சுட்டுடை முதுபாழ்க்
கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
தறுக ணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை அஞ்சுவர இருக்கும்"

—அகநானூறு-77.

## குறிப்புரை

[முதுபாழ்-பாலை நிலம். கயிறுபிணி-கயிற்றால் கட்டப்பட்டுள்ள. குழிசி-குடம், (Ballot Box), ஓலை-பெயர்களை எழுதிய பனை ஓலை, (Ballot-Paper). பொறி - இலச்சினை, (Seal). ஆவணமாக்கள்-பெயர் எழுதிய ஓலைகளை ஆராய்ந்து முடிவு கூறும் பெருமக்கள், (Presiding Officers). உயிர்திறம் பெயர-இறந்துபோக. அமர்க்கடந்த-போரில் வெற்றிபெற்ற. தறுகணாளர்-வீரர்களின். குடர் தரீஇ-குடலை இழுத்து (Entrails). தெறுவர-அச்சம் உண்டாக. எருவை-கழுகு, பருந்து. இருக்கும்-வெளியே கொண்டுவந்து போடும்.]

## ஊராட்சிச் சபைகள்

மேற்கண்ட அகநானூற்றுப்பாடலில் வரும் குறிப்பினால் ஊராட்சியமைப்பும், அதன் உறுப்பினர் தேர்தல் முறையும் பிறவும், மிகப் பழங்காலத்திலேயே தமிழகத்தில் நிலவி வந்

தமை தெளியலாம்: இத்தகைய ஊராட்சியமைப்புகள் மானூர், உக்கல், திருவல்லம், ஆதன்பாக்கம், திருப்பாற் கடல், காவேரிப்பாக்கம், மணலி, அன்பில், கூரம், திருத்தணிகை, திருக்கடவூர் முதலிய பல இடங்களில் இயங்கி வந்த செய்தி, பற்பல கல்வெட்டுகளாற் புலனாகின்றது.

அவற்றுள் உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபை, மிகவும் புகழ்பெற்ற தொன்று. அங்குள்ள கல்வெட்டு மிகவும் வரலாற்றுப் புகழ் வாய்ந்ததாகும் திரு கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் (Studies), திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (Evolution) போன்ற அறிஞர்கள், இக்கல்வெட்டைப் பற்றித் தத்தம் நூல்களிற் சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளனர்.

" The Uttaramerur Inscription is one of the most valuable documents in the South Indian Constitutional History. It throws a flood of light on the Committee system of village government, the method of village administration by the assembly, the specified qualifications for membership etc. The real importance of the record lies in the fact that according to it, the **Kudavolai** or lot system was adopted by the Sabha of the place for the purpose of Election to its various standing Committees. "

## பராந்தக சோழன்

ஊராட்சித் தேர்தல் முறை, உறுப்பினர் ஆதற்கு உரிய தகுதிகள், உறுப்பினர் ஆகவொண்ணாத தகுதியின்மைகள், முதலியனபற்றிய செய்திகள் பலவும் உத்தரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள இரண்டு கல்வெட்டுகளால் அறியப் படுகின்றன. அவை இரண்டும் முறையே முதலாம் பராந்தக சோழன் (கி.பி. 907-953) காலத்தில், அவனது 12, 14 ஆம் ஆட்சியாண்டுகளில் (கி. பி. 919 -921) அமைந்தனவாகும். பழைமையும் பெருமையும் மிக்க அக்கல்வெட்டுகள் இரண்டையும் கீழே காண்போமாக!

—ஆசிரியர்.

## முதற் கல்வெட்டு (கி.பி. 919)

"ஸ்வஸ்திஸ்ரீ1 மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மருக்கு2, யாண்டு பன்னிரண்டாவது உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம்: இவ்வாண்டு முதல் எங்கள் ஊர் ஸ்ரீ முகப்படி3 ஆணையினால் தத்தனூர் மூவேந்த வேளான் இருந்து, வாரியம் ஆக ஆட்டொருக்காலும்4 சம்வத்ஸர வாரியமும்5 தோட்டவாரியமும்6 ஏரி வாரியமும்7 இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது:

குடும்பு8 முப்பதாய், முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரே கூடிக், கால்நிலத்து மேல் இறைநிலம்9 உடையான் தன் மனையிலே அகம் எடுத்துக் கொண்டு இருப்பானாய், அறுபது பிராயத்துக்குள் முப்பது பிராயத்து மேற்பட்டார், வேதத்திலும் சாஸ்த்திரத்திலும் காரியத்திலும் நிபுணர் எனப்பட்டு இருப்பாரை, அர்த்த சௌசமும் ஆத்ம சௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறம் வாரியஞ் செய்திலாதார் வாரியஞ் செய்து ஒழிந்த பெருமக்களுக்கு அந்நியபந்துக்கள் அல்லாதாராய்க் குடவோலைக்குப் பேர்தீட்டிச் சேரி வெளியே திரட்டிப் பன்னிரண்டு சேரியிலும், சேரியால் ஒருபேர் ஆமாறு, ஏடும் உருவறிய மாட்டான் ஒரு பாலனைக்கொண்டு குடவோலை வாங்குவித்துப் பன்னிருவரும் சம்வத்ஸர வாரியம் ஆவதாகவும். அதின் முன்பே தோட்ட வாரியத்துக்கு ஷ குடவோலை வாங்கிப் பன்னிருவரும் தோட்டவாரியம் ஆவதாகவும். நின்ற ஆறு குடவோலையும் ஏரிவாரியம் ஆவதாகவும். முப்பது குடவோலை பறிச்சு வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியமும் முந்நூற்று அறுபது நாளும் நிரம்பவாரியம் ஒழிந்த அநந்தரம்10 இடும் வாரியங்கள், இவ்வியவஸ்தை ஓலைப்படியே குடும்புக்குக் குடவோலை இட்டுக் குடவோலை பறிச்சுக் கொண்டே வாரியம் இடுவதாகவும். வாரியஞ் செய்தார்க்குப் பந்துக்களும் அந்நியமமே குடவோலையிற் பேர் எழுதி இடப்படாதார் ஆகவும்.

---

1. நலம் தழைக 2. முதல் பராந்தகசோழர் 3. Royal order 4. ஆண்டுக்கு ஒருமுறை 5. Annual committee 6. Garden committee 7. Irrigation committee 8. **Ward** 9. **Taxable land** 10. பிறகு.

பஞ்சவாரியத்துக்கும்12, பொன் வாரியத்துக்கும்13, முப்பது குடவோலை இட்டுச் சேரியால் ஒருத்தரைக் குடவோலை பறித்துப்பன்னிருவரிலும் அறுவர் பஞ்சவார வாரியம் ஆவதாகவும். சம்வத்ஸர வாரியம் அல்லாத வாரியங்கள் ஒருகால் செய்தாரைப் பின்னை அவ்வாரியத்துக்குக் குடவோலை இடப் பெறுததாகவும். இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்தவத்14, என்றும் குடவோலை வாரியமே இடுவதாகத் தேவேந்திர சக்ரவர்த்தி ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தக தேவர் ஆகிய பரகேசரி வர்மர் ஸ்ரீ முகம் அருளிச் செய்து வரக்காட்ட,

ஸ்ரீ ஆணையினல் தத்தனூர் மூவேந்த வேளான் உடன் இருக்க நம் கிராமத்துத் துஷ்டர் கெட்டுச் சிஷ்டர் வர்த்தித்து வருவாராக15 வியவஸ்தை, உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம்.

## இரண்டாம் கல்வெட்டு (கி பி. 921)

''ஸ்வஸ்தி ஸ்ரீ மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மருக்கு யாண்டு பதினலாவது, நாள் பதினறு, காலியூர்க் கோட்டத்துத் தன் கூற்று உத்தரமேரூர்ச் சதுர்வேதி மங்கலத்துச் சபையோம். இவ்வாண்டு முதல் எங்களுக்குப் பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீ பராந்தக தேவன் ஸ்ரீ பரகேசரி வன்மருடைய ஸ்ரீமுகம் வரக்காட்ட, ஸ்ரீமுகப்படி ஆணையினல் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்க நகர் கரஞ்சை கொண்டையசுக்கிரம வித்தபட்டன்16 ஆகிய சோமாசி17 பெருமான் இருந்து வாரியம் ஆக, ஆட்டொருக்காலும் சம்வத்சர வாரியமும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வியவஸ்தை செய்த பரிசாவது:

### உறுப்பினர் தகுதி :

குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரே கூடிக், கால்நிலத்துக்கு மேல் இறைநிலம் உடையான் தன் மனையிலே அகமும் எடுத்துக் கொண்டு இருப்பானய், எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தையாண்டு பிராயத்தின் மேற்பட்டார் மந்திர பிராமணம் வல்லானய் ஓதுவித்து அறிவானைக் குடவோலை இடுவதாகவும். அரைக்கால் நிலமேயுடையானயினும், ஒருவேதம் வல்லானய் நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்து16 அறிவானயின், குடவோலை எழுதிப் புக இடுவதாகவும். அவர்களிலும் கார்யத்தில் நிபுணராய் ஆசாரம் உடையராஞரையே கொள்வதாகவும். அர்த்த சௌசமும் ஆன்ம சௌசமும் உடையராய் மூவாட்டின் இப்புறமும் வாரியம் செய்திலாதாரைக் கொள்வதாகவும்.

### கணக்குக் காட்டாதவர்க்குக் கடும் தண்டனை

எப்பேர்ப்பட்ட வாரியங்களிலும் செய்து கணக்குக் காட்டாதாரையும், இவர்களுக்குச் சிற்றவ்வை பேரவ்வை மார்களையும், இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும், இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தானையும், இவர்கள் தமப்பனேடு உடன் பிறந்தானையும், தன்னேடு உடன் பிறந்தானையும், இவர்களுக்குப் பிள்ளை கொடுத்த மாமனையும், இவர்கள் பிராமணியோடு உடப் பிறந்தானையும், தன்னேடு உடப்பிறந்தானை வேட்டானையும், உடன் பிறந்தாள் மக்களையும், தன் மகளை வேட்ட மருகனையும் தன் தமப்பனையும் தன் மகனையும், ஆக இச் சுட்டப் பெற்ற பந்துக்களையும் குடவோலை எழுதிப் புக இடப் பெறுதார் ஆகவும்.

### உறுப்பினராகத் தகுதி இழந்தோர்:

அகம்யா கன்மத்திலும்17, மகாபாதகங்களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் எழுத்துப் பட்டாரையும்18, இவர்களுக்கும் முன் சுட்டப்பட்ட பந்துக்களையும் எழுதிப் புக இடப்பெறுதார் ஆகவும். சம்சர்க்க பதிதரைப்19 பிராயச் சித்தம் செய்யும் அளவும் குடவோலை இடாததாகவும். தீயசகசியராய் இருப்பாரையும் குடவோலை எழுதிப் புகவிடப் பெறுதாராகவும். பரதிரவியம் அபகரித்தானையும்20, குடவோலை எழுதி இடப் பெறுதாராகவும்.

12. Famine-relief Committee. 13. Gold Committee. 14. சந்திர சூரியர் உள்ளவரையில் 15. தீயவர்கள் அழிந்து நல்லவர்கள் பெருகி 16. யசுர் வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பிராம்மணன். 17. சோமயாகம் செய்து முடித்தவன், (சோமயாஜி).

16. விளக்கியுரைத்து. 17. செய்யத்தகாத தீய செயல்கள். 18. குற்றவாளிகள் என்று பதிவு செய்யப் பட்டிருப்பவர்கள். 19. Those who have Committed incest. 20. பிறர் பொருளை வஞ்சனையாற் கவர்ந்து கொண்டவன்.

எப்பேர்ப்பட்ட கையூட்டும்21 கொண்டான், கிருதப் பிராயச் சித்தம் செய்து சுத்தரானுரையும், அவ்வவர் பிராணுந்திகம்22 வாரியத்துக்குக் குடவோலை எழுதிப் புகவிடப் பெறுதாராகவும். பாதகம் செய்து பிராயச் சித்தம் செய்து சுத்தரானுரையும், கிராம கண்டகராய்ப்23 பிராயச்சித்தம் செய்து சுத்தமானுரையும், அகம்யா கன்மம் செய்து பிராயச் சித்தம் செய்து சுத்தரானுரையும் ஆக, இச் சுட்டப்பட்ட அனைவரையும் பிராணுந்திகம் வாரியத்துக் குடவோலை எழுதிப் புகவிடப் பெறுதாராகவும்.

## நேர்தல் நிகழ்த்தும் முறை :

ஆக இச் சுட்டப் பெற்ற இத்தனைவரையும் நீக்கி, முப்பது குடும்பிலும் முப்பது குடவோலைக்குப் பேர் தீட்டிப் பன்னிரண்டு சேரியிலுமாக, இக் குடும்பும் வெவ்வேறே வாயோலை பூட்டி முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டிக் குடம் புக இடுவதாகவும்.

குடவோலை பறிக்கும்பொழுது மகா சபைத் திருவடியாரைச்24 சபல விருத்தம்25 நிரம்பக் கூட்டிக் கொண்டு, ஆண்டு உள்ளூரில் இருந்த நம்பிமார்26 ஒருவரையும் ஒழியாமே மகா சபையிலே உள் மண்டகத்திலே இருத்திக்கொண்டு அந் நம்பிமார் நடுவே, அக்குடத்தை நம்பிமாரில் விருத்தராய் இருப்பார் ஒரு நம்பி மேல் நோக்கி, எல்லா ஜனமும் காணுமாற்றல் எடுத்துக்கொண்டு நிற்க, பகலே அந்தரம் அறியாதான் ஒரு பாலனைக் கொண்டு ஒரு குடும்பு வாங்கி, மற்றொரு குடத்துக்கே புகவிட்டுக் குலைத்து, அக் குடத்தில் ஓர் ஓலை வாங்கி, மத்யஸ்தரின் கையிலே குடுப்பதாகவும்.

அக் குடுத்த ஓலை மத்யஸ்தன் வாங்கும் போது அஞ்சு விரலும் அகல வைத்து, உள்ளங் கையிலே ஏற்றுக் கொள்வானாகவும். அவ் ஏற்று வாங்கின வோலை வாசிப்பானாகவும். வாசித்த ஓலை அங்கு உள் மண்டபத்திருந்த நம்பிமார் எல்லாரும் வாசிப்பாராகவும். வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும். இப் பரிசே முப்பது குடும்பிலும் ஒரோ பேர் கொள்வதாகவும் இக் கொண்ட முப்பது பேரிலும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் செய்தாரையும் வித்யா விருத்தரையும்27,வயோ விருத்தர்களையும்28,சம்வத்சர வாரியராகக் கொள்வதாகவும்.

மிக்கு நின்றுருட் பன்னிருவரைத் தோட்ட வாரியம் கொள்வதாகவும். நின்ற அறுவரையும் ஏரி வாரியமாகக் கொள்வதாகவும். இவ் விரண்டு திறத்து வாரியமும் கரைகட்டிக் கொள்வதாகவும். இவ் வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெரு மக்களும் 360 நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும். வாரியம் செய்யா நின்றுரை அபராதம் கண்டபோது அவனை ஒழித்து விடுவதாகவும்.

இவர்கள் ஒழிந்த அநந்தரம் இடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன்ம கிருத்தியம் கடைக்காணும் வாரியரே மத்யஸ்தரைக் கொண்டு குறி கூட்டிக் குடுப்பாராகவும். இவ் வியவஸ்தை ஓலைப்படியே குடவோலை பறித்துக் கொண்டே வாரியம் இடுவதாகவும்.

பஞ்ச வார வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது பேர் தீட்டி முப்பது வாயோலைக் கட்டும் புக இட்டு, முப்பது குடவோலை பறித்து, முப்பதிலும் பன்னிரண்டு பேர் பறித்துக் கொள்வதாகவும். பறித்த பன்னிரண்டில் அறுவர் பொன் வாரியமும், அறுவர் பஞ்ச வார வாரியமும் ஆவன ஆகவும்.

பிற்றை யாண்டும் இவ்வாரியங்கள் குடவோலை பறிக்கும்போது, இவ்வாரியங்களுக்கு முன்னம் செய்த குடும்பு அன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக் கொள்வதாகவும். கழுதை ஏறினுரையும்29, கூடலேகை30 செய்தானையும், குடவோலை எழுதி இடப் பெறுதாராகவும். மத்யஸ்தருள் அர்த்த சௌசம் உடையானே கணக்கெழுதுவானாகவும்.

கணக்கெழுதினுன் கணக்குப் பெருங்குடிப் பெருமக்களோடு கூடக் கணக்குக் காட்டிச் சுத்தன் ஆக்கினதன்பின் அன்றி, மற்றுக் கணக்குப் புகப் பெறுதான் ஆகவும். தான் எழுதின கணக்குத் தானே காட்டுவானாகவும்.

---

21 இலஞ்சம் வாங்கியவன் 22 உயிருள்ள வரையில் 23 கிராம நலத்திற்குத் துரோகம் செய்தவர்கள். 24 பெருமக்கள் 25 Quorum. 26 கோயிற் குருக்கள். 27 கல்வியறிவில் முதிர்ந்தவர்கள். 28 வயதினுல் முதிர்ந்தவர்கள்

29 பெருங் குற்றங்களுக்காகக் கழுதை மேல் ஏற்றித் தண்டிக்கப்பட்டவர்கள்.

# திருமகளும் — திருவருளும்

திரு. என். எஸ். நாத்தாச்சாரியார், தஞ்சை.

பாடுவதெல்லாம் பராங்குசனை நெஞ்சத்தால்,
தேடுவதெல்லாம் புளிக்கீழ்த்தேசிகனை
—ஓடிப்போய்க்
காண்பதெலாம் நங்கையிரு கண்மணியை
யான் விரும்பிப்
பூண்பதெலாம் மாறனடிப்போது.

(பெருந்தொகை)

முன்னுரை :

வழிபடும் தெய்வத்தின் பெயரால் "சைவம்—வைணவம்" என்ற இரு சமயங்கள் நம் தமிழ் நாட்டில் தொன்று தொட்டுப் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆஸ்திகம் என்ற தேவதையின் கழுத்தில் அணிந்த ஓர் மலர் மாலையின், இரு பகுதிகளே இவை எனலாம்: சிவனடியார்களைச் சைவர்கள் எனவும், திருமாலடியார்களை வைணவர்கள் என்றும் கூறி வரு கிறோம். இவர்கள் தனிப் பெரும் நிலையில் இருக்கும் இறைவனை, "அன்னையாகி அத்தனாகி" என்றும், "அம்மையே அப்பா" என்றும் புகழும் வாயிலாக, இறைவனைத் தாயாகவும் தந்தையாகவும் கண்டு வழிபட்டார்கள். அத்துடனின்றி அத்தாயைத் தனித் தனி வடிவத்தில், நாச்சியார் என்றும், அம்பாள் என்றும் கூறி வணங்கி வந்தார்கள். அதனால் தானோ என்னவோ, ஆறு மதங்களில் இவை இரண்டிற்கும் தாயுள்ளம் கொண்ட தமிழ் நாட்டில் அதிக ஏற்றமும், தோற்றமும் ஏற்பட்டன. இறைவன் செயல்படும் நிலையில் (கார்யாவஸ்தையில்) இயற்கையின் நிலையில் ஒன்றி நின்று தகப்பனாகத் தான் காட்சி தந்து மக்களை நெறிப் படுத்துகிறான். நாச்சியார் தாய் வடிவத்தில் தன்னை ஆக்கிக் கொண்டு இரக்கம், மென்மை, அருள் முதலிய நற்பண்புகளால் இறைவன் திருவருளுக்கு நம்மை இலக்காக ஆக்குகிறாள்.

"தினைத் தனையும் திருமகளை விடாதார் வந்தார்" என்ற திருச் சின்ன மாலையில் எந்த நிலையிலும் திருமகள் தொடர்பு மஹா விஷ்ணுவிற்கு உண்டு என்பதை ஸ்ரீ வேதாந்ததேசிகன் எடுத்துரைத்தார். மீன், ஆமை முதலிய அவதாரங்களிலும் மகாலக்ஷ்மியானவள் திருமாலின் ஒவ்வோர் உறுப்பிலும் ஒன்றி நின்றதாகவே உரைக்கப்படுகிறது. "கிருஷ்ண ஜிநம் யவநி

---

மற்றுக் கணக்கர் புக்கு ஒதுக்கப் பெறுதார் ஆகவும்.

இப் பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்யவத் என்றும் குடவோலை வாரியமே இடுவதாகத் தேவேந்திரன் சக்கரவர்த்தி பண்டித வத்சலன் குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பக சரிதை31 ஸ்ரீ பரகேசி பன்மர்கள் ஸ்ரீ முகம் அருளிச் செய்து வரக் காட்ட,

ஸ்ரீ ஆணையால் சோழ நாட்டுப் புறங்கரம்பை நாட்டு ஸ்ரீ வங்க நகர் கரஞ்சை கொண்ட யசுக்கிரமவித்த பட்டன் ஆகிய சோமாசிப் பெருமான் உடன் இருந்து இப் பரிசு செய்விக்க, நம் கிராமத்துக்கு அப்யுதயம் ஆகத் துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக வியவஸ்தை செய்தோம், உத்தர மேரு சதுர்வேதிமங்கலத்துச் சபையோம். இப் பரிசுக் குறியுள் இருந்து பெருமக்கள் பணிக்க வியவஸ்தை எழுதினேன் மத்யஸ்தன் காதடிப் போத்தன் சிவக்குறி ராஜ மல்ல மங்கலப் பிரியன்.

30 பொய்க் கையெழுத்து (Forgery).
31 பராந்தக சோழனின் பட்டப் பெயர்கள்

காம் க்ருதவாந் ப்ரியாய : (பிரம்மச்சாரியான வாமனனும் திருமார்பில் உள்ள மகாலக்ஷ்மியை மான் தோலால் மறைத்துக் கொண்டார்) என்ற ஆன்றோர் வாக்கையும் நினைக்கலாம். "ப்ரபையும்-ப்ரபாவானையும் போல் (கதிரவனும்-சுடரும் போல்) என்றபடி அவளும்—அவனும் என்றும் பிரியாமலேயே இருந்து நம்மைக் காக்கிறார்கள் என்றும், பெரிய பிராட்டியார் (மகாலக்ஷ்மி) நாராயணனுடன் பிரியாமல் இருப்பதால் காலமும், நிலையும் பார்த்துப் பகவானிடம் சரண் அடைய வேண்டாம். இத் தலையில் (உன்னிடம்) சரண் அடைய எண்ணம் தான் வேண்டும் என்றும் சொல்லுவார்கள் பெரியோர்கள். பேயாழ்வார் திருக்கோவலூரில் முதன் முதலில் கண்டது "திருக்கண்டேன்" என்று கூறும்படி திருமகளைத்தான். ஞானசம்பந்தப் பிரானும், முதன் முதலில் இறைவனைத் தோடுடைய செவியனாகத்தான் கண்டார். சிவஞான சித்தியிலும் அருளது சக்தியாகும் அரன் தனக்கு அருளையின்றித் தெருள் சிவமில்லை என்றும், "பெண் பாலுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர் விண்பாலியோகெய்தி" என்று மணிவாசகத்திலும் அம்மையின் சேர்த்தியின் பெருமையே பேசப்படுகிறது.

## திருமகளின் பொதுச் சிறப்பு :

"திருமகள்" என்ற சொல் மகாலக்ஷ்மியைக் குறிக்கும் சொல். இவளுக்கு நிகண்டுகளில் "லக்ஷ்மீ" "பத்மாலயா", "பத்மா", "கமலா", 'ஸ்ரீ:' "ஹரிப்ரியா", எனப் பல பெயர்கள் காணப்படுகின்றன. ஸ்ரீவைணவ பரிபாஷையில் இவளைப் "பெரிய பிராட்டியார்" என்றழைக்கிறார்கள். நாராயணன் திரு நாடு என்ற வைகுண்டத்தில் மலர் மகள், மண் மகள், நீளா என்ற மூன்று தேவிகளுடன் இருக்கிறார். உடனமர் காதல் மகளிர் திருமகள் மண்மகள் ஆய மடமகள் என்றிவர் மூவர் "கூர்தல் மலர் மங்கைக்கும், மண் மடந்தைக்கும், குலவாயர் கொழுந்துக்கும்" என்ற ஆழ்வார் திருமுகப் பாசுரங்களையும் நோக்க வேண்டும். மற்றைய இருவர்களுக்குத் தலைமையான நிலையில் இருப்பதால் திருமகளுக்கு "பெரிய பிராட்டியார்" எனப் பெயர். லக்ஷ்மிக்கு "கிருபா" என்றொரு பெயரும் உண்டு. அதனால்தான் "இராமன் சித்திர கூட மலையில் காகாசுரனைக் காத்த சரிதையைக் கூறும்பொழுது "க்ருபயா (லக்ஷ்மியினால்) பர்ய பால்யத்—" (இராமன் காகாசுரனைக் காப்பாற்றினார்) என்றும் பொருள் நயம் கூறுவோர் பெரியோர். "ஞானைச்வர்ய சுகாரோக்ய தனதான்ய ஜயா திகம் | லக்ஷ்ம யஸ்யா : ஸமுத் திஷ்டம் ஸா லக்ஷ்மீ திநிகத்யதே" (அதாவது—அறிவு, செல்வம், இன்பம், நோயற்ற வாழ்க்கை, பொருள், தானியம், வெற்றி இவைகளின் அடையாளமாக இவள் இருப்பதால் இவளை லக்ஷ்மி என்கிறார்கள்) என்ற நிருக்தசார உரைப்படி எல்லா நலனையும் தரக் கூடியவள் திருமகள் என்று புலப்படுகிறது. இவள் அமுத வாஹினி என்ற குளத்தில், செந்தாமரை மலரில் அமர்ந்து, பத்ராஸனத்தில் காட்சிதருகிறாள். மேல் இரு கைகள் அன்றலர்ந்த செந்தாமரை மலர்களைத் தாங்கி இருக்கும். மற்றையை இரண்டு கைகளும், அபய முத்திரையுடனும் அள்ளி வழங்கும் முத்திரையுடனும் இருக்கும். தெளிந்த, சிரித்த முகத்துடன் எல்லாஅணிகளும் அணிந்து பூர்ண சந்திரனைப் போல் காட்சி தருகிறாள் இவள். "ஹிரண்ய வர்ணாம்" என்றபடி தங்க நிறமுள்ளவளாகத் தென்படுகிறாள். அதனால்தான் இவளுக்கு ருக்குமிணி என்றும் பெயர் ஏற்பட்டது. (ருக்மம் என்றால் தங்கம் எனவும் பொருள் உண்டு) ஸ்ரீ சூக்தத்திற்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீ வித்யாரண்யர் "ஹரிணீம்" என்ற சொல்லிற்கு மான் வடிவம் கொண்டவள், பச்சை நிறம் கொண்டவள், என்றும் பொருள் கூறுகிறார். இவளைப் பாற்கடல் மகள் எனவும், பிருகு மஹர்ஷியின் மகள் எனவும் கூறுவதுண்டு. இவள் தனது யோக சக்தியால் "சுவர்க லக்ஷ்மியாகவும், ராஜலக்ஷ்மியாகவும், கிருஹலக்ஷ்மியாகவும் மற்றும் பலவிதமாகவும் உருவம் எடுத்தாள் எனச் சிந்தாமணி ஆசிரியர் கூறுகிறார். துருவாச சாபத்தால் இந்திரன் இழந்த பதவியை, இவளே மீட்டுத் தந்ததாக ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் வரையப்பட்டிருக்கிறது. இந்திரனால் துதிக்கப்பட்ட விஷ்ணு புராண லக்ஷ்மீ ஸ்தோத்திரம் (17 செய்யுட்கள் கொண்டது) மிகவும் வரப் பிரஸாதம் உள்ளது என்பார்கள். முன்பு நாராயணனே இவளைப் பூசித்ததாக பிர்ம வைவர்த்த புராணம் சொல்லுகிறது. இவளே வராக கல்பத்தில் நக்ன சித்தின் பெண்ணாகப் பிறந்து மஹா விஷ்ணுவை மணந்தாள் என்றும் கூறுவதுண்டு. இவள் பக்தர்களுக்கு அருளும் விதத்தை வைத்துக் கொண்டு இவளை அஷ்டலக்ஷ்மியாக்கி இருக்

கிறார்கள்." "தனலக்ஷ்மி, தானியலக்ஷ்மி, தைரியலக்ஷ்மி, ஜயலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, சந்தான லக்ஷ்மி, கஜலக்ஷ்மி, வித்தியா லக்ஷ்மி" என்று எட்டு வடிவங்களுக்கும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த எட்டு வடிவங் களுக்கும் தனித் தனி தோற்றங்களும் உண்டு. "பாகவதம், பாரதம், பாத்மம், சநத்குமார ஸம்ஹிதை, மந்திர கல்பம் முதலிய பல நூல் களிலும் இவளைப் பற்றிய பேருரைகள் வரு கின்றன. மற்றும் ஆழ்வார்களும் இருமுப்பொழு தேத்தும் தொண்டர்களான பரமை காந்தி களான ஆச்சார்யர்களும் இவள் பெருமையை எடுத்துச் சொல்லப் புகுந்து, எல்லை நிலம் அறி யாமல் கண் பனி சோரக் கை கூப்பி நிற் கிறார்கள். பிருகுவிற்கும், க்யாதிக்கும் திருமக ளாய் தோன்றிய காலத்து, இவளுக்கு "ஸ்ரீ:" எனவும், பாற் கடலில் அவதரித்த காலையில் "மகா லக்ஷ்மி" எனவும், நாராயணனை அடைந்த காலத்தில் "பத்மா" எனவும், பரசுராமனை அடைந்தபொழுது "தரணீ" எனவும், ராமனையும், கண்ணபிரானையும் அடைந்த காலத்தில் "சீதை", "ருக்குமணி" எனவும் பெயர்கள் ஏற்பட்டதாக நூல்கள் பகர் கின்றன. ஆகவேதான் "திரு உரையாய் தாம் பொருளாய் நிற்பார் வந்தார்" என்றும், 'தெய்வ நாயக நின் அருளென்னும் சீர் ஓர் அரிவை நின்படிக்கெல்லாம் தன்படி ஏற்க" என்றும் ஸ்ரீ தேசிகன் திருவாக்கு. ஸ்ரீ மகா லக்ஷ்மி "நான் 16 பெயரில் தன் நிலையை மாற்றிக் கொண்டு பக்தர்களுக்கு அருள் புரி கிறேன்" என்று மகா பாரதத்தில் சாந்தி பர்வதத்தில் தானே கூறினாள். "ஸ்ரீ சூக்தம்" என்ற உபநிஷதப் பகுதி 15 ருக்குகளால் இவள் பெருமையை அள்ளிச் சொரிகிறது. ஒவ்வொரு பலனை நாடி ஒவ்வொரு ருக்கையும் ஓதுவ துண்டு. மகா லக்ஷ்மியின் திருக் குணங்களை யும், தெய்விகமான அழகையும் ஓரளவு கண்ட ஸ்ரீ சூக்தம் மலராடும் வண்டுபோல் ரீங்காரம் செய்கிறது.

நறுமணம் பொருந்திய வெள்ளை நிறப் பூக்களால் செய்யப்படும் வழிபாட்டில் நாச்சி யாருக்கு உகப்பு அதிகம் எனக் கருட புராணம் அறிவிக்கிறது. திருமாலுக்கு "ஹரி" என்ற பெயர். இவளுக்கும் "ஹரிணீ" என்ற பெயர். இனிமையான பேச்சு, பெரியோர்களிடம் மதிப்பு, எப்பொழுதும் சிரித்த முகம், அளந்த பேச்சு, கோழையற்ற உள்ளம், முதலிய குணங்கள் படைத்தவளிடமிருந்து என்றும் அகலமாட்டாளிவள் என்றும் நூல்கள் உரைக் கின்றன: "பில்வ நிலயா" என்று இவளுக்கு மற்றோர் பெயரும் உண்டு. பில்வ மரத்திற்கு "ஸ்ரீ வ்ருக்ஷம்" எனவும் பெயர். இப்பெயர் கள் பரிமாற்றத்தை நோக்கியே பில்வ இலையில் இவள் என்றும் உறைந்திருக்கிறாள் எனக் கூறு வார்கள்.

## திருமகளின் தனிச் சிறப்பு

ஸ்ரீ வைணவ ஸம்பிரதாயத்தில் திருமக ளுக்குத் தனி ஏற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வைணவர்களின் பேச்சுக்களில் "திரு" என்ற சொல் இல்லாத சொற்களே அரிது என லாம். ஸ்ரீயுடன் (திருமகளுடன்) கூடிய நாராயணனை வழிபடும் தெய்வமாகக் கொண் டபடியால்தான் இவர்களுக்கு "ஸ்ரீ வைஷ்ண வர்கள்" என்ற பெயர் ஏற்பட்டது. "இவள் சேர்த்தியால்தான் நாராயணனே மங்கள புருஷனாக ஆகிறான்" என்ற கருத்துப்பட "தவஸ்பர்சாத் ஈசம்ஸ்ப்ருசதி கமலே மங்கள பதம்" என்று பட்டர் பணித்தார். "அல்லி மலர் போக மயக்கு களாகியும் நிற்குமம் மான்" என்று ஆழ்வார் போற்றினார்.

(அ) வேதமும் "ச்ரத் தயா தேவோ தேவத்ம அச்நுதே" (லக்ஷ்மியால்தான் திருமால் கடவுளானது) என்றும், "ஈச்வரீம்ஸர் வபூதானும்" (எல்லாப் பிராணிகளுக்கும் தலைவி) என்றும், மறைகள் இவள் புகழை மகிழ்ந்து பாடுகின்றன. நாராயணன் நாள்தோறும் "லக்ஷ்மி" ஜபம் பண்ணிக் கொண்டிருப்பதாக "விசுவகுணுதர்சம்" என்னும் நூல் எடுத் துரைக்கிறது. "லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேச தேவ்யா காருண்ய ரூபயா" (எம்பெருமான் கரு ணையே வடிவு கொண்டிருக்கும் லக்ஷ்மியுடன் கூடவே இருந்து நம்மைக் காக்கிறான்) என லக்ஷ்மீதந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "திருவில்லாத் தேவரைத் தேறேன் மின்தேவு" என்ற பாசுரத்தையும் படித்தறிய வேண்டும். இவள் சேர்த்தி இல்லாவிடில் அவனுடைய அவதார காரியங்கள் யாவும் காசுக்கும் உத வாது காண் என்றும் பெரியோர்கள் எடுத் துரைப்பார்கள். இராமாயணத்தில் "அப்ர மேயம் ஹிதத் தேஜ யஸ்யஸாஜ நகாத் மஜா" (சீதையுடன் கூடிய எந்த புருஷனே-இராமன்- அவனுடைய தேஜஸை அளவிட முடியாது,

என்று மாரீசனும் பேசினன். மற்றும் இராமாயணக் கதையின் போக்கை ஊன்றி நோக்கினல், சீதை அருகே இருக்கச் செய்தே இராமன் வெற்றி பெற்றுத் திகழ்ந்த இடங்களையும், அவள் இல்லாத காலத்தில் அவன் கண் கலங்கி நின்ற இடங்களையும் நன்கறியலாம். "இவள் சன்னிதியிலேதான் காகம் தலை பெற்றது. அது இல்லாமையால் இராவணன் மாண்டொழிந்தான்" என்ற கருத்தைப் பிள்ளை லோகாசிரியர் விரித்துரைத்தார். பட்டர் ஓரிடத்தில் "இராமன் கருணையையும், உன் கருணையையும் சீர்தூக்கிப் பார்த்தால், உன் கருணையின் முன்பு அவன் காட்டிய கருணைக்கு நிற்க வழியில்லையோ, என்கிருர். தாயான தன்னை வணங்கி நின்று "பெற்றேம்! பெற்றேம்! பேரின்பம் பெற்றேம்"—என்று பாடி மகிழ வேண்டி இருக்க, அது மாட்டாதே பெண்டு கொள்ள வந்து சக்கரவர்த்தித் திருமகனை ஏசிப் பேசி வாய் வற்ற நின்ற இராவணனுரும் சீதை நல்லுரையே கூறினள் என்றதையும் நோக்க வேண்டும். இராவண வதம் முடிந்த பின்பு அனுமான் சீதையிடம் சென்று, இராமன் வென்றியை உரைத்தான். பின்பு அந்த அரக்கியர்களை மாய்க்கத் தாயின் அனுமதி கேட்டான். அப்பொழுது சீதை கூறியதை மனதில் கொண்டால், இவளல்லவோ தெய்வம், "இவளல்லவோ தாய்" என்று ஆட்டம் மேவி ஈட்டம் காட்ட வேண்டி வரும். சீதையே அனுமனிடம் பிசகு செய்யாதவர்கள் யார்பார் என்றுகூறி, உன்னிடமும் என்னிடமும், இராமனிடமும், கூறுவதானல் குறை உண்டு, இவ் வாறிருக்கையில் தலைவன் இட்ட கட்டளைப்படி நடந்த இவர்களை நாம் ஏன் ஒறுக்க வேண்டும்? என்ருள்.

"திருமால்" என்ற சொல்லையே எடுத்துக் கொள்ளலாம். 'திரு' என்ற சொல் இல்லாத 'மால்' என்ற சொல்லிற்கு "மயக்கம்" என்றே பொருள் தேறும். அப்பொழுது பொருளாயும் இல்லாத சொல்லாகவும் ஆகி விடுகிறது. மற்றும், ஸ்ரீ வைணவர்களை "ஐயங்கார்" என்றழைக்கிறேம். அவர்களுக்கு "இரு தோள்களிலேயும் சங்கு சக்கரம் தரித்தல், பன்னிரு திரு மண் சாற்றிக் கொள்ளுதல், இறைவன்பெயரைத் தனது ஆசார்யர் மூலமாய் இட்டுக் கொள்ளுதல், "திருமந்திரம் — த்வயம் - சரம சுலோகம்" என்ற ரகஸ்ய மந்த்ரோபதேசம் பெறுதல், பாஞ்சராத்திர ஆகமப்படி ஆராதனம் செய்யத் தொடங்குதல் என ஐந்து அங்கங்களைப் பெற்றதால் ஐ+அங்கார் என அவர்களுக்குப் பெயர் ஏற்பட்டது. அந்த ரகஸ்ய மந்திரங்களில் "த்வயம்", என்ற மந்திரத்தையே "மந்திர ரத்னம்" என்றும், "தாய் போன்ற மந்திரம்" என்றும் பெரியோர்கள் சிறப்பித்துக் கூறுவார்கள். அந்த மந்திரத்தில் திருமகளைப் பற்றிய பேச்சு நேரடியாக வருவதே முக்கியமான காரணங்களில் ஒன்று.

"அ+உ+ம்" என்று பிரிக்கப்படும் 'ஓம்' காரப் பிரணவத்தில் இடையே உள்ள சொல்லான 'உ' என்பதற்கு "திருமகள்" என்ற பொருளும் உண்டு. அப்பொழுது 'உ' என்ற சொல்லால் குறிக்கப்படும் திருமகள்தாம். "அ" என்ற சொல்லால் குறிக்கப்படும் நாராயணனையும் "ம்" என்ற சொல்லால் குறிக்கப்படும் ஜீவ வர்க்கங்களையும் இரு கைகளால் அணைத்துக் கொண்டு, இருவர்களையும் சேர்த்து வைக்கும் நிலையில், அவள் கருணை இருக்கிறது" எனப் பெரியோர் எடுத்துரைப்பார். முமுக்ஷுப்படியில் "பர்த்தாவினுடைய படுக்கையையும், பிரஜையினுடைய (ஜீவ வர்க்கங்களுடைய) தொட்டிலையும் விடாதே இருக்கும் மாதாவைப்போலே, பிரதம(முதல் பதமான "அ" என்பதையும்)சரம பதங்களை(கடைசிச் சொல்லான 'ம்' என்பதையும்) விடாதே இருக்கும் இருப்பு" என்றும்; ரகஸ்ய ரத்னுவளியில் "பெரிய பிராட்டியார் இத் தலையில் (நம்மிடம்) வாத்ஸல்யத்தாலும், அத் தலையில் (பகவானிடம்) வால்லப்யத்தாலும் (பெரும் சலுகையினுலும்) புருஷகாரமாய்க் கொண்டு (இரண்டையும் ஒன்றுக்கும் தனிப் பெரும் சக்தியாய்க் கொண்டு) இஜ்ஜீவர்களுக்குத் தஞ்சமாகிருள்" என்றும் பேசப்பட்டது. "குளிர்ந்த நீரிலும் நெருப்புக் காணுமாப் போலே பெருமாளுக்குக் கோபம் ஏற்பட்டால், "பித்தர் பனி மலர் மேல் பாவைக்கு" என்றபடி பெருமாள் சீற்றத்தைத் தணிப்பிப்பவள் இவளே" என்பது ஸம்ப்ரதாயம் :—இவள் பெருமையை "அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல் மங்கை உறை மார்பா" என ஆழ்வாரும், "நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" எனப் பெரியாழ்வாரும், "திருமகளோடினிது அமர்ந்த செல்வன்" என்று குலசேகரரும், "மங்கை மன்னி வாழும் மார்ப" என மழிசையாழ்வாரும், "திருமறு மார்ப நின்னைச் சிந்தையுள் திகழ வைத்து" எனத் தொண்டரடிப்

பொடி ஆழ்வாரும், "திருவார மார்பதன்றே அடியேனை ஆட் கொண்டதே" எனத் திருப் பாணாழ்வாரும், "திரு மார்பில் மன்னத் தான் வைத்து கந்தான்" என்று திருமங்கை யாழ்வாரும் "திருமகட்கே தீர்ந்தவாறு என் கொல்" என்று பொய்கையாழ்வாரும், "ஒண் டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" என்று அதே ஆழ்வார் பிறிதோரி டத்திலும், "பூ மங்கை கேள்வன் பொலிவு" எனப் பேயாழ்வாரும் அருளிச் செய்தார்கள். இவள் திருநாமங்களில் (பெயர்களில்) ஸ்ரீ: என்ற சொல்லே, நாராயண மந்திரம் போல் ஏற்ற முடையது என்றும் பெரியோர் கூறுவார் கள். பாஞ்சராத்திரம் என்னும் ஆகமத்தில் இவளுடைய ஸ்ரீ என்ற பெயருக்கு (1) ஸ்ரீயதே-அடையப்படுகிறாள். (2) ச்ரயதே—இறைவனை நமக்காக அடைகிறாள், (5) ச்ருணோதி—நம் குறைகளை எல்லாம் கேட்கிறாள். (4) ச்ராவயதி —பக்தர்கள் குறைகளைக் கேட்டு அவைகளை இறைவனிடம் கேட்பிக்கிறாள், (5) ச்ருணாதி— நம் பாபங்களை எல்லாம் ஒழிக்கிறாள். (6) ச்ரீணாதி—பக்குவ நிலையை உண்டு பண்ணு கிறாள், என ஆறு பொருள்கள் கூறப்பட் டுள்ளன.

தத்துவத்தில் பெருமையும், தோற்றத்தில் பொலிவும், பக்தர்களிடம் தண்ணளி காட்டு வதில் பெருமையும், எல்லாம் ஒன்றே சேர்ந்து பெருமையின் வடிவமாகவே இவள் திகழ்கிறாள். பகவான் குறை நிறைகளைக் கணிசித்தே பலம் தருவான். இவளோ குறைகள் ஒன்றையுமே காணாக் கண்ணுடன் நோக்குவாள். பெரு மாளுக்கு "அம்ருதம்" என்பது வேதத்தில் அழைக்கப்படும் பெயர். இவளுக்கோ "அமுத தாரை" எனப் பெயர் ஏற்பட்டுள்ளது. உப நிஷத்தும் கார்மேகமாக ப்ரம்மத்தைக் கூறி, இடையே மேகத்துடன் கலந்த மின்னலாக இவளைப் பேசுகிறது. திருமகளுடன் சேர்ந்த திருமாலைத்தான் (திவ்ய தம்பதிகளையே) வழி பட வேண்டும். பிரிந்த நிலையில் ஆசை கொண்ட சூர்ப்பணகையும், இராவணனும் பட் டொழிந்தார்கள். நரசிம்மாவதாரத்தில் கடைசி யில் பகவானுடைய சீற்றத்தைத் தணிக்க இவளே தேவர்களுக்கு உதவி புரிந்தாள். அமலன் அகச் சினந்தணிந்து தனது கையால் அரவிந்தை தனைத் தழுவிச் சாந்தியுற்றான் என ஸ்ரீ பாத்மம் கூறுகிறது. கம்பனும் வாலியின் வாயிலாக வாலி வதைப் படலத்தில், "ஆவி யைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்த பின்னைத்திகைத்தனை போலும் செய்கை" என்று கூறுவதின் மூல மாகத் திருமகள் இல்லாத பகவான் செயல்கள் திகைத்தே இருக்கும் என்கிறான். "இவள் பெருமையை வானமெல்லாம் எழுதும் தாளாக, வார் கடல்கள் எல்லாம் எழுதும் மையாக, ஞானம், பலம் இவற்றால் சிறந்த ஆயிரம் வாய் கொண்ட ஆதிசேஷன் கூற, ஆயிரம் கை படைத்த எல்லா வல்ல திருமாலே தான் எழுதிப் பார்க்க வேண்டும்" என்றும் கூறும் படியான இவள் பெருமையைப் புழு போட்ட கோடு போல் அடியேனும் ஏதோ சிறிது எழுதித் தன்யன் ஆனேன்—"அலர்மகளை முன்னிட்டு அவன் தன், மலரடியே சரணாகப் பற்றுவோம்."

---

## செய்திச் சுருக்கம்

கோவை: சிரவணபுரம்- கௌமார மடாலயம்: இளவரசு வித்துவான் தவத்திரு சுந்தர சுவாமிகள் அவர்களுக்கு, பழநியில் 9—2—64 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ஞான தண்டாயுத பாணிப் பெருமான் திருமுன்னிலையில், ஷ மடாலயத்தின் மூன்றாம் குருமகா சன்னிதானமாக ஆசாரிய-பட்டாபிஷேகம், திருவாமாத்தூர்க் கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு தி. செ. முருகதாச சுவாமிகள் அவர்களால் மிகவும் சிறப்புற நிகழ்த்தப் பெற்றது. குன்றக்குடி, மயிலம், பேரூர் ஆகிய திருமடங்களின் தலைவர்கள் விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

குருபூசை: கோவை-பேரூர் தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் அவர்களின் 48ஆம் ஆண்டுக் குருபூசை 27-2-64 வியாழனன்று, மாம்பாக்கம் குருகுலம் தவத்திரு அழகர் அடிகளார் அவர்களின் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. ஷ திருமடத்துக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாக்களும் இனிது கொண்டாடப் பெற்றன. விழாவில் சாந்தலிங்க சுவாமிகள் அருளிய "வைராக்கிய தீபம்" என்னும் நூல், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இயற்றிய சிறந்த உரையுடன், வெளியிடப் பெற்றது.

# வீரசைவ நிலையங்கள்

கோவைகிழார் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A.,B.L,

வீரசைவம் என்ற சமய இயக்கம் சென்ற மூன்று நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் பரவி வந்திருக்கும் ஒரு தீவிர சமய இயக்கம் ஆகும். அவ்வியக்கம் சமய உணர்ச்சியை மக்கள் வாழ்க்கையில் வேரூன்றச் செய்வதன்றிச் சமய சேவை செய்வதற்கு அடியார்களைத் தோன்றுவித்து, சமய நிலையங்களை ஆங்காங்கு நிறுவிச் சமய இலக்கியத்தையும் உண்டு செய்திருக்கிறது. முதலில் அது கன்னட நாட்டில் தான் மும்முரமாகத் தோன்றி (12 நூ) மூன்று நூற்றாண்டுகள் வரை நன்கு பரவி, கரு நாடக சாம்ராச்சிய வீழ்ச்சி (1565)யின் போது தடைபட்டுப் பின்னும் சுற்றிலும் இருந்த மகாராட்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு முதலிய பிரதேசங்களில் பரவியது. அது முதல் தமிழ் நாட்டில் பலவீர சைவப் புலவர்கள் தோன்றி மடாலயங்களை நிறுவி அரிய இலக்கியங்களை அளித்திருக்கின்றனர்.

வீரசைவம் கன்னட நாட்டில் இலிங்காயதம், சிவாச்சார்யம் என வழங்கும். 4 நூற்றுண்டுக்கு முன் அது பஞ்சாசாரியர்கள் என்ற ஏகோராமாராதியர், ரேவணாராதியர், பண்டிதாராதியர், மருளாராதியர், விசுவாராதியர் என்பவர்களால் தழுவப்பட்டு உபதேசிக்கப்பட்டது. 12வது நூற்றுண்டில் சிலசைவப் பெரியார்கள் அங்கே தோன்றி வீரசைவ இயக்கத்திற்குப் புத்துயிரும் புதுக் கோட்பாடுகளும் கொடுத்தார்கள். அவர்களில் தீவிர சேவை செய்தவர் வசவண்ணர். அவர் பாகேவாடி என்ற ஊரில் 1106 அவதரித்து கல்யாணபுரியில் ஆண்ட விச்சலமன்னனுக்கு 1162ல் முதல் அமைச்சராகி வீரசைவ சமயத்தைப் பரப்பினர். அவருடன் திருத்தொண்டு செய்த அடியார்கள் அல்லமர், சித்தராமர் சென்னவசவர் அக்கமாதேவியார் முதலிய சிவனடியார்கள். தம் கொள்கைகளைப் பாமரமக்களும் அறிந்து கொள்ளும் எளிய கன்னட மொழியில் 'வசனங்கள்' என்ற பெயரினல் நூல்கள் எழுதிப் பிரபலப்படுத்தினர். இந்த உணர்ச்சி பொருந்திய இயக்கம் வெகுவிரையில் சளுக்கியராச்சியம் முழுதும் படர்ந்தது. வசவண்ணர் கூடல சங்கமம் (கிருஷ்ணையும் மலப்பிரபையும் கூடும் இடம்) என்ற புனித இடத்திலும், சென்னவசவர் உலனி என்ற இடத்திலும், அல்லமரும் அக்கமாதேவியாரும் சீசைலம் மல்லிகார்ச்சுனத்திலும் இறுதி நாட்களைக் கழித்தனர். ஜங்கமர் என்ற சீடகோடிகள் வெகு மும்மரமாக அச்சமயத்தைப் பெருக்கினர் (1565). கருநாடக இராச்சியம் அழிந்தபின்னும் கன்னட நாட்டுப் பல குறு நில மன்னர்கள் அச்சமயத்தை ஆதரித்தார்கள். மகாராட்டிரத்தில் கொல்லாபுரியிலும், ஆந்திரத்தில் பால் குருசி சோமநாதராலும், தமிழ் நாட்டில் சிவப்பிரகாசராலும் அவருடைய சீடபரம்பரையினராலும் வீரசைவம் பரவிற்று.

வீரசமயக்கொள்கைகள் மிகஎளிதானவை. சிவபிரானைத் தவிர வேறு தெய்வம் தொழுதல் கூடாது. குரு, லிங்க, ஜங்கமம் என்ற முப்பொருள் மூலமாகச் சிவபதம் அடையலாம். இலிங்கம் அங்கலிங்கமாகத் தொழுதல் வேண்டும். அது உடலை விட்டு நீங்காதபடி வெள்ளிப் பேழையில்வைத்து மார்பில் அணிய வேண்டும். சிவபூசையின்றி உணவு கொள்ளக்கூடாது. சிவபக்தர்களில் இனவேற்றுமை இல்லை. இறந்த பிறகு சடலம் சமாதியில் வைக்கவேண்டும். குகை போன்ற ஒடுக்கத்திற் பதுமாசனம் செய்து வைத்து, கையில் இலிங்கம் இட்டு, திருநீற்றினல் மூடிவைத்து சமாகிகட்டி மேலே இலிங்கத் திரு உருவம் அமைக்க வேண்டும். சிரார்த்தச் சடங்குகள் இல்லை, பீடாதிபதிகளுக்குக் குரு பூசை உண்டு. குருமாரைப் புனிதமக்களாகக் கொண்டு வழிபாடு செய்து பாதோதகத்தை அருந்த வேண்டும். இலிங்க ஐக்கியம் தான் இறுதி. இவைகளே முக்கிய கோட்பாடுகள்.

இக்கொள்கைக்ள் சங்கமர்களாலும் மடாதிபதிகளாலும் பரப்பப்பட்டு நிறுவப்பட்டன. கன்னட நாட்டில் சிறந்த மடங்கள் பாளே ஹொன்னூர் (சிக்குமகளூர் வட்டம்) உஜ்ஜினி (சித்திரதுர்க்கம்) கேதாரம் (இமயம்-மைசூர் மகந்து பீடாதிபதி) காசி (10,000 லிங்கம் கொண்ட மடம்) ஸ்ரீ சைலம் (கர்நூல்) என்பவைகள். ஏனைய மடங்கள்-முருகேந்திர மடம் (சித்திர துர்க்கம்) கவிமடம் (உருவகொண்ட) பெரியமடம் (குந்தக்கல்) சித்தராமர் ஆலயம் (கொல்லாபுரி) என்பன. இவைகளே யன்றிக் கணக்கற்ற சிறுமடங்களும், விரத்தி மடங்கள் என்ற தனிமடங்களும் நிரம்ப இருக்கின்றன.

தமிழ் நாட்டில் மூன்று நூற்றுண்டுகளாக வீரசைவம் பரவியிருக்கிறது. மிக அரிய சமய நூல்களை யாத்திருக்கின்றனர். அவைகளில் சிறந்தவை பிரபுலிங்கலீலை, சித்தாந்தசிகாமணி வேதாந்த சூடாமணி (சிவப்பிரகாசர்), வீரசிங்காதன புராணம் (வேலையர்), கொலை மறுத்தல் (சாந்தலிங்கர்), மகாராஜாதுறவு(குமார தேவர்), திருப்போரூர் சந்நிதிமுறை(சிதம்பரசுவாமிகள்) மற்றும் பலபல பிரபந்தங்கள்.

தமிழ் நாட்டு வீரசைவ நிலையங்கள் சில இங்குக் குறிக்கப்படும்.

1. சிவஞான பாலையர் மடம்-பொம்மைய பாளையம்-புதுச்சேரியிலிருந்து வடக்கே 5மைல் கடற்கரையில் அழகிய தென்னஞ் சோலையின் இடையில்-நிலத்தின் கீழே முதல் மடாதிபதி ஒடுக்கம் இருக்கிறது. முருகன் கோயிலுக்கு வடக்கில் இரட்டைமாடி மடாலயம் இருக்கிறது. இங்கே சிவப்பிரகாசர் வெகுகாலம் இருந்து கடற்கரையில் 'நன்னெறி' பாடினர்.

2. சிவஞான பாலையர் மடம் மயிலம், இரயில் நிலையம். மயிலம் குன்றின் மேல் கோயிலும் மடமும் உள்ளன. செந்தமிழ்க் கல்லூரி நடைபெறுகிறது. பொம்மையபாளையமும் மயிலமும் ஒரே ஆட்சிக் குருபீடம்.

3. சிவப் பிரகாசர் - பொம்மையபாளையம் பாலைய தேசிகர் சீடராகிச் சிறந்த இலக்கியக் கவிஞராகித் துறைமங்கலத்தில் இருந்து பிறகு நல்லாற்றூரில் ஐக்கியமானர். 32 நூல்கள் எழுதி உள்ளார். தம்பியரில் வேலையர் பெருமாத்தூரிலும், கருணைப்பிரகாசர் வெங்கனூரிலும் அடங்கினர்கள். மூவ்விடங்களிலும் சமாதிகள் உண்டு.

4. சாந்தலிங்கர் மடம்-கோவைக்கடுத்த பேரூர், சிவப்பிரகாசரின் சீடர். மைத்துனரும் ஆவார். கொலை மறுத்தல் முதலிய நான்கு நூல்களை யாத்தனர். பேரூர் மடத்தில் ஐக்கியம். கல்லூரி ஒன்று நன்கு நடை பெறுகிறது.

5. குமாரதேவர் மடம் - சாந்தலிங்கரின் சீடர். கன்னட மன்னர். துறவியாகி மகாராஜா

## தலவரலாறு வெளியீட்டு விழா :

சென்னை கோடம்பாக்கம் ஸ்ரீ வடபழநி ஆண்டவர் கோயில் தலவரலாறு நூல் வெளியீட்டு விழா, 7-2-64 வெள்ளிக்கிழமை யன்று, காலை 8 மணியளவில் நிகழ்ந்தது. தலவரலாற்றை எழுதிய "திருக்கோயில்" ஆசிரியர் திரு. N. R. முருகவேள் M.A.,M.O.L. அவர்கள், தலச் சிறப்பும், வரலாறும் குறித்துச் சொற்பொழிவாற்றினர்கள்.

பின்னர் நம் தமிழக முதலமைச்சர் திருமிகு. M. பக்தவத்சலம், B.A.,B.L., அவர்கள், தலவரலாறுகள் பற்றித் திருமுறைகளிலும், திவ்வியப் பிரபந்தங்களிலும் மிகப் பழைய காலத்திலேயே குறிப்பிடப் பட்டுள்ளன என்றும், சேக்கிழார் சுவாமிகள் போன்ற சான்றோர்கள் அவற்றைத் தத்தம் நூல்களில் விளக்கியுள்ளனர் என்றும், வரலாறு இலக்கியம் கவிதை தத்துவம் முதலிய பலதுறைகளுக்கும் பெரிதும் பயன்படக் கூடியன வாகத் தலவரலாறுகள் அமைந்துள்ளன என்றும், அவைகளைப் படித்துப் பயன்பெற வேண்டுவது நம்முடைய கடமை என்றும் குறிப்பிட்டு, ஷ நூலை வெளியிட்டருளினர்கள்.

இவ்விழாவுக்குத் துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார், M.A.B.L., அறங்காவலர்கள் திரு. K. கமலக்கண்ணன், M L.C., திரு. C. ஞானசுந்தர நாயகர், திரு. P. சிவப்பிரகாச நாயகர், திரு. V. சுந்தரமூர்த்தி முதலியார் M.A.B.L, திருமதி P. சாரதா பரமேசுவரன், B.A., நிர்வாக அதிகாரி திரு K. சிதம்பரம். B.A., ஆகிய பெருமக்கள் பலரும் வந்திருந்து விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

துறவு முதலிய 20 நூல்களை இயற்றினர். விருத்தாசலத்தில் பெரிய மடமும் துறையூரில் கிளை மடமும் இருக்கின்றன.

6. **சிதம்பர சுவாமிகள் மடம்-திருப்போரூர்.** குமார தேவரின் சீடர் திருப்போரூர் சன்னிதி முறை இயற்றினவர். கடற்கரையில் சென்னைக் குத்தெற்கே 20 கல்லில் உள்ளது. முருகன் கோயில் பெரியது. மடம் அடுத்து இருக்கிறது. முதல் சுவாமிகளின் சீடர்கள் பரம்பரையாக மடம், கோயில் இரண்டையும் பரிபாலிக்கின்றனர்.

7. **ஞானியார் மடம், திருக்கோவலூர்.** இம்மடத்தில் சிறந்த சமயச் சொற்பொழிவாளராக மிகவும் புகழ்பெற்று விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரியார் என்ற ஐந்தாம் பட்டத்தினர், மடங்கள் கோவலூரிலும் திருப்பாதிரிப்புலியூரிலும் இருக்கின்றன. சைவப் பாடசாலைகள் நடத்துகிறார்கள்.

8. **சாரங்கதேவர் மடம், கும்பகோணம்:** இங்கே வீரசிங்காதன புராணம் இயற்றப்பட்டது. கன்னட நாட்டுப் பெரியார் மடாதிபதியாக இருக்கின்றனர்.

9. **திருவண்ணாமலை:** குகை நமச்சிவாயர்-குரு நமச்சிவாயர் மடம் - இந்த இரண்டு சைவாசாரியர்களும் அரிய தமிழ்ப் பிரபந்தங்களை இயற்றியுள்ளார்கள்.

10. **தொண்டை நாட்டு மடம், சென்னை:** இதற்குச் சேர்ந்த குடும்பங்களில் சிறந்த கவிஞர்கள் தோன்றியிருக்கின்றனர். பசவகம் பனியார் (நாகிசெட்டி) பசவ புராணம்-சித்தாந்த சிகாமணி முதலிய அரிய வீரசைவ புராணங்களை வெளியிட்டிருக்கின்றார்கள். சென்ற நூற்றாண்டில் திருத்தணிகைச் சந்நிதி முறையைக் கந்தப்பையர் இயற்றியுள்ளார். அவர்களுடைய புதல்வர்கள் சரவணப் பெருமானையர், விசாகப் பெருமாள் ஐயர் பல நூல்களை வெளிப்படுத்தினார்கள். மழவை மகாலிங்கையர் அரிய மாணவர் இலக்கணத்தை எழுதி யுபகரித்தார்கள். இவை போன்ற பல நூல்கள் வெளிவந்த தன்றிச் சில புலவர்கள் பேச்சு வளமை நிரம்பப் பெற்றிருந்தனர்.

மேலே சொல்லிய பத்து மடங்களைத்தவிர தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பல மடங்கள் உள்ளன. சிறப்பாகச் சேலம் கோவை மாவட்டங்களில் கன்னடம் பேசும் லிங்காயத்தர்கள் ஆங்காங்கே இருக்கின்றனர். அவர்கள் சிறுசிறு மடங்களைக் கட்டிக் கொண்டு அம்மடங்களின் தலைவர்கள் கீழ் சமய வாழ்க்கை வாழுகிறார்கள். இந்த வகையில் இலிங்காயத்துச் சமய நிலையங்கள் சேவை செய்து வருகின்றன.

## இறைபணியாளர் மாற்றங்கள் :

| பெயர் | இருந்த இடம் | மாற்றப்பட்ட இடம் |
|---|---|---|
| திரு R. கோவிந்தன் | ஸ்ரீ கோட்டைமணியம்மன் கோவில், சேலம். | ஸ்ரீ மகுடேஸ்வரர் & ஸ்ரீ வீரநாராயண பெருமாள் கோயில்கள், கொடுமுடி. |
| திரு. S. நடராஜன் | ஸ்ரீ மகுடேஸ்வரர் & ஸ்ரீ வீரநாராயண பெருமாள் கோயில்கள், கொடுமுடி. | ஸ்ரீ சங்கமேஸ்வரர் கோயில், பவானி. |
| திரு. T. M. காசிலிங்கம் | ஸ்ரீ சங்கமேஸ்வரர் கோயில், பவானி. | ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், செவ்வாய்ப்பேட்டை, சேலம். |

## லட்ச தீப அலங்கார விழா

திருவண்ணாமலை ஸ்ரீ அபீத குசாம்பாள் சமேத ஸ்ரீஅருணாசலேசுவரர் தேவஸ்தானத்தில் முன்பு நடந்ததற்கு இருபது வருஷங்கள் கழித்து இப்பொழுது முதன் முறையாக நிகழும் சோபகிருது௵ மாசிமீ 29-ம் தேதி (12-3-64) வியாழக்கிழமை, மகாசிவராத்திரித் திரு நாளன்று, காலைமுதல் மஹாபிஷேகமும், விசேஷ லட்ச அர்ச்சனையும், மாலை லட்சதீப அலங் கார மஹோற்சவமும் மிகவும் சிறப்புற நடைபெறும்.

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 5-3-64 | ஆலங்குடி | ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் கோயில், ஸ்ரீதக்ஷிணா மூர்த்தி சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும், பஞ்சமுக அர்ச்சனையும். |
| 22-3-64 } 23-3-64 } | வீரசிங்கம் பேட்டை | ஸ்ரீ மாரியம்மன் கோயில் திருவிழா. |
| 27-2-64 | திருப்பாம்புரம். | ஸ்ரீ சேஷ புரீஸ்வர சுவாமி மாசி மக உத்சவம். |
| 15-3-64 16-3-64 | பரதராமி குடியாத்தம் வட்டம் | ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி கோயில், தூய கொடிமர நிறுவன விழா. (துவஜஸ்தம்ப மகாகும்பாபிஷேகம்.) |
| 26-2-64 முதல் } 28-2-64 வரை } | சிதம்பரம் | ஸ்ரீ தில்லை கோவிந்த ராஜ சுவாமி மாசிமக மண்டகப் படிவிழா. |
| 26-2-64 முதல் } 28-2-64 வரை } | பின்னத்தூர் | ஸ்ரீ கோதண்டராம சுவாமி கோயில், மாசிமக விழா. |
| 26-2-64 முதல் } 28-2-64 வரை } | பின்னத்தூர் | ஸ்ரீ கோதண்டராமசுவாமி கோயில், மாசிமக விழா. |
| 18-2-64 முதல் } 8-3-65 வரை } | பவானி | ஸ்ரீ செல்லாண்டியம்மன் தேர்த் திருவிழா. |
| 27-2-64 | ஸ்ரீ முஷ்ணம் | ஸ்ரீ ஸ்ரீ பூவராகசுவாமி கோயில், தீர்த்தவாரித் திருவிழா. |

| | |
|---|---|
| ஸ்ரீ மகாதேவர் தேவஸ்தானம் இரணியல் | சிவராத்திரித் திருவிழா |
| ஸ்ரீ சுப்ரமணியசுவாமி கோயில், திருத்தணிகை | பிரம்மோத்சவம் |
| ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில் திருச்செந்தூர் | மாசித் திருவிழா |
| ஸ்ரீ கூடலழகர் தேவஸ்தானம், மதுரை | மாசி மகம், பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோயில், காஞ்சிபுரம் | பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ கடம்பவனேஸ்வரர் கோயில், கடம்பர் கோயில் | மாசிமக பிரம்ம உத்சவம் |
| ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் கோயில் திருக்கண்ணபுரம் | மாசி பிரம்ம உத்சவம் |

## "பம்பாயில் பங்குனி உத்திரவிழா"


"பம்பாய், ஜோதி மன்றத்தின் ஆதரவில் பங்குனி உத்திர விழா இம்மாதம் 27-3-64 முதல் 29-3-64 வரை மாதுங்கா தென்னிந்திய பஜனை சமாஜத்தில் நடக்க இருக்கிறது. ஷை மூன்று தினங்களிலும் சென்னை அகில இந்திய ரேடியோ புகழ் கதா காலட்சேபமணி திருமதி. V. சாந்தா குழுவினரால் இரவில் கதாகால க்ஷேபங்கள் நடைபெறும். கடைசி தினத்தன்று காலையில் வேல் அபிஷேகம், காவடி ஊர்வலம், ஸ்ரீ ஜோதி முருகனுக்கு லக்ஷார்ச் சனையும் நடைபெறும்."



திருத்தணிகை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில், பெருமக்கள் பலருடன், நம் தமிழக முதலமைச்சர் திருமிகு M. பக்தவத்சலம், B.A.,B.L., அவர்கள் வழிபாடு குறித்துச் செல்லுதல்.



1-1-64 அன்று திருத்தணிகை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு, மாட்சிமை தங்கிய மைசூர் மாநில கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள், வருகை தந்து வழிபடுதல்.



திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி கோயிலுக்கு, நம் தமிழக முதலமைச்சர் திருமிகு M, பக்தவத்சலம், B.A.,B.L., அவர்கள் வருகை தந்து வழிபடுதல்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers. 3/27 Broadway, Madras-1.